Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 20

# ஈழநாடு
வார மலர்

மலர் 11 | சௌமிய | தை 2 | துல்கத்தா 6 | (15-1-70) | வியாழக்கிழமை | இதழ் - 336




# யாழ்ப்பாணத்துக்கு இந்திய விசா அலுவலகம் வரும்?

## கலாசார உறவை வலுப்படுத்த ஆர்வம்

### மேயரின் யோசனைக்கு இணக்கம்

யாழ்ப்பாணத்தில் இந்திய தூதரகம் ஒரு விசா அலுவலகத்தைத் திறப்பதற்கு முயற்சிசெய்யவிருக்கிறது. விசா அலுவலகம் ஒன்றை இங்கு திறப்பதில் இந்திய அரசுக்கு ஆட்சேபம் எதுவுமில்லையென்றும் இலங்கை அரசாங்கம் அனுமதியளித்தால் இங்கு விசா அலுவலகம் ஒன்றை திறப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் இந்தியக் குடியரசுத் தலைவருடன் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு விசாஅலுவலகம் திறக்கப்படவேண்டிய அவசியம் பற்றி அந்த அதிகாரிகளுடன் யாழ்ப்பாண நகர மேயர் திரு. சி.நாகராசா பேசியபோதுதான் மேற்கண்டவாறு அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்குமிருந்து வரும் நீண்டகால கலாசாரத் தொடர்பு பற்றியும் இங்கிருந்து இந்தியாவக்குச் செல்ல விரும்புவோர் விசாபெறுவதற்காக கொழும்புக்குச் செல்லவேண்டியதால் ஏற்படும் கஷ்டநஷ்டங்களையும் மேயர் திரு. நாகராஜா அந்த அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறினர்.

கலாசாரத் தொடர்புகளை வலுப்படுத்தவேண்டிய அவசியத்தையும் நகரமேயர் அந்த அதிகாரிகளிடம் எடுத்துக் கூறினர்.

யாழ்ப்பாண நூல் நிலையத்துக்கும் மற்றும் பொது ஸ்தாபனங்களுக்கும் நூல்கள் வழங்கவேண்டுமென்றும் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் புத்தகங்கள் வழங்கவேண்டுமென்றும் மேயர்கூறிய யோசனையையும் இந்திய அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர்.

## வால்முட்டை

எழுதுமட்டுவாள், செவ்
மறவன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ளவீடு ஒன்றில் ஒரு கோழி வால் முட்டையிட்டுள்ளது. றப்பர் போன்ற மெதுமையான இந்த அதிசய முட்டை 6 அங்குல நீளமுடைய வாலைக் கொண்டுள்ளது.

திருமதி க. தவமணி என்பவரது வீட்டிலுள்ள இம்முட்டையை பெருந்திரளான மக்கள் சென்று பார்வையிடுகின்றனர்.

## திருமலையில் கள்வர் அதிகரிப்பு; விழிப்பாக இருங்கள்

### பொலிஸ் இன்ஸ்பெக்டர் அறிவிப்பு

திருகோணமலை, செவ்வாய்

இரவு நேரங்களில் நடமாடிவந்த கள்வர்கள் இப்பகுதியில் பகல் வேளைகளில் நடமாடிவருகிறார்கள். இது விடயத்தில் பொது மக்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என திருகோணமலைப் பொலிஸ் தலைமை அதிகாரி திரு. ரி. பேரின்பநாயகம் பொது மக்களுக்கு பகிரங்க அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

இரவில் ரோந்து நடவடிக்கைகளில் ஏராளமான பொலிசார் ஈடுபட்டிள்ளதால் கள்வர்கள் பகலில் நடமாடுவதாகவும், வீட்டை விட்டு வெளியே சென்றதும் தெருக்கதவைப் பூட்டிவிடும்படியும் அப்படிச் செல்லும்போது' வாடகைக்காரை வீட்டுக்கு அழைத்துச் செல்லவேண்டாமென்றும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரி பொது மக்களுக்கு விடுத்துள்ள விசேஷ அறிக்கையில்மேலும் தெரிவித்துள்ளதாவது:-

0 வீட்டில் உள்ள ஒவ்வொரு பொருட்களுக்கும் அடையாள எண்களை இட்டு வையுங்கள். அவை களவு போய்விட்டால், பொலிஸார் களவாடிய பொருட்களைக் கண்டுபிடிக்கும் பட்சத்தில் அதை அத்தாட்சிப்படுத்துவதற்கு அந்த எண்கள் உதவும்

0 நீங்கள் வசிக்கும் சுற்றுடலில் சந்தேகப் பேர்வழி யாரும் நடமாடினுல் அது பற்றி உடனடியாகபொலிஸ் நிலையத்துக்கு அறிவியுங்கள்.

0 உங்கள் வீட்டு வேலையாளிடம் சந்தேகம் ஏற்பட்டால் அவர்களைபொலிஸ் நிலயத்திற்குக் கொண்டு வாருங்கள்.

0 சில்லறை வியாபாரிகள் வீட்டுக்குவந்தால் அவர்களை அதிகநேரம் வைத்திராதீர்கள்.

குற்றங்களை தடைசெய்வதற்கு பொலிசார் விழிப்புடன் இருப்பதாகவும், பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'நான்உங்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்'

### — ஜனதிபதி கிரி

கோட்டை, புதன்

'காந்திஜியின் நூறுவதுபிறந்ததினத்தை உலகமே ஒரு பெருவிழாவாகக் கொண்டாடி சத்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக விளங்கும் இந்த் ஆண்டில் எனது இலங்கைவிஜயம்சம்பவித்ததையிட்டு நான்பெருமகிழ்ச்சியடைகிறேன் பல மொழிகளில் காந்திஜியின் கருத்துக்களை மொழிபெயர்த்து நூலாக்கிய உங்களின் சேவையை நான் மெச்சுகிறேன். இந்தியன் என்ற காரணத்தால் நான் இதற்கு உங்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்'.

மேற்கண்டவாறு இந்திய ஜனதிபதி திரு. வி. வி. கிரி இம்மாதம் 10-ந் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற காந்தி நூற்ருண்டு விழாக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் காந்திநூற்ருண்டுவிழாக் குழுவின் சேவைகள்பற்றிக் கேள்விப்பட்டு பெருமகிழ்ச்சியடைந்தேன். காந்திஜி வாழ்ந்து காட்டியருளி அவர்தன்வாழ்வின் மூச்சாகவே கொண்டு அஹிம்சை, சத்தியம் முதலிய தர்மங்கள் உலகெங்குமுள்ள மக்களால் போற்றப்படுபவை. மகாத்மாவின் இக்கருத்துக்கள் மக்கள் வரலாற்றின் இருண்டகாலப் பகுதிகளில் மறைக்கப்படலாம். ஆனல் எப்பொழுதும் அவை மக்கள் வாழ்வில் திரும்பவும் வந்துகொண்டேயிருக்கும் எனக்கூறினர்.

ஜனதிபதி தனதுஉரையில் காந்திஜியின் கருத்துக்களை விரிவாக விளக்கிக்கூறி இன்றைய சூழ்நிலையில் அவை கடைப்பிடிக்கப்பட வேண்டிய அவசியத்தையும், தேவையையும் வற்புறுத்திக் கூறியதோடு இலங்கைக் காந்தி நூற்ருண்டுவிழாக் குழுவை அதன் சேவைத் திறனைக் குறித்துப் பாராட்டினர். சமூக அபிவிருத்திக்காக ஒழுங்கு செய்யப்பட்ட மாக்சசே விருது' இலங்கையர் ஒருவருக்கு அதாவது லங்கா சர்வோதய சிரமதான இயக்கத் தலைவருக்குக் கிடைக்கலாம் எனவும் ஜனதிபதி தமதுரையில் குறிப்பிட்டார்.

## ஓருநாள் சம்பளத்தை வழங்க யாழ். அரசாங்க ஊழியர் முடிவு

### வெள்ள நிவாரணக்குழு தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

'இலங்கையிலே வெள்ளத்தில் பலர் உயிரிழந்துள்ளனர். அவர்விஷயமாக நாம் எதுவும் செய்யமுடியாது. ஆனல் பல்லாயிரக்கணக்கானவர் வீடு, வாசல் எல்லாம் இழந்து தவிக்கிருர்கள். அவர்களது கண்ணீரைத் துடைக்க நம்மால் ஆனதை எல்லாம் செய்யவேண்டும். இதில் சாதி, சமய, இன வேற்றுமை எதுவும் இருக்க முடியாது. கஷ்டப்பட்டு தவிப்பவர் யாருக்கும் கூடிய உதவி செய்வதே நமது கடமை' என்றிவ்வாறு நேற்றுக்காலை யாழ்ப்பாணக் கச்சேரியில் அரசாங்க அதிபர் பீட்டர்ஸின் தலைமையில் நடைபெற்ற வெள்ளக் கஷ்டநிவாரணக் கூட்டத்தில் முதலியார் முத்துத்தம்பி அறிவுறுத்தினர். அரசாங்க அதிபர் முதலில் பேசுகையில், கிழக்கு தென்இலங்கையில் சமீபவெள்ளத்தால் ஏராளமான மக்கள் அவதிப்படுவதாயும், அவர்களுக்கு நாம்கூடிய உதவிசெய்து நமது அன்பைக்காட்ட இது நல்ல சமயமென்றும் கூறினர்.

அரசாங்க அதிபரின் அழைப்புக்கிணங்க பல பிரமுகர்கள் வந்திருந்தனர்? அரசாங்க ஊழியர் ஒவ்வொருவரும் ஒருநாள் சம்பளத்தைக் கொடுப்பதென்று முடிவுசெய்துள்ளதாக திரு சபாரத்தினம்தெரிவித்தார். பின்னர் பலர் பேசியபின், வெள்ளக் கஷ்ட நிவாரணக் கமிட்டிக்கு கீழ்க்கண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் பலரையும் சேர்த்துக்கொள்ளவும் கமிட்டிக்குஅதிரம் வழங்கப்பட்டது.

வெள்ளநிவாரண கமிட்டி உறுப்பினர்கள்: தலைவர் அரசாங்க அதிபர் திரு எப் சி பீற்றர்ஸ், உபதலைவர்: திரு மேலதிக அரசாங்க அதிபர் திரு ஜே எம் சபாரத்தினம், இணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள்: பி எஸ் ஜோசப், என் சிவசிதம்பரம், தனதிகாரி: திரு டி செல்லக்கண்டு. கமிட்டி உறுப்பினர்கள்: திருவாளர்கள் எஸ் தணிகாசலம், ஏ எஸ் சின்

[16ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திரா அரசைக் கவிழ்க்க 'சிண்டிகேட்' முயற்சி

இந்திராவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதே இனித் தமது வேலை என்று 'சின்டிகேட்' காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் துணைப்பிரதமருமான திரு. மொரார்ஜிதேசாய் வெளிவெளியாகவே தெரிவித்திருக்கிறார். பம்பாயிலும் ஆமதாபாத்திலும் 'இன்டிக்கேட்' 'சின்டிகேட்' காங்கிரஸ் மகாநாடுகள் நடந்துமுடிந்துவிட்டன. இரண்டு மகாநாடுகளும் சோஷலிஸத் தீர்மானங்களை நிறைவேற்றின. இருதரப்பினரும் ஒருவர்மீது ஒருவர் வசைபாடினர்.

இந்த மகாநாடுகளின் பின்னர்தான் திரு. மொரார்ஜி தேசாய் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் இந்திராகாந்தி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதுதான் தமதுமுதல் வேலையென்றும் இதற்காக இடதுசாரிகளுடன் சேர்ந்து செயல்படத் தயாராகஇருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

திருமதிஇந்திராகாந்தியை பதவிஆசைபிடித்தவர்என்று 'சின்டிகேட்' குழுவினர் வர்ணிக்கின்றனர். சின்டிகேட் குழுவில் சேர்ந்துள்ளபழைய காங்கிரஸ்காரரும் சோஷலிஸ்ட்டுமான ஆச்சார்யகிருபளானிகூட இந்திரா குழுவினரை பதவி ஆசைபிடித்தவர்கள் என்று கூறுகிறார். சின்டிகேட் குழுவினருக்கு பதவி ஆசை இல்லையென்றால் இந்திரா அரசைக் கவிழ்க்க ஏன் முயற்சிசெய்ய வேண்டும்?

இந்தியா விடுதலையடைந்ததும் காந்திஜி கூறியது போல் காங்கிரசைக் கலைத்திருக்கவேண்டும். அப்படிச் செய்யத் தவறியதன் விளைவை இன்று காங்கிரஸ் அனுபவித்து வருகின்றது. காங்கிரஸ் தேர்தல் சின்னத்துக்கும் காங்கிரசின் சொத்துக்களுக்கும் காங்கிரஸ் காரியாலயத்துக்கும்சின்டிகேட்டுகளுக்கும் இன்டிகேட்டுகளுக்குமிடையில் தகராறுமுற்றி வருகிறது. நீதிமன்றம்வரை இப்பிரச்னை சென்றுள்ளது.

எஸ். எம். ஜி.

ராஜ்யங்கள் பலவற்றிலும் காங்கிரஸ் பிளவுபட்டு நிலைமை குழப்பமாயிருக்கிறது. தமிழ்நாடுமுதல்அமைச்சர்கூறுவதுபோல காங்கிரசை இருவரும் கலைத்துவிட்டு புதியகட்சிகளை ஆரம்பித்தால் அரும்பெரும்தியாகங்கள் செய்து வளர்க்கப்பட்ட காங்கிரஸின் பெயராவது காப்பாற்றப்படும்; ஆனால் இது நடைபெறக் கூடியமாதிரியில்லை.

சுதந்திரக்கட்சியின் தலைவரும் திரு. மொரார்ஜிதேசாயும் இரகசியமாகச் சந்தித்து நீண்டநேரம் ஆலோசனை நடத்தியிருக்கின்றனர். என்ன பேசினார்களென்பதை இருவரும் வெளியிடவில்லை. இந்திரா அரசை எப்படிக் கவிழ்ப்பது, எப்படி இந்திராவுக்குத் தொல்லைகொடுக்கலாமென்பது பற்றித்தான் ஆலோசனை நடைபெற்றிருக்கும் என்று ஊகிப்பதில் தவறிருக்க முடியாது. சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி தனது மகாநாட்டில் இந்திரா அரசைக் கவிழ்க்க ஒத்துழைப்பதென்று தீர்மானித்திருக்கிறது. இந்தக் கட்சியின் மகாநாட்டிலும் செருப்பு வீச்சு, அடிதடி, கல்வீச்சு நடந்துள்ளது வேறு விஷயம்.

பதவி ஆசை இல்லாதவர்கள் பழைய காங்கிரஸ்காரர்களான சின்டிகேட் குழுவினரானால், அவர்கள் இந்திரா அரசைக் கவிழ்ப்பதிலும் தேர்தலில் போட்டியிடுவதிலும் தங்கள் சக்தியைச் செலவிடாமல், ஒதுங்கியிருந்து காங்கிரஸ் (இந்திரா அரசு) ஆட்சி நல்லாட்சியாக நடைபெறத் தகுந்த ஆலோசனை கூறுவதுதான் சரியான செயலாகும். இதை விடுத்து இந்திரா அரசைக் கவிழ்ப்பதிலேயே சின்டிகேட் காங்கிரஸார் ஈடுபட்டால் அது காங்கிரஸின் தற்கொலை முயற்சியாகவே முடியும்.

° ° °

# பட்டினி போட்டு சுதந்திர வேட்கையை கொன்ற நைஜீரியா

## உலக மேடை

### பியாப்ரா முடிந்தது

நைஜீரியாவிலிருந்து பிரிந்து சென்ற பியாப்ரா கடைசியில் நைஜீரிய சமஷ்டிப் படைகளிடம் சரணடைய நேர்ந்துவிட்டது. இருபது லட்சம் மக்களுக்குமேல் உயிர்ப்பலி கொடுத்தும் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல்போய்விட்டதுபியாப்ரா தலைவர் கேணல் ஒஜுக்கு எங்கே போனார் என்று தெரியவில்லை. மீண்டும் பியாப்ரா மக்கள் போராட்டத்துக்குத் தயாராவார்களாமுவன்பது சொல்லக்கூடியதாக இல்லை. மாண்ட இருபது லட்சம் மக்களில் குழந்தைகள்தான் அதிகமாம். பியாப்ராவைப் பணியவைப்பதற்காக நைஜீரிய சமஷ்டி அரசாங்கம பியாப்ராவுககு எந்தவித உணவும் போகாமல் தடுத்தது. பியாப்ராவில் எலிகள்கூட சந்தையில் பெரிய தொகைக்கு விற்பனை செய்யப்பட்டன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ரோமன் கத்தோலிக்க திருச்சபையும் தங்களால் இயன்ற அளவில் உதவி செய்தன. ஆனாலும் பட்டினிச் சாவைத் தடுக்க முடியவில்லை. பியாப்ரா பிரச்னைக்கு ஒரு சுமுகமான முடிவு காண்பதற்கு எதியோப்பிய மன்னர் தமது நாட்டில் இருதரப்பினரையும் சந்தித்துப்பேச முயற்சி செய்தார். இந்த முயற்சிக்கு நைஜீரிய சமஷ்டி அரசாங்கம் ஒத்துழைப்பு அளிக்கவில்லை. படை பலம் மூலம் பியாப்ராவைப் பணியவைப்பதில் நைஜீரிய சமஷ்டி அரசாங்கம் வெற்றிபெற்றுவிட்டது.

ஆனாலும் பியாப்ரா மக்களின் சுதந்திர தாகத்தைப் பட்டினிபோட்டு அடக்கி அடிபணியவைத்தது, இந்த யுகத்தில் நடைபெற்ற மறக்க முடியாத சம்பவம். நாகரிக உலகமா இது? இந்தச் சம்பவத்தைப்பற்றி உலக மன்றமான ஐ. நா.வும் பெருமையடைய முடியாது.

**வார சாரம் — அரசியல் நிருபர்**

# நல்லுறவுப் பேச்சும் துவேஷக் சூழலும்

இந்தியக் குடியரசுத்தலைவர் திரு. வி. வி. கிரி தமது மனைவியாருடன் இலங்கைக்கு வந்து ஐந்து தினங்கள் தங்கியிருந்து இலங்கை மக்களின் அன்பைப்பெற்று சென்றிருக்கிறார். வெள்ள நிவாரணத்துக்கு இந்திய அரசாங்கம் ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறது. திரு. கிரி தாயகம் திரும்புவதற்குமுன்னர் இந்தியாவிலேயே உருவாக்கப்படும் இரண்டு ஆசன பயிற்சிவிமானம் ஒன்றை இலங்கை இளைஞர்களுக்கென இலங்கை அரசாங்கத்திடம் வழங்கிவிட்டுச் சென்றிருக்கிறார். இலங்கைக்கு வருகை தந்ததன் மூலம் இருநாடுகளின் நட்புறவு மேலும் வலுப்பெற உதவியுள்ளதென்றும் பலதுறைகளிலும் இருநாடுகளும் ஒத்துழைத்து முன்னேற முடியுமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். இருநாடுகளின் ஒத்துழைப்பிலும் நல்லுறவிலும் இருநாட்டுத் தலைவர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கிரி தம்பதிகள் யாழ்ப்பாணத்திலும் சிலமணிநேரம் தங்கியிருந்தனர். வெளிநாட்டுப் பிரமுகர்கள் வடபகுதிக்கு வராமல் தடுக்கப்பட்ட காலம் மறைந்துவருகிறதென்பதற்கு திருமதி விஜயலட்சுமி பண்டிட், திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண், கிரிதம்பதிகளின் வருகை சான்று.

இலங்கை-இந்திய நல்லுறவு பற்றியும் இருநாடுகளின் ஒத்துழைப்புபற்றியும் பேசப்பட்டுவரும் சமயத்தில் ஆட்சி மன்றத்தில் ஒரு குரல் வேறுவிதமாக ஒலித்தது. அந்தக்குரல் இந்தியாவையும், இந்தியர்களையும், இந்திய வம்சாவழியினரையும் தமிழர்களையும் பற்றிப் பூச்சாண்டி காட்டிப் பேசுவது ஆச்சரியமல்ல. அதற்கு மாறாக நல்லமுறையில் பேசினால்தான் ஆச்சரியம். அந்தக்குரல்யாருடையதென்று சொல்லாமலே பலருக்கும் விளங்கும். என்றாலும் சொல்லி விடுகிறேன். தம்பதெனியாப் பிரதிநிதியும் சிங்களமகாஜனக்கட்சியின் தலைவருமான திரு. ஆர். ஜி. சேனநாயகாவின் குரல்தான் அது.

தேயிலைப் பிரசாரசபை மசோதாமீது ஆட்சிமன்றத்தில் விவாதம் நடந்தது. அந்த விவாதத்தில் [illegible]யில்தான் ஆர். ஜி. சேனநாயக்கா இந்தியா பற்றியும் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பற்றியும் எச்சரிக்கை விடுத்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு கம்பனியாக மாறி தோட்டக் காணிகளை வாங்குவதையும் ஆர். ஜி. கண்டித்தார். தோட்டத் தொழிலாளர்களை வழமைபோல 'கள்ளத்தோணிகள்' என்று ஆர். ஜி. குறிப்பிட்டபோது திரு. தொண்டமான் விஜயனைப் பின்பற்றியே 'கள்ளத்தோணிகள்' இங்கு வந்தார்கள் என்று சூடாகப் பதிலளித்தார்.

எத்தனை தடவை என்னதான் சொன்னாலும் ஆர். ஜியின் காதில் அது எங்கே விழப்போகிறது? வகுப்புவாதத்தை ஏன் கிளப்புகிறீர்? என்றும்ஆர்.ஜியை பார்த்து திரு. தொண்டமான் கேட்டிருக்கிறார். ஆர். ஜி. சும்மாவா இருக்கப்போகிறார்.

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல்குறித்து இந்திய குடியரசுத்தலைவர் திருப்திதெரிவித்துத் தாயகம் திரும்பிய மறுநாள் இலங்கை-இந்திய ஒப்பந்தம் [illegible] ஸ்தம்பித்துள்ளதென்று 'சன்' என்ற ஆங்கிலத தினசரி கொட்டை எழுத்தில் முதல்பக்கச்செய்தி வெளியிட்டிருக்கிறது. இலங்கையிலுள்ள நாடற்றவர்களுக்கு ஒப்பந்தப்படி இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதில் தாமதம் செய்யப்படுவதாகவும் இதனால்இந்தியப்பிரஜாவுரிமை வழங்குவதில் இந்திய தூதரகமும் மந்தகதியில் நடந்துகொள்வதாகவும் அந்தச்செய்தி கூறுகிறது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படுவதானால் அதற்கு இலங்கைதான் பொறுப்பேற்கநேரிடும். ஒப்பந்தம் செய்தால் மட்டும் போதாது, அதைச் செயல்படுத்தவேண்டும்.

### திருமதி சிவா ஒபயசேகரா

ஆட்சிமன்றக்கூட்டத்துக்குத் தலைமை வகித்து நடத்தும் வாய்ப்பு சில தினங்களுக்கு முன்னர் மீரிகமைப் பிரதிநிதியான திருமதி சிவா ஒபயசேகராவுக்குக் கிடைத்தது. உலகிலேயே ஒரு பெண்மணியை முதலில் பிரதமராக்கிய பெருமைகொண்ட இலங்கை ஆட்சிமன்றத்தின்கூட்ட நிகழ்ச்சிகளுக்குத்தலைமை தாங்கும் பொறுப்பை சில மணிநேரத்துக்காவது ஒரு பெண்மணியிடம் ஒப்படைத்துப் பெருமைகொண்டிருக்கிறது. அடுத்த தேர்தலின் பின் ஆட்சிமன்ற சபாநாயகர் பதவிக்கு அல்லது உபசபாநாயகர் பதவிக்கு ஒரு பெண்மணியைத் தெரிவு செய்தால், பெண்மைக்கு முதலிடம் கொடுக்கும் பெருமையை இலங்கை நிரந்தரமாக்கிக்கொள்ளும். சபை நிகழ்ச்சிகளும் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெறும்.

திருமதி சிவகாமி ஒபயசேகரா படிப்பும்பண்புமுள்ளவர். நேர்மையானவர். தமிழர்களும்இந்நாட்டு மக்களேயென்றும் அவர்களும் இதரமக்களைப் போல் உரிமைகளுடன்வாழ்வதற்கு ஒருவழி காணவேண்டுமென்றும் ஆட்சிமன்றத்திலேயே பகிரங்கமாகச் சொன்னவர் திருமதி சிவா ஒபயசேகரா என்பதை மறந்துவிடமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டை விளக்கும் பண்டையவிழா பட்டிப்பொங்கல்

தமிழன் தன்னுடைய வேளாண்மைக்கு உறுதுணையாக நின்ற எருதுகளுக்கு நன்றிக்கடன் செலுத்துமுகமாக பொங்கலிடுவதுதான் பட்டிப்பொங்கல்.

காலை தொடங்கி மாலை வரை வெய்யில் என்றும் பாராமல் மழையென்றும் பாராமல் தனது எஜமானனின் கட்டளையை ஏற்று வயலை உழுவதற்கு பயனளிக்கும் காளைகளின் பணி மகத்தானது. ஆண்டாண்டு காலமாக வயலை உழுவதற்கு பயன்பட்டு வந்தன இக்காளைகள். இப்பொழுது 'ட்ருக்ரரி'ன் உதவியை மனிதன் நாடினாலும்காளைகளின் உதவியை நன்றி மறக்காமல் இன்று 'பட்டிப்பொங்கல்' விழா எடுக்கிறான். இது தமிழனின் நன்றி உணர்வை வெளிப்படுத்தும் விழா.

நாளெல்லாம் உழுது பயிர் செழித்து விளைய தனது எருவைப் பசளையாகக் கொடுத்து நன்றாகப் பயிர்கள் முற்றி விளைந்தபின் கதிர் நெற்களை எஜமானனுக்கு அளித்துவெறும் வைக்கோலைத் தின்னும் எருதுகளின் நன்றியை நாம் மறககலாகாது.

பசு என்ன செய்கிறது! தனது இரத்தத்தையே பசும்பாலாக்கிக் கொடுக்கிறது. சகல சத்துக்களும் நிறைந்த பசுப்பாலை நாம் அருந்துகிறோம். இக்கால்நடைகளின் உதவிக்கு நன்றி செலுத்துவதை தமிழன் தலையாய பண்பாகக் கொண்டு வந்துள்ளான்.

பட்டிப் பொங்கலன்று பசுக்களையும் காளைகளையும் பட்டிபட்டியாக அடைத்து வளர்த்து, பட்டிப்பொங்கலன்று அவைகளைக் குளிப்பாட்டி அழகாக அலங்கரித்து விளையாட்டுப்போட்டி நடத்துவார்கள். இதற்கென்றே விளையாட்டுக்களை பழககி வைத்திருப்பார்கள். அவைகளின் தீரமான விளையாட்டுக்களைப் பார்த்து மகிழ்ச்சியடைவார்கள்.

சில இடங்களில் பட்டிப் பொங்கலன்று கால்நடைகளை அலங்கரித்து அவைகள் கட்டிவைக்கப் பட்டிருக்கும் தொழுவத்தையும் அலங்கரித்து கோலமிட்டு வைப்பார்கள்.

புதிதாக விளைந்த நெல்லிலிருந்து பச்சையரிசி கொண்டு பொங்கி அவைகளுக்கு முன் படைப்பார்கள். வடைகளை மாலையாகக் கோர்த்துக் கழுத்திலே அணிவித்து நெற்றியிலும், கொம்பிலும் விபூதி, சந்தனம், குங்குமம் இவற்றைப் பூசி, மலர்மாலை அணிவித்து பூசை செய்தபின் படைத்த பொங்கலை அவைகள் உண்ணும்படி வைப்பார்கள். அதற்குப்பின் படைத்த மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் போன்ற பழவகைகளைக்கொடுத்து அவைகளும் உண்டபின்தாம்பூலம் (வெற்றிலை பாக்கு) கொடுப்பார்கள் அவைகளையும் உண்டபின் கழுத்திலே அணியப்பட்டிருந்த வடைமாலை, பூமாலைகளையும் உண்ணக் கொடுப்பார்கள்.

பண்டைக் காலத்திலே தமிழ்நாட்டிலே ஒரு பெண்பிள்ளை பிறந்துவிட்டால் அவளோடு ஒரு காளையையும் வளர்ப்பார்கள். அந்தக் காளையை யார் அடக்குகிறானோ அவனே அவளைத் திருமணம் செய்துகொள்ள முடியும். இது பண்டைக் கால மக்களின் பழக்கமாயிருந்துவந்தது. இப்போது இவை அருகி ஒழிந்துவிட்டது.

இப்படியாக அன்பு பாராட்டவேண்டிய கால்நடைகள் ஒரு சில இடங்களிலே இம்சிக்கப்படுவது துன்பகரமானது. இவைகளை மனிதன் பேணிக்காப்பதால் பெரும் நன்மை பெறமுடியும். — விமலா

## பொங்கல் சிறுகதை

# 'அது'வுக்கு பட்டிப்பொங்கல்

தைப்பொங்கலுக்கு மறுநாள்— பட்டிப் பொங்கல்

வழக்கம்போல விடிவெள்ளியோடே நித்திரை நீங்கிய மாணிக்கர், மனைவி கொண்டுவந்து கொடுத்த சூடான வெறுங்கோப்பியை பனிக்குளிர் நீங்கக் குடித்துவிட்டு, வீட்டுத்திண்ணையில் குந்தியவாறு வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். பாக்கை மென்றபடியே வெற்றிலையில் நரம்புகளைக் கிள்ளிவிட்டுத் தட்டத்தில் சுண்ணாம்பைத் தேடினார். சுண்ணாம்பு இல்லை.

'எங்கேயப்பா சுண்ணாம்புசி, இந்த வீட்டிலை...' அழன்று விழுந்தார் மனைவிமீது.

'என்ரை கொட்டப்பெட்டிக்குள்ளை பாருங்கோ' என்று சொல்லிக்கொண்டே வந்த 'அம்மா' தானே அதைத் தேடியெடுத்து சுண்ணாம்பைப் பரிமாறிவிட்டு அடுக்களைப்பக்கம் போய்விட்டாள். வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி. சுருட்டிக் கொடுப்புக்குள் சப்பிக்கொண்டே அவர் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்து விட்டார் அவருடைய கண்கள் எதிரேயிருந்த மாட்டுக்கொட்டிலில் லயித்திருந்தன. தியானம் எல்லாம் வேறு எங்கேயோ போய்விட்டது.

வவுனியாவிலிருந்து மன்னார் போகும் தெருவில் பதினோராம் கட்டையடியில் இருக்கிறது மங்களபுரம் என்ற பழைய கிராமம். அதில் சுமார் அறுபது குடிகளேயிருந்தன. பெரும்பான்மையானவருக்கு விவசாயமே பிழைப்பு அவர்களுக்கெல்லாம் 'நாட்டாண்மை'யாக விளங்குபவர் மாணிக்கர். முன்பு அக்கிராமத்தின் விதானையாராகவும் கடமையாற்றியவர். இப்பொழுது அவருடைய மூத்தமகன் அம்பலவாணனே அவருடைய காலி இடத்தில் கிராமசேவையாளராக இருக்கிறான்.

மாணிக்கருக்கு பிதுரார்ஜித முதுசொமாக முப்பது பரப்பு நெற்காணியும், மனைவிவழிச் சீதனமாக ஐம்பது பரப்பு நெற்காணியுமிருக்கின்றன. நல்ல விளைச்சல்தரும் நிலங்கள். மாணிக்கரின் வாழ்நாளில் முக்கால்வாசியும் அந்த வயல்களுக்குள்ளேயே கழிந்தன. இரண்டு போகமும் விளையும் வயல்களாதலால் வேறு ஜோலிகளுக்கு அவருக்கு நேரம் கிடைப்பதரிது.

### வி. என். பி.

சமீபகாலமாக மாணிக்கருடைய மனதை ஒரு விஷயம் அரித்துத்தின்றுகொண்டிருந்தது. அவர் பழங்கால வர்க்கத்தவர். வைதீக சம்பிரதாயங்களிலும் நெறிமுறைகளிலும் ஊறிப் போனவர். அவருடைய கொட்டைப்பாக்குக் குடுமியும் குண்டு கடுக்கன்களுமே அதற்குஅத்தாட்சி. தோளில் சால்வை தவிர வேறொன்றும் ஏறமாட்டாது. தமது முன்னோர்காட்டிக்கொடுத்த வழிதுறைகளிலிருந்து இம்மியேனும் விலகிப்போவது அவருக்குப்பிடிக்காது. இன்றுவரை அவர் பழைய கொள்கைகளையும் நடைமுறைகளையும் பயபக்தியோடு பின்பற்றியே வந்தார். ஆனால் இனிமேல் அவற்றை மாற்றியமைக்க வேண்டியகாலம் வந்துவிட்டதைநினைக்கும்போது அவருக்கு நெஞ்சுக்குள்ளே என்னவோ செய்தது.

மாணிக்கர் ஒரு பெரிய பெருமூச்சைத்தள்ளிவிட்டுப் போன வருடம் இந்த நாட் களைப்பற்றி யோசிக்கலானார்.

'எட சய்க்! என்ன அருமையான நாம்பன்கள்! பார்த்தால் புலிக்குட்டிகள் மாதிரி! இந்நேரமெல்லாம் வாலையும் குளத்திலை குளிப்பாட்டிப்போட்டுக்கொண்டு வந்திட்டன். ஈரம் துடைச்சுப்போட்டு சாம்பிராணிப் புகைகாட்டி, நெற்றியிலை விபூதி, சந்தனம், குங்குமம் எல்லாம் போட்டு, கொம்பு முடியும் கழுத்து சங்கிலியுமாய் அவை உந்தக் கொட்டில்லை நிண்ட அழகும் ஒரு அழகுதான். ம்ம்! அந்தக் காலம் இனி வராது. நான் கடைசிவரை குடுத்திருக்க மாட்டன். இவனல்லோ ஒற்றைக் காலிலை பிடிவாதமாய் நிண்டது எப்பிடியோ அவன் தானே இனி வீட்டுக்கு மூத்தவன். எஸ். எஸ். சி. இங்கிலிசு படிச்சிருக்கிறான். என்ரை இடத்துக்கு விதானையாயும் வந்திட்டான். அவன்ரை சொல்லை இனி எப்படி தட்டலாம்? அவரவர் இட்டத்துக்கு இனிமேல் விட்டிட வேணும். ம்! ஈரணை நாம்பன்களையும் இரண்டாயிரத்து நாநூறுக்கு வித்துத்தான் 'அதை' வாங்கி வச்சிருக்கிறான். நடக்கட்டும் பாப்பம், பாக்கப்போனால் ஊரெங்கும் அதைத்தானே வாங்கி வைச்சிருக்கிறான்கள். காலம் மாறிக்கொண்டு போகுது. நாங்களும் மாறத்தான் வேணுமாக்கும்.

சிந்தனை கலைந்து சட்டென்று எழும்பினார் மாணிக்கர். ''நான் போய் குளிச்சிட்டு வாறன்' என்று அடுக்களையிடம் கூறிவிட்டு குளத்தடிக்கு ஓடினார். இப்பொழுது அவருடைய முகத்தில் முந்திய கலவரக்குறி இல்லை. ஒருவித சாந்தியும் அமைதியும் காணப்பட்டது. நீரில் மூழ்கி அனுட்டானங்களை முடித்துக்கொண்டு வீட்

[13ம் பக்கம் பார்க்க]

# எதிலும் வல்ல இலக்கணர்

—மேலைப்புலோலி மு. சு. கதிர்காமத்தம்பி—

ஆயிரம் இரண்டு ஆண்டுகள் முன்பு
அருந்தமிழ் அறநெறிப் பெரும்புலவன்
பாயிரம் கண்டு பால் மூன்றாக்கி
பார்புகழ்ப் பொதுமறை படைத்தானே!
தாயிரந் தேற்க தண்டமிழ்வாழ
தரணியின் மொழியெலாம் தாங்கிவர
வாயிருந் தேத்த வண்டமிழ்நாடு
வானுயர் புகழ்கொள வாழ்ந்தானே!

தமிழ்தரும் முதலெழுத் தகரமதே
தமிழ்மறை முதலெழுத் ததுவாகும்
தமிழ்தனின் நிறையெழுத் தி'ன்'னமே
தமிழ்த்தேன் நிறைவதும் 'ன்'னலே!
அமிழ்தெனும் தமிழ்தனின் முதல்நிறையால்
அமைவதும் அரும்பெரும் தமிழ்மறையே!
இமிழ்திரை நிறைகடல் சூழுலகில்
இமையவர் எனஉயர் வள்ளுவரே!

எழுசீர் ஈரடிக் குறளாலே
எழுதா மறைப்பொரு ளெழுதிவைத்தார்.
தொழுசீர் கொண்டநல் நூற்பொருளை
தொகுத்து வகுத்துத் தொடையாக்கிக்
கெழுசீர்க் கலைமகள் களிகொள்ள
கேட்பவர் கற்பவர் விழிகொள்ள
முழுச்சீர் கொண்ட பொற்குறளாலே
மூவுல கேத்திடும் முறைபெற்றார்!

ஆயிரத் தொடுநல் முந்நூறு
அதனுடன் சேர்ந்தொரு முப்பதுபா
மாயிரு ஞாலம் மகிழவென்று
மறையா மனஞ்சேர் முத்தாக்கி
தாயிரு தாமரைத் தட்டேந்தி
தண்டமிழ் தானென முருகேற்ற
ஆயிரமாயிர மாண்டாண்டா
அதுதமிழ் அதுசுவை எனத்தந்தார்!

அன்னை தந்தை யாரறிவார்
ஆதியும் பகவனும் அவர்தெய்வம்
பின்னே மொழிபவர் பலகதைகள்
பேதமும் வாதமும் நிறைந்தனவாம்.
தன்னை நினையாத் தெய்வமவர்
தனியெனக் கொள்ளும் தன்மையவர்
என்னை அவர்கதை பேசிப்பயன்
எதிலும் வல்ல இலக்கணனர்.

வாசுகி என்றொரு மனை வாய்த்தாள்
வாணுதற் கவளொரு திலகமென
பேசுகி லவட்கிணைப் பெண்யாரே
பெருந்தகை பெற்றவாழ் வவளாலே.
நாசுகி நறுஞ்சுவை உணவாலே
நலந்தரு புலச்சுவை உருவாலே
வாசுகி எனப்பொருள் சொல்லாலே
வாழ்ந்ததும் வள்ளுவர் வளவாழ்வே!

அன்பினுக் கிருகணின் நீரென்றார்
அறிவினுக் கயல்துயர் அறிகென்றார்
நண்பனுக் கிடித்துரை மொழியென்றார்
நல்லதும் கெட்டதும் நமதென்றார்
மன்பதைக் கொருகுலம் ஒரு நீதி
மான்விழி யார்தனி மனைமாட்சி
என்பதைக் கருதினில் இனிவாழ்வென்
என்னறம் இல்லறம் இனிதென்றார்!

வள்ளுவர் வகுத்தநன் னெறியாகும்
வான்முறை நிறைந்த செந்நெறியாகும்
தெள்ளு தமிழ்க்கொரு நிதியாகும்
தேடினும் காண்கிலா மதியாகும்,
உள்ளுவர் நெஞ்சினில் நிறைவாகும்
ஊருணி நீர்அதன் குணமாகும்
விள்ளு புகழ்அதற் கிணையேது
வீடுதரும் பெரும் பொருளாகும்!

உலகினில் உயர்ந்தவர் ஒருதமிழர்
ஊரெலாம் உற்ற செஞ்சொற் தமிழர்
நிலவுகண் டெழுந்திடும் கடல்போலே
நித்தமும் உவந்தெழச் செய்தமிழர்
செலவுகண் டஞ்சிடும் சேயுலகில்
சேர்வது விதியெனத் தெளிதமிழர்
வலம்வர உலகினில் வழிசெய்தல்
வாழ்பவர் வழிவழி முறையாகும்.

வள்ளுவர் என்றிடில் வாயினிக்கும்
வள்ளுவம் எனக்கொளில் மனம் உவக்கும்
கொள்ளுவம் குறள்எனில் குலம் இனிக்கும்
கோன்முறை வான்முறை தான்சிறக்கும்
தள்ளுவம் எதுவெனில் தமிழ்விளக்கும்
தள்ளிய செயின்நலம் வாழ்வினிக்கும்
மொள்ளுவம் குறள்எனில் தமிழ் இனிக்கும்
மோழைக ளின்றிநாள் நிலப்சிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரிக்கை செய்த பின் தீண்டும் பாம்புகள்

## லொறிச் சாரதியுடன் ஏற்பட்ட விந்தையான அனுபவம்

பாம்புவகைகளைப்படம் உள்ளபாம்புகள் படம் எடுக்காத பாம்புகள், என இரு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். படம் எடுப்பவைநாகங்கள்எனப்படும். படம்எடுக்காதவை புடையன்கள். விரியன்கள்வழலைகள், சுருட்டைகள், மூக்கன்கள், மலைப் பாம்புகள், நீர்ப்பாம்புகள் எனப்பல இனங்கள்உண்டு.

புடையன்களில் (1)சங்குப் புடையன்,(2) உளிப்புடையன், (3)புள்ளிப்புடையன், (4) முத்திரைப்புடையன், (5)எரிபுடையன், (6)சாணகப்புடையன், (7 இரத்தப் புடையன், (8) கண்ணாடிப் புடையன் (9) நெடுங்கழுத்துப்புடையன்,(10)தட்டைப் புடையன், (11)ஊர்துபுடையன், (12) வரிப்புடையன், இப்படியாக அநேகவகையினதாக இருக்கின்றன ஆனால் அவைகளின் தோற்றங்கள் ஒரேவகையாக

என்றுதான் சொல்லக்கூடும். காரணம் நாய் கடித்தது போல வாயைத்திறந்து நன்றாகக்கடிக்கும் சிலவேளைகளில் பாம்பைக் கடிவாயிலிருந்து பிடுங்கி எறிய வேண்டியநிலையும்ஏற்படும். தனது தாடைப்பல்லை அழுத்திக் கடித்தால் அதை கழற்றமுடியாதநிலையில் கடிவாயில் பாம்பு பற்றிக் கொள்ளும். அப்பொழுது பாம்பை இழுத்தோ உதறியோதான் தாக்கப்பட்ட இடத்தை மீட்க வேண்டும். ஆகவே பாம்புகளில் கொடியசெயல் உள்ள பாம்புகள் புடையன்வகைகளாகும்.

### புடையன் விஷம்

நாகத்தின் விஷத்துக்கும் புடையனின் விஷத்துக்கும் குணம் குறிகளில் பலவித்தியங்கள்உண்டு. நாகத்தின் விஷம் தாக்கப்பட்டஇடத்திலிருந்து குருதிஓட்டத்துடன் இரத்தாசியம், சுவாசப்பை, முள்ளந்தண்டின் உள்பக்

**கொட்டடி விஷ வைத்தியர்**

**க. சிற்றம்பலம்**

இருந்தாலும் புள்ளிகள், நிறம், விஷத்தின் அளவுகள், அவற்றின்வாழ்க்கைத் தத்துவங்கள் வித்தியாசமானதாக இருப்பதை ஆராய்ச்சிகள் மூலம் காணலாம்.

### புடையன் கடி

பாம்புகளில் நாகங்கள் கொடிய விஷமுடையனவாக இருந்தாலும் அவை மக்களைத்தாக்குவது குறைவு. அப்படித்தாக்கும் போதும் மூன்று எச்சரிக்கை கொடுத்தே தாக்கும். (1) சீறிக் காட்டும், (2) படம்எடுத்து ஆடிக்காட்டும்,(3) படத்துடன் சீறிக்கடிக்க வருவது போலப் பாசாங்குசெய்யும். இப்படியாகச் செய்தும் முடியாத கட்டத்தில் தாக்கும். தாக்கும்பொழுது தன்னுடைய முழு விஷத்தையும் செலுத்தக்கூடியதாகத் தாக்கும். அப்படிப்பட்ட தாக்கத்துக்குட்பட்டவர்கள் பிழைப்பது அரிது. கடித்த இடத்திலேயே மரணம் சம்பவிக்கவும் கூடும். இந்நிகழ்ச்சிகள் மிகவும் விரைவாக நிகழும். ஆனுல் புடையன் பாம்புகள் மக்களைஒளித்திருந்து தாக்கும். சத்தம் கேட்டபக்கம் எதிர்பார்த்துக் காத்திருக்கும். தனது எதிரியென நினைத்தே மற்றவர்களைத்தாக்கும். நாகம் கடித்தால் அக்கடியைவிஷம் தீண்டிவிட்டதுஎனச் சொல்லலாம். காரணம் அவை கொத்தும் தன்மையுள்ளன. ஆனுல் புடையன் தாக்குவதை பாம்பு கடித்தது

கத்திலுள்ள மச்சையின்மூலமாகவும் மூளையையும் தாக்கி மயக்கத்தை ஏற்படுத்தி இரத்த அமுக்கத்தைக்கொடுத்து, உயிருக்கும் உடலுக்கும் விடுதலை கொடுக்கும் தன்மையுடையதாக உள்ளது.

புடையன் விஷம் நேரிடையாக இருதயம், இரத்தாசியம், கிட்னி (சலப்பை) இவைகளைத் தாக்கும். புடையன் தீண்டப்பட்டவர்கள் உடனடியாக மரணத்தைத் தழுவ முடியாது. ஒரு வாரம் இரு வாரம் அல்லது மாதக்கணக்காகவும், அவ்விஷம் உடலில் தங்கியிருந்து, பல உறுப்புக்களைத் தாக்கி, மெல்ல மெல்லத் தன்னுடைய தொழில்களைச் செய்துகொண்டேயிருக்கும். ஈற்றில் பலவேறு நோய்களுக்கு தான் காரணமாகக்கொண்டு மரணத்தை விளைவிக்கும். ஆகவே நாகத்தின் விஷத்தின் அபாயம் ஒருகிழமையில்தீர்ந்துவிடும். புடையனின் விஷம் பல காலம் உடலில் தங்கி மக்களை வருத்துவதால், மற்றவிடங்களிலும் புடையனின் விஷமே கொடியது என்று காணக்கிடக்கின்றது. சிலர் பாம்பு கடித்தாலும், எனக்கு ஒன்றும் செய்யவில்லையே, விஷமில்லாதபாம்பாயிருக்கலாம் என எண்ணி விஷ வைத்தியம் செய்துவிட்டு வளாவிருப்பார்கள். ஆனுல் பின்னர்தான் இருந்தாற்போல் மயக்கம், கிறுதி,

வாந்தி, வியர்வை, வலி முதலியன ஏற்பட்டபின் மருத்துவமனையை நாடுவார்கள். ஆனுல் நோயின் தன்மை மாறுபடுவதால், பலவகையான சிகிச்சை செய்தாலும் குணம் காண்பது கடினமாகும்.

### பாம்பைப் பாம்பு உண்ணும் காட்சி

சிறு பாம்புகள் பெரும் பாம்புகளுக்கு இரையாவதும் உண்டு என்பார்கள். ஆனுல் புடையன் மற்றும் படம் எடுக்காத பாம்புகளைத்தான் நாகபாம்பு விழுங்கியதை நான் கண்ணுல் கண்டிருக்கின்றேன். 1967 ம் ஆண்டு ஆனி மாதம் 7 ந் திகதி அநுராதபுரத்திலிருந்து 18 மைல் தொலைவில் உள்ள காட்டில் நில அளவையாளர் ஒருவரின் உதவியாளருக்குப் பாம்பு தீண்டிவிட்டது என அவரது மைத்துனர், சகோதரர்கள் என்னிடம் வந்தார்கள். அவர்களின் வருகையை அவதானித்த நான் இவர்கள் ஏதோ விஷம் தீண்டப்பட்டவனின் செய்தியுடன் வருகின்றார்கள் என 'தூதன் வரவு' என்னும் சாஸ்திர முறைப்படி அறிந்து அவர்கள் விஷயத்தை என்னிடம் கூற முன்னர் நான் நடந்த விஷயங்களை அவர்களிடம் கூறினேன். அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படித்தெரியும் நாங்கள் விஷம் தீண்டப்பட்டசெய்தி கொண்டுவந்ததா எனக் கேட்டார்கள். அவர்களுக்கு விஷயத்தை விளக்கினேன். 'தூதன் வரவு' என்பது, விஷம் தீண்டப்பட்டவனின் செய்தியைச் சொல்ல வந்திருப்பவன், அவனுடைய வரவை அவதானித்தால், விடம் தீண்டப்பட்டவனின் நிலை, தாக்கப்பட்ட பற்கள், என்னவகைப் பாம்பால் தாக்கப்பட்டிருக்கின்றுன், எந்தப் பக்கத்தில் தீண்டப்பட்டிருக்கின்றது, தற்பொழுது எந்தத் திசையில் இருக்கின்றுன் என்பதெல்லாம் தூதாகவந்தவனைக்கொண்டு சொல்லலாம் என்பதை விளக்கியதும் அவர்களுக்கு ஆச்சரியமும் அதிசயமுமாக இருந்தது.

சந்திரமண்டலத்தில் மனிதன் சஞ்சாரம் செய்யும் இக்காலத்தில், தூதன் வரவுக் கதைகளைச் சொன்னுல், மக்கள் மனத்தில் நம்பிக்கை பிறக்க முடியாதுதான். ஆனுல் ஆயிரம் ஆயிரம் ஆண்டு காலமாக, முத்தர்களும், சித்தர்களும், முனிவர்களும் தங்கள் மெஞ்ஞான தத்துவத்தால் உணர்ந்த உண்மைகளின் மூலம் கண்ட அனுபவங்களை மறுப்பதற்கில்லை எனக் கூறலாம்.

### கடியாதபாம்பு கடித்தது

1938-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9-ந் திகதி இரவு 9 மணியிருக்கும்; இரவுச்சாப்பாட்டை முடித்துக் கொண்டு எனது பாடசாலை வகுப்புப் பாடக்குறிப்பை எழுதி ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தேன். எனது 'கேற்'றில்ஒரு கார்வந்துநின்றது. பட, பட எனக்கதவை அடித்துக்கொண்டு ஒருவர் இறங்கி — 'மாஸ்ரர்! மாஸ்ரர்' என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தார். மெல்ல மேசையிலிருந்து எழுந்து 'யாரது', என்று கேட்டுக் கொண்டே வெளியே சென்றேன். வந்தவர் என்முன் நின்று, ஒருவரைப் பாம்பு

கடித்து அறிவில்லாமல் கொண்டுவந்து காருக்குள் வைத்திருக்கின்றேம், பாருங்கள்' என்று படபடப்புடன் சொன்னுர். காருக்குள் சென்று பார்த்தபொழுது பாம்பு கடிபட்டவர் அறிவற்ற மயங்கிய நிலையில் இருந்தார். அவரைத் தூக்கிக்கொண்டுவந்து வைத்திய அறையில் கிடத்திவிட்டுப் பரிசோதனை செய்தேன். மயக்கம் விஷத்தால் ஏற்பட்டதாக இல்லை. உடனே மணக்க மருந்து கொடுத்ததும் அவர் விழித்துக் கொண்டார். கடிவாயைப் பார்த்தபொழுது 3/4 அங்குல அளவுள்ள இரண்டு கீறல் அடையாளத்தால் இரத்தம் கசிந்துகொண்டே இருந்தது. அறிவு தெளிந்தவரிடம் உமக்கு என்ன கடித்தது என்று கேட்டேன். அவர் பாம்பு கடித்தது எனச் சொன்னுர். நீர் கண்ணுல் பார்த்தீரா என்று கேட்டதற்கு இல்லையென்றுர். அப்படியானுல் உமக்கு எப்படித் தெரியும் பாம்பு கடித்தது என்று கேட்டேன். அவர் தன் வரலாற்றைச் சொல்லத்தொடங்கினுர்.

'தம்பி! நான் ஒரு லொறியில் சாரதியாக இருக்கின்றேன். காலையில் 6 மணியிருக்கும், எனது வேலைக்குச் செல்வதற்காக, நான்வரும் வழியால் வந்து கொண்டிருந்தேன். அந்தவழி முழுவதும், ஒரே வெள்ளம். அந்த வெள்ளத்துக்குள் 5 அல்லது 6 அடி நீளமுள்ள பெரிய மொத்தமான பாம்பு எனக்குக் குறுக்காக வந்தது நான் வெள்ளத்தால் எற்றியும், கல்லால் எறிந்தும் கலைத்துவிட்டேன். அதுகிழக்குப்பக்கமாக வெள்ளத்தில் நீந்திச் சென்றுவிட்டது. நான் எனது வேலைக்குப்போய் வேலைமுடிந்ததும்' லொறியைக் கொண்டுபோய் முதலாளிவீட்டில் 'கராச்' பண்ணிவிட்டு, வரும் வழியில் களைக்காக வாடிக்கையாக உள்ள இரண்டு போத்தல்களையும் குடித்துவிட்டு பக்கத்திலுள்ள கடையில் சுருட்டை மூட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்தேன். வரும் வழி நான் முன்பு போன வழிதான்தம்பி, வெள்ளத்துக்கால் கொஞ்சத்தூரம் நடந்ததுதான்தம்பி! காலைக் கௌவியதுதான் தெரியும்! காலைஎடுத்து உதறித் தள்ளினேன். பாம்பு 'தொக்' கென்று விழுந்தது. காலையில் நான் எறிந்து துரத்திய பாம்புதான்தம்பி, காவல் இருந்து கடித்துவிட்டது' என்று தன்கதையைச் சுருக்கமாகச்சொல்லி முடித்தார்.

அவர் கதையைச்சொல்லச் சொல்ல நான் சோதனைகளைச் செய்துபார்த்தும், அவரிடம் விஷம் இல்லையெனக் கண்டேன். கடித்த அடையாளத்தைப் பார்க்கும் பொழுது பாம்புக்கு இப்படியானபல் இருக்கமுடியாது என உணர்ந்தேன்.

'உங்களுக்குப்பாம்புகடிக்கவில்லை, தகரமோ அல்லது கம்பியோதான் வெட்டியிருக்கும், என்றுதீர்மானமாகச்சொல்லியும் அவர் பிடிவாதமாக 'நான் கலைத்த பாம்புதான் காவல் இருந்து கடித்தது. நான் உதறபோய் 'சழுக்'கென்று விழுந்தது'என்றுஎன்னுடன்வாதாடத்தொடங்கிவிட்டார். பல முறை சொல்லியும் அவர் தான் தீர்மானமாகப் பாம்பு கடித்ததாகவே வாதாடமுற்பட்டார். உடனே எனக்கு வேறு வழி இல்லை. சிந்தித்தேன். தீர்மானத்துக்கு வந்தேன். ''மந்திரமாவது நீறு, வானவர் மேலது நீறு'' என்று ஞானசம்பந்தரின் நினைவுதான்வந்தது. உடனே மனநோயையும், நம்பிக்கையையும் தீர்க்கவல்லது திருநீறு என்பதைஉணர்ந்து திருநீற்றைக்கரைத்துக்குடிக்கக்கொடுத்ததும் இரு கைகளாலும் வாங்கிக்குடித்தார். எப்படி இப்பொழுது என்று கேட்டேன். 'வலி

குறைந்திருக்கின்றது. உடலில் ஒரு தெம்பு உண்டாயிருக்கு' என்று சந்தோஷமாகக் கூறினுர். தினமும் 3 நேரமும் அந்தஆலவாய் அண்ணலின் அருமருந்தாம் திருநீறு பருகியும், கடித்த காயத்துக்கு மருந்து போட்டுக் குணம்பெற்றுர். இன்றுவரையும் அவர் தனக்குப் பாம்பு கடித்ததாகவே எண்ணிக் கொண்டிருக்கின்றுர்.

இப்படியானவர்கள் ஆஸ்பத்திரிக்கோ அன்றேல் வைத்திய சிகிச்சை விளங்காதவர்களிடமோபோயிருந்தால் அவருக்கு விஷத்துக்குச் சிகிச்சை செய்யப்பட்டு விஷமில்லாமலே, அவர்கள் கொடுக்கும் மருந்தே விஷமாகித் துன்பத்தை வருவித்திருக்கலாம். ஆகவே நோயாளியை நன்கு சோதித்து, தக்க பரிகாரம் செய்யப்படவேண்டும் என்பது வைத்தியர் உணர்ந்திருக்க வேண்டியது.

### கதை இதுதான்

பாம்பு கடித்தது என்ற இடத்துக்கு அவருடனே கூட்டிக்கொண்டு சென்றேன். அவர் நடந்த கால் சுவடுகாணப்பட்டது. ஆனுல் வெள்ளத்துக்குள் வழியை மாறிச் சென்றிருக்கின்றுர். ஒரு முள்ளுக்கம்பி, முன்பக்கம் வளைந்தது. நாலு அடியிருக்கும். ஒரு காலில் ஒரு பக்கம் சேற்றுடன் மிதிபட்டிருந்தது. மறுபக்கம் காலில் கொழுவிவிட்டது. காலில் கொழுவியதும், அவருக்குக் காலையில் கண்ட பாம்பின் எண்ணம் வரவே, காலைத் தூக்கி அவலமாக உதறியிருக்கின்றுர். மறுகாலுக்குள் உள்ள பகுதி சேற்றுடன் எற்றப்பட்டு, தண்ணீருக்குள் 13 அடி தூரத்துக்கு அப்பால் சளக்கென்றுவிழுந்திருக்கின்றது. இவர் பாம்பு என்பதைத் திடமாக எண்ணச் செய்துவிட்டது. கரையில் சென்று பார்த்தார். காலால் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. பாம்பு கடித்துவிட்டது என்று குளறியதும் பக்கத்திலுள்ளவர்கள் வந்துவிட்டார்கள். உடனே பாம்பு கடித்தது என்று சொன்னதும் மயங்கி விட்டார். பேச்சு, மூச்சு இல்லை. அயலவர்கள் காரில் ஏற்றிக்கொண்டு வந்திருக்கின்றுர்கள். இதுதான் இவருக்குக் கடியாத பாம்பு கடித்ததும், மனதத்துவத்தையுணர்ந்து மருந்து செய்ய ஏற்பட்ட அநுபவமும். ஆகவே விஷக்கடிக்குச் சாதாரணமருந்துடன்மனத்தத்துவத்தையுணர்ந்தும் சிகிச்சை செய்ய வல்லவர்களாக வைத்தியர்கள் இருத்தல் வேண்டும்.

---

### 90வயது பிரமசாரியை மணந்த 25வயதுப்பெண்

டெஹ்ரான்,

முகம்மது தாபா என்ற 90 வயது வயோதிபர் 25 வயது இளம் பெண்ணை ஆயிஷா என்பவரைக் காதலித்து திருமணம் செய்துகொண்ட சம்பவம் இங்கு நடந்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக இவர் திருமணம் செய்துகொள்ள முயற்சி எடுத்து வந்தார். ஒவ்வொருதடவையும் அவரது தகப்பனுர் தடைசெய்துகொண்டு வந்ததால், இவர் திருமணம் செய்யமுடியாமல் போய்விட்டது. 10 ஆண்டுகளுக்கு முன்னர் இவரது தகப்பனுர் இறந்தார். இதன்பின்னர்தான் திருமணம்செய்ய முயற்சி எடுத்தார். 25 வயது பெண்ணை ஆயிஷாவை முதன்முதலாகச் சந்தித்தபோதே அவள்மீது விருப்பங்கொண்டு உடனே திருமணம் செய்துகொண்டார். திருமணமாகும் வரைஇவர் பிரமச்சாரியாகவேவாழ்ந்துவந்தாராம்.

---

முப்பது ஆண்டுகளுக்கு மேல்
தங்க, வைரநகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்தநாணயமுள்ள ஸ்தாபனம்
**ராணி ஆபரண மாளிகை**
224, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நவீன - நாகரிக அமைப்புள்ள
தங்க வைர நகைகளைப் பெறுவதற்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
மனேஜர்: A. KARAPUTUGALA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவரசந்தடி வாத்தியார்

**க. நடேசலிங்கம்**

தலைக்குமேலே சுழன்று கொண்டிருந்த மின் விசிறியின் தாக்குதலால் என் மேசையிலிருந்தகடதாசிகள் சடசடத்தன. ஒரு கையால் அவற்றை அழுத்திப்பிடித்தபடி மறுகையால் ஸ்டெதஸ்கோப்பை எடுத்துக் கழுத்தில்கொழுவிக்கொண்டேன் ''......ம்முதல்நம்பரைவிடு'' என்றேன்.

வாசலில் நின்ற கங்காணி போட்ட சத்தம் என் காதையே செவிடுபடுத்தியது. நெஞ்சுநோய்க்கு மருந்து வாங்க வந்தவர்களுக்கு இந்தப் பாவிக் கங்காணி காதையும் செவிடாக்கப் பாக்கிறானேஎன்றுஎண்ணியபடி உள்ளே நுழைந்த நோயாளியைச் சோதிக்க ஆரம்பித்தேன் ஒன்று இரண்டு மூன்று என்று நோயாளிகள் வந்து போய்க்கொண்டிருந்தார்கள். ம்...அடுத்தது என்றேன். கங்காணி ஸ்பிரிங்கதவைத்தள்ளினான். ஒரு முதியவர் இருமியபடிவந்து கதிரையில் அமர்ந்தார். எங்கோ பார்த்ததுபோன்ற முகம் ''உங்கள் பெயர்...'' என்று இழுத்தேன் அவரும் என்னைக் கூர்ந்துபார்த்தார். ''நீ...நீ...நீங்கள் ராஜேஸ்வரனெல்லோ?'' என்றார். தொடர்ந்து இருமஆரம்பித்தார். 'ஆமா'மென்று தலையாட்டினேன். ''உங்களை...... உங்களை......எங்கோ'' என்று நானும் தயங்கிய குரலாக இழுத்தேன் பின்னர் சட்டென்று நினைவுபடுத்தியவனாக ''நீங்கள்கந்தையா மாஸ்ரர்தானே?'' என்றேன். அவர்தலையாட்டினார் என்னையறியாமலே எழுந்து நின்றேன். ''இருதம்பி... இதென்னவேலை?'' என்றார், சிரித்தபடி. மறுகணம் வலிதாங்க மாட்டாதவராய் மார்பைத் தடவிக்கொண்டே இருமஆரம்பித்தார்.

என் கண்களையே நம்பமுடியவில்லை. தூயவேட்டி சால்வையுடன் கையில்பூவரசங்கம்புகொண்டு எம்மை உறுக்கி மிரட்டிய அந்தப் பழைய உருவமா இது? பஞ்சு போன்று நரைத்ததலை, குழிவிழுந்தகண்கள். வெளிப்புடைத்த விலா எலும்புகள்- இத்தனையே இன்றைய உருவுக்குரியனவாயிருக்கின்றன. அன்றுகண்ட பூவரசங்கம்பு வாத்தியாருக்கும் இன்றைய இந்தஉருவத்துக்கும் எத்தனை மாறுதல்கள்!

0 0 0

பட்டினத்துப் பள்ளிக்கூடத்தில் மகன் படிக்க வேண்டுமென்ற ஆசையால் என்னை அப்பு யாழ்ப்பாணப் பள்ளிக்கூடத்தில் ஒரு கல்லூரியில் எட்டாம் வகுப்பில் சேர்த்துவிட்டார். என்னிடமிருந்ததோ ஒருசோடி காற்சட்டையும் சேட்டும் தான் சினிமாக் கொட்டகையில் ஒரேபடம் ஓடுவது போல ஒரே காற்சட்டை சேட்டைத்தான் நன் தோய்த்துத் தோய்த்துப் போடவேண்டும். ஆனல் என்சகமாணவர்கள் பகட்டான உடையுடன்வருவார்கள் நான் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து மூன்று நாட்களாகிவிட்டன. பாடசாலை ஆரம்பமாக மணியடித்துவிட்டார்கள். அனை வரும் புலியை எதிர்பார்க்கும் ஆடுகள்போல ஒடுங்கி அமர்ந்திருக்கிறோம் எல்லோரும் வகுப்பின் வாசலைப் பார்த்தபடியிருக்கிறார்கள். ''மனுசன் வருகுதெடா''—என்கிறான், வகுப்பில எல்லோரையும் மிரட்டும் ஒருமாணவன். எல்லோரையும் நடுங்கவைக்கும் கந்தையா மாஸ்டர் என்ற உருவம் வகுப்பினுள் நுழைகிறது எல்லோரும் எழுந்து நிற்கலானோம். எங்கோகவனமாக இருந்ததால் எழுந்து நிற்கத் தவறிய ஒருமாணவனின் முதுகில் முறையாக 'இரண்டு' கிடைக்கிறது. ''ஏறடா வாங்குக்குமேலே'' கர்ச்சிக்கும் அவர் குரல். அந்த மாணவனும் தட்டுத்தடுமாறி வாங்கின்மேல் ஏறுகிறான்.

''வீட்டுக்கணக்குச் செய்யாதவர்கள் எழும்புங்கோ; மற்றவர்கள் இருக்கலாம்'' என்று கட்டளைபிறக்கிறது. என்னைத்தவிர மற்றவர்கள் வாங்கில் இருக்கிறார்கள்.

''ஏனடா செய்யவில்லை?'' என்ற கேள்வியுடன் என்னை நெருங்குகிறார். ''மொனிற்றர் ஓடிப்போய் பூவரசங்கம்பு முறித்துவா'' எனக் கட்டளை பிறக்கிறது. மற்றவர்களுக்கு அடிவிழுவதை ரசிக்க விரும்பும் அந்த 'மொனிற்றர்' வேலியிலுள்ள பூவரசை நோக்கி ஓடுகிறான். ''வாயைத் திறந்து சொல்லன்ரா! வாயுக்குள்ளே என்ன கொழுக்கட்டையோ?'' என்கிறார். என்னைநோக்கி. மொனிற்றர் என்ற யமன்தடியுடனே வந்து குதிக்கிறான். தலையைக்குனிந்தபடி நான் கண்ணீர் வடிக்கிறேன். பூவரசங்கம்பு என்முதுகில் விளையாடுகிறது. நான் வீட்டுக்கணக்குச் செய்யாத காரணத்தைச்சொன்னால் நகர்ப்புற மாணவர்கள் என்னை மதிக்கமாட்டார்களே!

அப்புவாலைதான் எல்லாம் வந்தது. பட்டணத்துக் கல்லூரியில் பொடியன் படிக்கவும்வேணும், தோட்டத்துக்குத் தண்ணியும் இறைக்கவும்வேண்டும் என்றால் வீட்டுக் கணக்குச் செய்கிறதெப்படி? முதுகைத் தடவியபடி அமர்கிறேன். அன்று தொடக்கம் எனது புதுப்பள்ளிக்கூட அகராதியில்கந்தையா உபாத்தியாயர் ''பூவரசங்கம்பு வாத்தியார்'' ஆனார்.

முதலாந்தவணைப் பரீட்சை வந்தது. இந்தப் பூவரசந்தடி மனிதருக்கு நல்ல பாடம்கற்பிக்க வேண்டுமென்றுஎண்ணியவனாய், அப்புவுக்குப் போக்குச் சொல்லிவிட்டுத் தோட்டத்துக்குப் போகாது குப்பி விளக்கினை கொளுத்தி வைத்து இரவிரவாகப்படித்தேன். அந்தத் தவணை நான்தான் வகுப்பில் முதலாம் பிள்ளை. பூவரசந்தடி வாத்தியாரேஆச்சரியப்பட்டார், ஆனால் அவர் கோபம் என்றைக்கும் தணிந்ததில்லை. வீட்டுக்கணக்குச் செய்யாது போய் ஒவ்வொரு நாளும் பூவரசந்தடியால் பூசை வாங்குவேன்.

ஒருநாள் கல்லூரியெங்கும் ஒரே பரபரப்பு. வித்தியாதிகாரி எமது கல்லூரிக்கு வருகிறாராம். வகுப்பில் தூய உடையுடுத்தவர்கள் முன்வாங்கில் இருத்தப்பட்டார்கள். நான் கடைசி வாங்கில் போய்இருந்தேன். வித்தியாதிகாரி எமது வகுப்பினுள் புகுந்தார். எம்மிடம் கேள்விகள் கேட்பதாகக் கூறினார். முன்வாங்கில் முதலாவதாக இருந்தவனிடம் ஒருதிருவாசகம் படிக்கும்படி கேட்டார். எல்லோரும் திருதிருவென்று விழித்தார்கள். ஒவ்வொருவராகக் கேட்டபடி வித்தியாதிகாரி என்னை நெருங்கினார். இறுதியாக என்னிடம் ''நீ சொல்லுபார்க்கலாம்'', என்றார். நான்எழுந்துநின்றேன். பழைய பள்ளிக்கூடத்தில் இராசையா வாத்தியார் படிப்பித்த ''பூசுவதும் வெண்ணீறு'' என்ற தேவாரத்தைப் பண்ணோடு படிக்க ஆரம்பித்தேன். பாடலை முடித்ததும் வித்தியாதிகாரி என்முதுகில் தட்டிக்கொடுத்துவிட்டுச் சென்றார். அவர் சென்றதும் கந்தையா மாஸ்ரரின் கோபம் மாணவர்களிடம் திரும்பியது.

''மாடுகளே! எத்தினநாளாச் சொல்லித்தந்தன். இண்டைக்கு அவர் கேட்க மண்டுகங்கள்மாதிரிப் பேசாமல் இருக்கிறியள். அவனொருத்தன் ஏதோ சொல்லிப்போட்டான்'' என்றார். எனக்கோ கோபம் கோபமாக வந்தது. ''ஏதோ சொல்லிப்போட்டான்'' என்று ''ஏதோ''வுக்கு ஓர் அழுத்தம் கொடுத்து நையாண்டி செய்கிறார், என எண்ணினேன். போகட்டும் மனிதர் என்று இருந்துவிட்டேன்.

காலம் போய்க்கொண்டிருந்தது. இப்பொழுது கந்தையா மாஸ்ரர் எனக்குப் பாடமெடுப்பதில்லை. ஏனெனில் நான் மேல்வகுப்புக்கு வந்துவிட்டேன். எஸ். எஸ். சீ. சோதனை எடுக்கப் பணம்கட்டவேண்டியிருந்தது. அப்புவிடமோ பணமில்லை. கைவிரித்துவிட்டார். எல்லோரும் பணம் கட்டிவிட்டார்கள். நான் மட்டும் கல்லூரிக் காரியாலயத்தில் தனித்து நின்றேன். தற்செயலாக அவ்விடம் வந்தார், பூவரசந்தடி வாத்தியார். ''என்ன நிற்கிறாய்?'' என்றார். விஷயத்தைச்சொன்னேன். ''நீ பேசாமல் வீட்டுக்குப்போ. நான் அதிபரிட்டச் சொல்லி காசில்லாமல்சோதனைஎடுக்க

[12ம் பக்கம் பார்க்க]

'ஈழநாடு' பத்தாவதாண்டு நிறைவையொட்ட நடாத்தப் பெற்ற இலக்கியப் போட்டியில் பாராட்டுப்பெற்ற சிறுகதைகளில் இதுவுமொன்று.

---

## குட்டிக் கதை

# பிரார்த்தனை

**சசிபாரதி**

தாமோதரம் நினைத்தபடி பணம் சேர்ந்துவிட்டது. சேர்ந்து விட்டதென்றால், சும்மா பணம் வந்து சேர்ந்துவிடுமா? சும்மாவே சேர்ந்துகொள்ளும்செல்வமுமுண்டுதான். ஆனாலும் இந்த மனிதர் தன் அயரா உழைப்பின் மூலமே பணத்தைச் சேர்த்துக் கொண்டவர். சும்மா இருக்கச் சிலருக்கு மட்டுமே அதிர்ஷ்டமென்ற பெயரில் செல்வம் வந்து வாய்ப்பதே போல் உழைப்பாளிகளில்கூடச் சிலரிடம் மட்டுமே செல்வம் தங்கிவிடுகின்றதென்பது தாமோதரத்தார்வரை முற்றிலும் உண்மை. கடின உழைப்பின் மூலம் பெற்ற செல்வம் கூட நிலைத்துவிடுவதற்கு அதிர்ஷ்டம் வேண்டாமா? அந்தவகையில் அவர் ஓர் அதிர்ஷ்டசாலி!

தமது உடற் பலத்திலும் மூளைப்பலத்திலும் தாமோதரம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தாரோ அவ்வளவுக்கு மேலாகக் கடவுள் மீது நம்பிக்கை வைத்திருந்தார். கடவுளே செல்வத்தையெல்லாம் அள்ளித் தன்னிடம் கொட்டுகிறாரென அவர் நம்பாதுவிட்டாலும், சம்பாதிக்கும் திறமையையும் ஆரோக்கிய பலத்தையும் கடவுளேதனக்கு அளித்திருப்பதாக மிக உறுதியாக நம்பினார்.

ஊரில் பெரும் பணக்காரனாகத் திகழும் தாமோதரத்திற்கு இதுவரை தான் குடியிருந்த வீட்டின்மீது ஒரு வித வெறுப்பு ஏற்பட்டது. வீடு கொஞ்சம் பழைய நாகரிகம். அயலும் தனது தற்போதைய நிலைமைக்கு ஏற்றதாயிருக்கவில்லை என்று கருதினார். அவரது பிள்ளைகளும் மனைவியும்கூட அப்படித்தான் உணர்ந்தார்கள். அதனால் பட்டினத்திலே நாகரிகம் மிக்க பகுதியில் நிலம் வாங்கிப் புதுவீடு அமைத்துக் குடியேறிவிடுவதெனத் தீர்மானித்தனர்.

நிலம் வாங்கியாயிற்று. பல இலட்சரூபாய் செலவில் வீடுகட்டும் வேலைகள் ஆரம்பமாயின வீடா அது? மூன்று மாடிகளைக்கொண்ட மாளிகை. எனினும் விரைவாகக் கட்டட வேலைகள் பூர்த்தியாகின.

ஒவ்வொரு மாடியிலும் பலபல வசதிகளைக் கொண்ட ஏராளமான அறைகளும் கூடங்களும். நிலவின் குளுமையில் குளிக்க ஒரு மாடம், தென்றலில் திளைக்க ஒருகூடம்; படிப்பதற்கு, பாடுவதற்கு, உண்பதற்கு, உறங்குவதற்கு எல்லாவற்றிற்கும் தமக்கும், விருந்தினர்க்குமென்று வெவ்வேறாகப் பிரித்து அறைகளும் கூடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. தாமோதரத்தார், மனைவி, இரண்டு பிள்ளைகளின் [illegible] நிற்க நான்கு பெரிய அறைகள். சாரதிகளும் மற்றும் வேலையாட்களும் வசிப்பதற்கு வெவ்வேறு அறைகள்...

இத்தனை பெரிய வீட்டில் ஒரு சின்னஞ்சிறிய அறையும் மிக்க கரிசனையுடன் அமைக்கப்பட்டிருந்தது. அகிலும் புகையும் சந்தனமும் பன்னீருமாக அந்த அறையையும் அதைச்சூழவும் எந்நேரமும் நறியமணம் கமழ்ந்து கொண்டிருக்கும். அறையில் ஒருமேடைமீது பெரிய படமொன்று வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பெரிய படத்தை வைப்பதற்கென்றே தமது பெரிய மாளிகையில் அந்தச்சிறிய அறையைத் திட்டமிட்டுக் கட்டியிருந்தார் அவர்.

முப்பொழுதும் அப்படத்தின்முன் நின்று கும்பிட்டபிறகுதான் மறுகாரியம் பார்ப்பார் தாமோதரம். படத்தின் முன்னே அவர் நின்று தலையிலே கரங்களைக் குவித்தும், முன்னேயும் பக்கமாகவும் கரங்களை விரித்தும், தலைமீது குட்டியும், தம்மைத்தாமே சுற்றியும், விழுந்தும், எழுந்தும் கும்பிட்டும் அவர் பிரார்த்திப்பார்.

''அண்ட சராசரங்களையும் படைத்துக்காத்து அழிக்கின்ற இறைவா...'' என அவர் உதடுகள் முணுமுணுக்கும்.

இறைவனின் முகத்திலோ, படம் வரைந்த அன்றிருந்ததுபோல வே முறுவல் மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

---


''லெடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லெடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுந்துளிர்

மணிப்புறவம்

# எட்டடி வெள்ளம் போட்டது தெரியுமா ?

1969 மே- தென்னிலங்கையில் 42 மணிநேரம்மழை ஆயிரக்கணக்கானோர் வீடிழந்து தவிப்பு.

1969 டிசம்பர் - மட்டக்களப்பு மாவட்டத்தில் பெருமழை. பேரழிவு. மொத்த சனத்தொகையான இரண்டேகால் லட்சத்தில் ஒன்றேமுக்கால் லட்சம் பேரை பெருவெள்ளம் துன்புறுத்தியது.

மலைநாட்டில் மழையும் மண்சரிவும் பலத்தசேதம்.

வடமாகாணத்தில் குடியேற்றத்திட்டங்களில் வெள்ளம் பாய்ந்ததால் பலர் குடியெழும்பி அவலம். வவுனியா, மன்னாரில் குளங்களில் நீர் பெருகி வழிகிறது. யாழ்ப்பாணத்தில் ஒரே நாளில் 5 அங்குலமழை ஆண்டுமுழுவதுமாக மொத்தம் அறுபது அங்குலமழை யாழ்ப்பாணநாட்டில் பெய்து தீர்த்திருக்கிறது.

இப்படியாக அகில இலங்கையிலும் ஓர் இடமும் தப்பாமல் கார்மேகங்களை நாற்றிசைக்கும் ஏவி குடி மக்களைப் பெரு வெள்ளத்தில் ஆழ்த்தி ஊரையே கதி கலக்கிய 69ம் ஆண்டு அது எத்தனை உயரிய சமநோக்குக் கொண்டிருந்த போதிலும் இலங்கைவாழ் குடிமக்கள் அதற்குப் பிரிவு கூறியபோது 'போய்வா' என்று சொல்லியிருப்பார்கள்? வாய்மொழி உபசாரத்துக்காகச்சிலவேளை அப்படிக்கூற நேர்ந்திருந்தாலும் கூட மனம் போய்த் தொலை என்றுதான் திட்டியிருக்கும். உள்ளொன்றுபுறம் பொன்றாக இப்படிவேண்டா வெறுப்புடனே இந்த அறுபத்தி ஒன்பதை எங்கே கொண்டுபோய் கப்பல்ஏற்றினார்களோ? ஒருவேளை அது தனுஷ்கோடிக் கப்பலாகக் கூட இருக்கும். ஏன் சொல்கிறேனென்றால் அக்கரை நாட்டிலிருந்துதானே பஞ்சம் பசி என்று அழுதுபுலம்பியவர்களாக சட்ட விரோதமாக நூற்றுக்கணக்கானோர் இக்கரைக்கு அடிக்கடி ஓடி வருவதாகவும் இதனால் கரையோரக் காவலுக்குஅமர்த்தப்பட்ட இராணுவ வீரர்களின் கண்ணுறக்கம் கெட்டுப்போய் விடுவதாகவும் சிலகாலமாக ஒரே கூப்பாடாயிருக்கிறது. அதனால் எங்கள்நாட்டில்தேவைகதிகமாகஇப்படி அபிரிதமாகப் பெய்து சேதம் விளைவிக்கும்மழை கடல்தாண்டி அவ்வூர்களில் எல்லாம் போய் நிறையப் பெய்தால் அங்கும் நாடுசெழித்து பஞ்சம் பசி நோய், துன்பம் யாவும் ஒழிந்து சுபிட்சம்பிறக்கும்என்று அவர்கள் கருதியிருக்கலாமல்லவா?

எப்பவோ ஒருக்கால் எங்கள் நாட்டிலே பெருமழை பெய்து எட்டடி வெள்ளம் போட்டதாம். எங்கள் ஊரிலே ஒரு பாட்டி இது பற்றிச் சொல்வாள். எட்டடி வெள்ளம் என்றால் தெரிகிறதா? அது 1969 டிசம்பரில் ஒரே தினத்தில் பெய்த ஆறு அங்குல மழையைப்போல பதினறு மடங்கு பெருக்கம்! அடுத்து இரண்டு நாட்களுக்கு மழை விடாமற் பெய்ய ஆரம்பித்துவிட்டால் போச்சு. பாட்டி தொடங்கி விடுவாள் 'எட்டடி வெள்ளம் தான் போடப்போகுது. உலகத்துக்கு அழிவுகாலம்தான் வந்திருக்கு. வருஷம் பிறந்த பலன்கூடச் சரியில்லை. எனக்கு அப்பவே தெரியும்' என்று வாய் புலம்பிக் கொண்டு வீட்டு மூலையில் போய் இருந்து குலதெய்வத்திற்கு அபாய அறிவித்தல் கொடுத்து அபயம் கோரி வேண்டுதல் செய்வாள்.

எட்டடி வெள்ளம் என்றால் தலைக்குமேலே வெள்ளம்போய் எல்லாம் குடிமுழுகிப் போகும். அப்பொழுதெல்லாம் இந்தக் 'கிழம்' எந்தக் குடில்மேலோ அல்லது கோபுரத்தின் மேலோ ஏறிநின்று தன் உயிரைக் காப்பாற்றிக்கொண்டதோ அது விபரம் கேட்கத் துணிந்தால் தன் பேச்சை நாம் பொய் புழுகாக்குவதாக அவளுக்குக் கோபம் வந்து விடும். அதலால் நமக்குள்ளாக விளங்கிக் கொள்ள வேண்டும். பாட்டி வசித்த வீடு ஒன்றில் பள்ளக்காணியாக இருந்திருக்கும். அந்த பட்சம் ஊர் வெள்ளமெல்லாம் திரண்டு வந்து அவள் வீட்டைச் சுற்றிலும் எட்டடி பத்தடியாகக் கூடப் பெருகி நின்றிருக்கும் அல்லதுபோனால் எட்டடி வெள்ளம் போட்டது நாற்பதுமுழ மனுஷர் வாழ்ந்த யுகத்தில் நடைபெற்ற சங்கதியாக ஒருவேளை இருந்திருக்கும். அந்த திரேதா யுகத்தில் பெய்த தொண்ணூற்றி ஆறு அங்குல மழை வெள்ளத்தின் போது தென்னைமரம் பனைமரமாக நாற்பது முழம் வளர்ந்து நின்ற மானிடவன் இன்றைக்குள்ள நாலுமுழக்குள்ளனைப்போலத்தான் முழங்காலளவு தண்ணீரில் வெள்ளம் கலக்கி விளையாடியிருப்பான். நம்பிக்கையாகச் சமுத்திரத்திலும், நதியிலும், குளத்திலும் எந்நாளும் தண்ணீர் தளதளவென்று நிரம்பி வழிந்து நம்மை வாவா என்று கூவி அழைத்தபோதிலும் அபாயமற்ற மழை வெள்ளத்தில் இறங்கி வெள்ளம் கலக்குவதில் ஒரு தனி மகிழ்ச்சி காணும் குணம் அன்றைக்கும்சரி, இன்றைக்கும் சரி, மனித ஜாதிக்குள்ள ஒரு தனி யோக்கியதாம்சமாக இருந்து வந்திருக்கிறது. ஒப்புக்கொள்ளுங்கள்!

பாட்டி கதையை நடுவில் நிறுத்தி விட்டேனே. எட்டடி வெள்ளத்துக்கெல்லாம் அபூர்வமாகத் தப்பிப்பிழைத்து நீண்ட காலம் சுக சம்பத்துகளுடனே வாழ்ந்து அந்தப் பெருவெள்ளத்தைப் பற்றிச் சின்னஞ்சிறுசுகளுக்கு எந்நாளும் உபகதைகள் சொல்லிப் பயமுறுத்திக் கொண்டிருந்த கிழம் இந்த 69 டிசம்பரில் ஆறு அங்குலமழை பெய்த தினமாக கணுக்காலளவு வெள்ளம்கூடக் காலை நனையாதபடி பத்திரமாகப் போர்த்திமூடிக்கொண்டு தன்கடைசி யாத்திரைக்குக் கிளம்பிவிட்டாள். — அவள் வாழ்க ஆவியுலகில்.

திரேதாயுகத்தில் நாற்பது முழ மனிதராக வாழ்ந்தவர்கள் கலியுகம் பிறந்து நாலுமுழ மனிதனைப் பார்த்த மாத்திரத்தே இத்தனை சின்ன மனிதர்களா என்று திகைத்து அப்படியே மரமாகிப் போய்விட்டார்களாம். அவர்களைத்தாம் இன்றெல்லாம் பனையும், தென்னையும், கமுகுமாகப் பார்க்கிறோமாம் இந்தப் பாட்டிதான் இதையும் சொல்வாள்.

**வாரணமாமலை**

அன்னதொரு காலை
அறுமாமுகக் கடவுள்
முன்னொரு சார்வந்து
முதுகளிற்றின்
கோடொற்றப்

பின்னொரு சார்வந்து
பிடியின் மருப்பூன்ற
இந்நடுவே நின்றான்
ஏறாழ்வயிரத்
தானேபோல்

கானகத்தில் நீடு மகிழ் வெய்தி நின்ற குமரேசனின் காதலை வர்ணிக்கையில்தான் கச்சியப்பர் இவ்வாறு கூறுகிறார். கடல் அலைபோல வாரணமாமலை சீறி எழுந்து வந்து நிற்கிறது. கானகத்துப்

(13-ம் பககம் பாக்க)

# மலேரியா நுளம்பைக் கொல்ல புதிய மருந்து?

சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு மலேரியா காய்ச்சல் இலங்கையில் குடியும் குடித்தனமுமாய் இருந்துவந்தது. அநேகமாக எல்லா மாகாணங்களிலும் அதுபரவி ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உயிர்களை பலி எடுத்ததுமல்லாமல் பல்லாயிரக்கணக்கானோரின் ஜீவசக்தியை உறிஞ்சி அவர்களை எந்தவேலைக்கும் லாயக்கற்றவர்களாக்கியது.

முன்னொருகாலத்தில் கீழத்தேசத்தின் நெற்களஞ்சியமாக விளங்கியது இலங்கை. சிங்களஅரசர்களும் தமிழரசர்களும் ஆட்சிபுரிந்தநாட்களில் அனுரதபுரமும் பொலனறுவையும் அவர்களின் தலைநகரங்களாக விளங்கின, அவற்றைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் மக்கள் நெல் முதலிய தானியங்களைப் பயிரிட்டு சுபீட்சமாக வாழ்ந்தனர் வேளாண்மைக்குதவியாக மன்னர்கள் ஆயிரம் ஆயிரம் குளங்களை இவ்விடங்களில் கட்டுவித்தனர். அப்பொழுது மலேரியா என்ற பேச்சே கிடையாது.

## — சுப்புடு —

மேனாட்டவர்இலங்கையை எம்மிடமிருந்து அபகரித்து எம்மை ஆண்டபோதுகாசுப் பயிர்களாகிய காப்பி, தேயிலை. ரப்பர் முதலியவற்றை விருத்திசெய்வதற்காக மேலேசொன்ன நன்னிலங்களை அழியவிட்டுவிட்டு மலைப்பிரதேசங்களில் கவனம் செலுத்துவாராயினர். இதன்விளைவாக மக்கள் மகிழ்ச்சியுடன்வாழ்ந்துவந்த அப்பிரதேசங்கள் கவனிப்பாரற்று விட்டன. காடும் முள்ளும் அடர்ந்து வளர்ந்தன. குளங்கள் எல்லாம் தூர்ந்து போயின. ஒரு காலத்தில் களனிகளும் சோலைகளும் நிறைந்த இடம் பயங்கர வனமாகி கொடிய துஷ்ட மிருகங்களுக்கு இருப்பிடமாகியது. அத்துடன் மலேரியாவும் அங்கே செழித்து வளர்ந்தது,

### புதிய மருந்து

திடீரென்று 1964-ம் ஆண்டு சில இடங்களில் மலேரியா நோய் மறுபடியும் தலைதூக்கியது. சுமார் இருநூறுபேர் இதற்குள்ளானார்கள். இது எப்படிச் சம்பவித்தது என்று ஆராய்ந்து பார்த்தபோது வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்தவர்கள் மலேரியா கிருமியையும் கொண்டு வந்ததாகத் தெரியவந்தது. மலேரியா ஒரு தொற்றுநோய். ஆதலால் அதைத் தொற்ற வைக்கும் நுளம்புகளை முற்றாக அழித்துவிட வேண்டும். ஆனால் இந்த நுளம்புகள் சிலகாலம் செல்ல டி. டி. ரி மருந்துக்குப் பழக்கப்பட்டு அது எதிர்க்கும் சக்தியைப் பெற்றுவிட்டன என்று தெரிய வந்தது. எனவே அந்த எதிர்க்கும் சக்தியை அழிக்கவல்ல டி. டி. ரியை விடக் காரம்கூடிய ஒருமருந்தைக் கண்டு பிடிப்பதில் வைத்திய நிபுணர்கள் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறார்கள். அணுசக்தியின் உதவியோடு தயாரிக்கப்படும் ஒரு புதிய மருந்தை லண்டனிலும் அமெரிக்காவிலும் பரிசிலனை செய்து வருகிறார்கள்.

### பொது மக்கள்கடமை

சமீபத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினல் மலேரியா மீண்டும் தலைதூக்கக் கூடுமென சுகாதாரப் பகுதியினர் சந்தேகிக்கிறார்கள். அதிக சக்தி வாய்ந்த டி.டிரி. மருந்தை வீடு வாசல் வளவுகள் எல்லாம் அடிப்பதே இப்பொழுது கையாளப் படும்முறை, பொதுமக்கள் மருந்தடிக்க வருபவர்களுடன் ஒத்துழைத்து கட்டில், படுக்கை முதலியவை பழுதடைந்துவிடும் என்று சாக்குப்போக்குச் சொல்லாமல், தங்கள் சொந்த நன்மையின் நிமித்தம் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் டி. டி. ரியை அடிப்பிக்க வேண்டும். வீடுகளை சுற்றியுள்ள புல் பூண்டுகளைச் சுட்டெரித்து துப்புரவாக இருக்கவேண்டும். நீர்தேங்கி நிற்கும் குட்டைகள் எல்லாவற்றிலும் நுளம்புகள் முட்டையிட்டுப் பெருகுமாதலால் ஒருதுளி நீர்நின்றாலும் அதில் மருந்து அடிக்கவேண்டும். குடிப்பதற்கு கூடியவரையில் வெந்நீரே விரும்பத்தக்கது. குளிர் நடுக்கத்துடன் காய்ச்சலும், கால் கைப்பொருத்துகளில் உளைவும், தீனில் பிரியமின்மையும் ஏற்பட்டால் ஒருநிமிடமும் தாமதிக்காமல் பக்கத்

[13ம் பக்கம் பார்க்க]


ஈழத்தின் பண்பை நாட்ட ஈழநாடு
தமிழக தனத்தை ஈட்ட தம்பி அன் கோ.

"சிறுதுளி பெருவெள்ளம்" "நூற்றுக்கு மேல் ஊற்று"

**தம்பி அன் கோ.,**

நவீன சேமிப்பில்
ரூபா நூறு நூறாகச் சேர்த்து
ரூபா ஆயிரம் ஆயிரமாக எடுக்கலாம்.
மாதம் ரூபா 100 வீதம்

| | | | | |
|---|---|---|---|---|
| 12 மாதம் | ரூபா 1200/- | கட்டினால் | ரூ. 1280/- | வாங்கலாம் |
| 24 ,, | ரூபா 2400/- | ,, | ரூ. 2670/- | ,, |
| 36 ,, | ரூபா 3600/- | ,, | ரூ. 4200/- | ,, |
| 48 ,, | ரூபா 4800/- | ,, | ரூ. 5950/- | ,, |
| 60 ,, | ரூபா 6000/- | ,, | ரூ. 7600/- | ,, |
| 72 ,, | ரூபா 7200 | ,, | ரூ. 9500/- | , |
| 75 ,, | ரூபா 7500 | ,, | ரூ. 10000/- | ,, |

முக்கியகுறிப்பு:
இச்சேமிப்பில் எப்பொழுதும் சேரலாம்
எப்பொழுதும் லாபத்துடன் எடுக்கலாம்

மறுவிபரங்கட்கு:

**தம்பி அன் கோ.,**

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமணியின் கருத்தை ஏற்கிறார் 'நடிகமணி'!

[இன்றையநாடகங்கள் நாடகங்களா என்ற பிரச்னையை கலைமணி கிளறினார். நாடகக் கலைஞர்களிடமிருந்து அபிப்பிராயம் கேட்டிருந்தோம். ஈழத்தின் தலைசிறந்த பழம்பெரும் கலைஞரான மயானகாண்டம்' புகழ் நடிகமணி வி. வி. வைரமுத்து அவரது கருத்துக்களை ஆதரித்து எழுதிய கட்டுரையை இங்கு வெளியிகிறோம் ]


'கலைமணி' வடிவேலுவின் கட்டுரையைப் படித்தேன் உண்மையில் அவரின் கருத்துக்களைப் பெரும்பாலும்ஏற்றுக்கொள்ளாமலிருக்க முடியாது!

இருபத்தைந்து வருடங்களாக நாடகக்கலையைச் சம்பிரதாய பூர்வமாகக் கற்று அதனையே தொழிலாக மேற்கொண்டுவருகிறேன். உண்மையான நாடகக் கலைக்குச் சம்பிரதாயம் உண்டு. இன்றைய நாடகங்களை நாடகங்கள் என்றே கூறமுடியாது என்பது கட்டுரை ஆசிரியரின் இறுக்கமான கருத்தாகும்! நாடகங்கள் பலராலும் பல பாகங்களிலும் அடிக்கடி மேடையேற்றப்படும் இக்காலத்தில் 'இன்றைய நாடகங்களும் நாடகங்களா' என்ற கேள்விக்குப் பதில் அளிக்கவேண்டுமாயின் பெரும்பாலும் இல்லையென்று சொல்வதில் வருந்தவேண்டிருக்கிறது. நாடக இலக்கணம் தெரிந்தவர்கள் இதனை ஏற்பார்கள் என்பதில் ஐயமில்லை. நான்குபேர் சேர்ந்ததும் உடனே ஒரு கதைஎழுதி பத்து நாட்களுக்குள் தாங்களும் நடிகர்களாகி மேடையிப் நடிக்க வரும் நடிகர்களைப் பார்த்தால் 'கலைமணி'யின் கருத்து உண்மையே எனத் துணிந்து கூறலாம்.

## சிறுவயதில்

நான் சிறுவனாக இருந்த காலத்தில் நாடகச்செல்வர்களாக விளங்கிய பி. எஸ். கோவிந்தன், எம். எம். மாரியப்பா, செந்திவேல் தேசிகர் எஸ். டி. சுப்பையா. ரி. ஆர். மகாலிங்கம், எம். வி. கிருஷ்ணாழ்வார், எஸ். கே. செல்லையாபிள்ளை போன்ற நாடக மேதைகளின் நாடகங்களைப் பார்த்திருக்கிறேன்· அவர்கள் நடித்த நாடகங்களெல்லாம் கட்டுரையில் குறிப்பிட்டது போல் எவருடைய உதவியுமின்றித் தங்கள் சொந்தத் திறமையைக்கொண்டு நடத்தப்பட்டது, அந்நாடகங்களில் கர்நாடகசங்கீதம்நிறைந்த அவரவர் சொந்தக்குரல்களால் பாடல்கள் ஒலிக்கும். சந்தங்கள் சரபங்கள் ஏராளம் இடம்பெறும். உணர்ச்சி வசப்படவேண்டிய சந்தர்ப்பங்களுக்கெல்லாம் பொருத்தமான இராகங்கள், தர்க்கப் பாடல்கள் நிறைய இடம்பெறும் நாடகத்திற்கு இசை எவ்வளவு முக்கியமென்பதையும் நாடகஇலக்கணத்துள் இசை எவ்வளவுக்கு ஈடுசெய்கிறதென்பதையும் எடுத்துக்காட்டும். ஏன்? சினிமா மோகமுள்ள இக்கால இளம் வாலிபநடிகர்களையே திரைப்படத்தில் வரும் சிறு நாடகங்கள் கவரவில்லையா? அதில் அவர்கள் உணர்ச்சி

[13ம் பக்கம் பார்க்க]




# 'ஆயிரம் நிலவே வா!'

"ஆயிரம் நிலவே வா......!- கேட்கக் கேட்கத் திகட்டாத தேனுகை- இனித்துக் கொண்டிருக்கிறது! நாடெங்கிலும் இப்போது ஓடிக்கொண்டிருக்கும் எம். ஜி. ஆரின் பிரமாண்டமான தயாரிப்பான 'அடிமைப்பெண்ணை'ப் பார்த்தவர்களுக்கு இந்த அனுபவம் ஏற்பட்டு இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

'குளுகுளு' கலரில் எடுக்கப்பட்டுள்ள இந்தப் படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது எங்கோ, எங்கோ, முழுக்க முழுக்க ஒரு புதிய உலகமொன்றில் சஞ்சரிப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது.

'போட்டோ கிராபி'யைத்தான் இங்கு முழுக்க் முழுக்கக் குறிப்பிடுகிறேன். காட்சிகளை எந்தெந்தக் கோணத்தில் வைத்து எப்படி எப்படியெல்லாம் பிடிக்க முடியுமோ-அப்படியெலாம் பிரமிக்கத்தக்க வகையில் பிடித்திருக்கிறார்கள்! தமிழ்ப் படவுலகைப் பொறுத்தவரையில்- 'அற்புதம்' என்று கூட ஒரு தடவை வாய்விட்டுச் சொல்லலாம் போல் தோன்றுகிறது!


எந்தக் காட்சியைக் குறிப்பிட்டுச் சொல்வதென்றே தெரியவில்லை. காட்சிக்குள்ளேயே போட்டி! ராஜஸ்தான் பகுதிகளைக் காட்டுகிறார்கள். ராஜஸ்தான் மாளிகை-பளபளக்கும் அந்த மாளிகையில் பளிங்குச் சிலை போன்ற ஜெயலலிதாவும், 'இந்த வயதி'லும் இளமை சொட்டும் எம். ஜி ஆடும் ஆடிப்பாடுவதே தனி அழகு!

இனிக்கும் கலரில் இதயத்தைக் கொள்ளை கொள்ளும் விதத்தில் காட்சிகளை எடுத்திருக்கிறார்கள்-அந்தக் கொள்ளை கொள்ளும் காட்சிகளுக்காகவே ஒரு தடவை என்ன, பல தடவை பல லட்ச ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்தப் படத்தைப் பார்க்கலாமே!

''ஆங்கிலப் படத்துடன் போட்டிபோடக் கூடிய விதத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது ''அடிமைப் பெண்'' என்று மனம் விட்டுப் புகழ்ந்திருக்கிறார் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி! போதாதா, இந்த ஒரு புகழுரை 'அடிமைப் பெண்'ணின் சிறப்புக்கு!

யாழ்ப்பாணத்தில் 'அடிமைப் பெண்' ணுக்கு முதல் 15 நாளிலும் வசூல் என்ன தெரியுமா? ஒரு லட்சம் ரூபாய் என்கிறார்கள் தியேட்டர் காரர்கள்; அசுரசாதனை!

— ராஜகோபால்






## பொங்கல் விருந்து

"பெண்தெய்வம்'' ரசிகர்களுக்கு பொங்கல் விருந்து! ஆனால் இலங்கை ரசிகர்களுக்கல்ல!!

தண்டாயுதபாணி பிலிம்சாரின்இந்தப்படத்தில்ஜெய்சங்கர், பத்மினி, நாகேஷ் ஆகியோர் நடித்துள்ளனர்.

## "மாடலாக" சௌகார்

ஹோட்டல் ஒன்றின் ''மாடலாக' [நாகரீக நங்கை] நடிக்கிறார். சௌகார் ஜானகி! பர்மா அழகிபோல் காட்சிதரும் இவர் கவர்ச்சி நடனம் ஒன்று ஆடுகிறார்.

இப்படிப்பட்ட காட்சிகளை ''அன்னமிட்டகை'' படத்தில் பார்க்கலாம். எம். ஜி. ஆர், ஜெயலலிதா, நாகேஷ் ஆகியோர் நடிக்கிறார்கள். கலரில் இப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

## ★நீண்ட நாட்களுக்குப்பின் எம். ஜி. ஆர். குதிரைச் சவாரி செய்து சண்டை பிடிக்கிறார்!

ஒரு காலத்தில் இரட்டை வேடத்தில் சிறப்பாக நடித்ததன்மூலம் ரசிகர்களின் இதயத்தில் நிறைந்திருந்த எம். கே. ராதா நடித்த 'அபூர்வ சகோதரர்கள்' படத்தை மீண்டும் எடுக்கிறார்களல்லவா? ராதா நடித்த இரட்டை வேடத்தில் எம். ஜி. ஆர். நடிக்கிறார்.

ஜெமினி படப்பிடிப்பு நிலையத்தில் இப்படம் வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப்படத்தில் எம். ஜி. ஆரின் ஜோடியாக வழக்கம்போல் ஜெயலலிதா நடிக்கிறார்.

ரசிகர்களுக்கு இன்னுமோர் மகிழ்ச்சியான செய்தி: எம். ஜி. ஆர். குதிரைச் சவாரி செய்து கொண்டே எதிரிகளுடன் மோதும் சண்டைக் காட்சியை நீண்ட நாட்களுக்குப் பின்பு ரசிகர்கள் கண்டு களிக்கப் போகிறார்கள்.

குதிரையில் பாய்ந்து சண்டைபோடும் காட்சியில் நடிக்கிறார் எம். ஜி. ஆர்.

அசோகன், மனோரமா, டி. கே. பகவதி, 'சோ' தேங்காய் சீனிவாசன் ஆகியோர் இந்தப்படத்தில் நடிக்கிறார்கள்.

ப. நீலகண்டன் இந்தப் படத்தை டைரக்ட் செய்கிறார்.

## மதுமயக்கத்தில் விஜயலலிதாவுடன் முத்துராமன் நடனம்

அழகி விஜயலலிதா சுழன்று சுழன்று நடனம் ஆடிக்கொண்டிருந்தார்!

புட்டி புட்டியாகமதுவைக் குடித்துத்தள்ளிக்கொண்டே விஜயலலிதாவின் நடனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார் முத்துராமன். திடீரென்று விஜயலலிதா மீது காதல்வெறி கொண்டார். ஒரு கையில் மதுப்புட்டியுடன்தள்ளாடியபடிநடந்து போய் விஜயலலிதாவைக் கட்டிப்பிடித்தார்.

அப்போது இசைக்குழுவினர் ஆங்கிலஇசை முழங்கினர்கள். முத்துராமனும், விஜயலலிதாவும் கட்டிப் பிடித்து 'ராக்கன் ரோல்' நடனம் ஆடினார்கள்.


ஒளிசிந்தும் வண்ணவிளக்குகள் மின்னிக்கொண்டிருந்தன.

இந்தக்காட்சி தேவாலயத்தின் 'கண்ணன் வருவான்' என்ற படத்துக்காக சாரதா படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது.

ஜெய்சங்கர் லட்சுமி ஜோடியுடன் நிர்மலா, நாகேஷ் மனோகர். சுந்தரராஜன் ஆகியோர் இந்தப்படத்தில் நடிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரப் பயணம்-3



## அண்டவெளியில் மனிதன் நீண்ட நேரம் சஞ்சாரம்

1965, மார்ச் 23-ந் திகதி ஜெமினி-3 விண்வெளிக்குப் புறப்பட்டது. இதில் வேர்ஜில் ஐ. கிறிஸமும் ஜோன் டபிள்யூ. யங் என்பவரும் பிரயாணம் செய்தார்கள். பூமியை மூன்று தடவைகள் இவர்கள் வலம்வந்தனர். நான்கு மணி 53 நிமிடங்கள் வானவெளியில் சஞ்சரித்தனர். ஜெமினி -3 பிரயாணம் வானவெளி ஆராய்ச்சியில் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்ததாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். அன்றையதினம் கென்னடி முனையிலிருந்துடைட்டன் 11 என்ற ஏவுகணை ஜெமினி-3 கலத்தை விண்வெளிக்கு எடுத்துச்சென்று பூமியைச் சுற்றியபாதையில் விடுத்தது ஏறத்தாழ ஒருமணி நேரத்துக்குப்பின்னர் கிறிஸம் கலத்தின் முன் முனையிலிருந்த இருவிசைகளை இயக்கி அதனைப் புதிய பாதையில் திருப்பினார். பூமியை நீள்வட்டப்பாதையில் சுற்றிக்கொண்டிருந்த கலம் வட்டமாகச் சுற்றத் தொடங்கியது. விண்வெளி ஆராய்ச்சிவரலாற்றில் விண்வெளிக்கலம் ஒன்று அதனைச் செலுத்துபவரின் கட்டுப்பாட்டில் பாதை திருப்பி ஓட்டப்பட்டது இதுவே முதல்தடவையாகும்.

அதன்பின்னர் ஜெமினி-3 பூமியை மேலும் ஒரு தடவை சுற்றி வந்தபோது கிறிஸம் அதனைப் பக்கவாட்டில் திருப்பி இன்னொரு ரொக்கட்டைத் தீர்த்து கலத்தின் சுற்றுப்பாதையை ஐந்தில் ஒருபாகைக்கு நகர்த்தினார். இதுவும் விண்வெளி ஆராய்ச்சித்துறையில் முதல் சாதனையாகும்.

இந்தப்பயிற்சிகள் முன்னால் வரப்போகும் அப்பலோ பயணங்களுக்கான ஏற்பாடுகளேயாகும். ஜெமினி-3 சாதனைகள்மூலம் விண்வெளியில் மனிதனால் இலகுவாக இயங்கக்கூடிய விண்கலங்களை உருவாக்குவதில் விஞ்ஞானிகளுக்கு புதிய நம்பிக்கை ஏற்படலாயிற்று.

மேர்க்குரி விண்வெளிக் கலங்கள், ஏவுகணைகள் எடுத்துச் சென்று விடுத்த நிலையிலேயே பூமியைச் சுற்றிவந்தன. ஆனால் ஜெமினிகலம் ஏவுகணை விடுத்த கட்டத்திற்கு அப்பால் விமானிகளே அவைகளை இயக்கி வேறு திசைகளுக்குக் கொண்டுபோகும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்தன. மேர்க்குரி விண்வெளிப் பிரயாணிகள் வெறும் பார்வையாளர்கள்போல்தான் விண்ணில் பறந்தனர். ஆனால் ஜெமினி பயணங்கள் முற்றிலும் வேறுபட்டிருந்ததோடு, அவைகளின் நோக்கமும் வேறுபட்டவையாக இருந்தன.

ஜெமினி விண்வெளிக் கலங்கள், அவைகளின் பிரயாணிகளாலேயே இயக்கப்பட்டது மட்டுமின்றி வேகத்தை மாற்றவும், பூமியுடனான தூரத்தைக் குறைக்கவும் பூமியை நோக்கிய பாதையை மாற்றிச் செலுத்தவும்கூட வசதியாய் விளங்கின மேலும் விண்வெளியில் சுழலும் இன்னொரு கலத்தை பல மைல்களுக்கப்பால் வைத்தே கண்டுகொள்ளவும் அதன் அருகில் நெருங்கிச் செல்லவும் கூட ஜெமினி கலங்களால் முடிந்துள்ளது. சந்திரப் பயணத்திற்கு இந்தப்பயிற்சி மிகவும் அத்தியாவசியமான தொன்றாகக் கருதப்பட்டது. இம் மட்டல்ல மற்றக் கலங்களுக்கருகில் நெருங்கிச் சென்று தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவும், ஒன்றோடொன்று இணைந்துகொள்ளவும் விண்வெளியில் நடக்கவும் ஜெமினி பிரயாணிகளால் சாத்தியமாயிற்று.


ஜெமினி-3 கலத்தின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தின் பின்னர் தொடர்ந்து நடைபெற்ற ஜெமினி பயணங்கள் ஒவ்வொன்றுமே புதிய சாதனைகளை நிலைநாட்டின. இவைகள் சாதனைகள் என்று குறிப்பிடுவதைவிட சந்திர பயணத்துக்கான அல்லது அப்பலோ திட்டத்திற்கான பயிற்சிகள் என்று குறிப்பிடுவதே சாலப்பொருத்தமாகும்.

### ஜெமினி செயற்கைக் கிரகங்களும் அவைகளைச் செலுத்திய வீரர்களும்

1965 ஜூன் மாதம் 3-ந் திகதி (3-7) ஜெமினி-4 செலுத்தப்பட்டது இதில் ஜேம்ஸ் ஏ மெக்டிவிட், எட்வார்ட் எச். வைட் ஆகியவர்கள் சென்றார்கள். இவர்கள் விண்வெளியில் 97 மணி 48 நிமிடங்கள் சஞ்சரித்து 62 தடவைகள் பூமியைச் சுற்றிவந்தார்கள். எட்வார்ட் வைட் 21 நிமிடங்கள் கலத்துக்கு வெளியே அண்ட-வெளியில் நடந்தார். இவரே விண்ணில் நடந்த முதல் அமெரிக்கராவர்.

1965 ஆகஸ்ட் மாதம் 21-ந் திகதி (21 — 29) ஜெமினி 5 செலுத்தப்பட்டது. இதில் எல். கோர்டன் கூப்பர், சார்ள்ஸ் கொன்ராட் ஆகிய இருவரும் 120 தடவைகள் பூமியைச் சுற்றி வந்தனர். இவர்கள் எடுத்த நேரம் 190 மணி56நிமிடங்கள். இதுவே முதல்தடவையாக மனிதன் நீண்டநேரம் விண்வெளியில் சஞ்சரித்த சாதனை. இதில் பிரயாணம் செய்த கூப்பர் ஏற்கெனவே 1963-ல் மெர்க்குரி கலத்தில் விண்வெளி பிரயாணம் செய்தவர். இரண்டு தடவைகள் விண்வெளிப் பயணம்செய்த முதல் மனிதர் என்றபெருமை இவருக்குக் கிடைத்தது,





### விண்வெளி ஆராய்ச்சியில் புதிய சகாப்தம் உதயம்

1965 டிசம்பர் 4-ந் திகதி (4-18) ஜெமினி - 7 விண்வெளிக்குச் செலுத்தப்பட்டது. பிராங்க் போர்மனும், ஜேம்ஸ் லோவலும் இதில் 206 தடவைகள் பூமியைச் சுற்றிவந்தனர். இவர்கள் எடுத்தநேரம் 330 மணி 35 நிமிடங்கள். மனிதன் விண்வெளியில் நீடித்தநேரம் சஞ்சரிக்கும் சாதனையை இவர்கள் நிகழ்த்தினார்கள். ஏறத்தாழ இருவாரங்கள் விண்வெளியில் இவர்கள் இருந்துள்ளனர்.

1965 டிசெம்பர் 15-ந் திகதி (15—16) ஜெமினி-6A விண்வெளிக்கு செலுத்தப்பட்டது இதில் பிரயாணம் செய்தவர்கள் வால்ட்டர் எம். ஸ்சிரா என்பவரும் தோமஸ் பி: ஸ்டாபோர்ட் என்பவருமாகும். 26 மணி 52 நிமிடங்கள் விண்ணில் சஞ்சரித்த இவர்கள் 16 தடவைகள் பூமியை வலம்வந்தனர். இவர்கள் தமது கலத்தை ஜெமினி-7 கலத்தின் அருகில் ஒரு அடிக்குள்நெருக்கமாகச் செலுத்தி ஒரு சாதனையை நிலைநாட்டினார்கள்.

ஜெமினி-8, 1966-மார்ச் மாதம் 16-ந் திகதி (16-17) செலுத்தப்பட்டது இதில் நீல் ஏ. ஆம்ஸ்ரோங்கும் டேவிட் ஆர். ஸ்கொட் என்பவரும் பிரயாணம் செய்தனர். இவர்கள் 10 மணி 42 நிமிடங்கள் விண்வெளியில் சஞ்சரித்தனர். ஏற்கெனவே சுழன்றுகொண்டிருந்த கலத்தின் அருகில் நெருங்கிச் சென்று தமதுகலத்தை அதனுடன் இணைக்கும் சாதனையை இவர்கள் நிகழ்த்தினார்கள். இருகலங்கள் விண்வெளியில் ஒன்றாக இணைக்கப்பெற்றது இதுவே முதல் தடவை.

1966 ஜூன் 3-ந் திகதி (3—6) ஜெமினி 9-A தோமஸ் பி. ஸ்டாபோர்ட், இயூஜின் ஏ செர்னன் ஆகிய இருவருடன்விண்வெளிக்குச் சென்றது. 44 தடவைகள் பூமியைச் சுற்றிய இவர்கள் 72 மணி 21 நிமிடங்கள் வான்வெளியில் சஞ்சரித்தார்கள். இயூஜின் செர்னன் கலத்துக்கு வெளியே இரண்டுமணி நேரம் அண்டவெளியில் நடந்து ஒரு சாதனையை ஏற்படுத்தினார். தோமஸ் ஸ்டாபோர்ட் தமது கலத்தை குறிக்கப்பட்ட இலக்கின் அருகில் மூன்றுமுறை செலுத்திவெற்றிபெற்றார்.

ஜெமினி 10. 1966 ஜூலை 18-ந் திகதி(19—21)செலுத்தப்பட்டது. இதில் ஜோன். டபிள்யு. யங்கும் மைக்கேல் கொல்லின்சும் பிரயாணம் செய்தனர். 43 தடவைகள் பூமியைச்சுற்றிய இவர்கள் 70 மணி 47 நிமிடங்கள்விண்ணில் சஞ்சரித்தனர்.

1966 செப்டம்பர் 12-ம் திகதி (12-15) ஜெமினி-11 சார்ல்ஸ் கொன்ராடையும் ரிச்சார்ட் எஃப் கோர்டனையும் சுமந்துகொண்டு விண்வெளிக்குப் போயிற்று 44 தடவைகள் பூமியைச் சுற்றிய இது 71 மணி 17 நிமிடங்கள் விண்ணில் உலவியது. குறித்த இலக்கை நோக்கி நெருங்கிச் செல்வதும் இன்னொரு கலத்துடன் இணைவதும் இதன் நோக்கமாயிருந்தது. ஜெமினிதிட்டம்முடியும்கட்டத்தை அண்மியபோது மேலும் பல புதிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

ஜெமின்-12 கலத்தில் 1966 நவம்பர் மாதம் பிரயாணம்செய்த எட்வின் ஆல்டிரின் அண்டவெளியில் இரண்டுமணி ஒன்பது நிமிடங்கள் உலவியதின்மூலம் புதிய சாதனையொன்றை ஏற்படுத்தினார். விண்கலத்தின் திறந்த வாயிலில் மேலும் மூன்றரைமணிநேரம் நின்றபடியே அவர் புகைப்படங்கள் எடுத்தார். இவருடன் பிரயாணம் செய்த ஜேம்ஸ் லெவல் ஏற்கெனவே ஜெமினி 7 கலத்தில் பூமியை 206 தடவை வலம்வந்திருந்தார். இந்தத் தடவை மேலும் 56 தடவை பூமியைச்சுற்றியதின்மூலம் விண்வெளியில் அதிகதூரம் பிரயாணம் செய்தவரானார். இவர்கள் வான்வெளியில் சஞ்சரித்தநேரம் 94 மணி33 நிமிடங்களாகும் (வளரும்)

---

**நாஸா**

நாஸா -(NASA தேசிய வான் பயண இயல் -வெளி வான் ஆராய்ச்சி நிர்வாகக் கழகம் 1957-ல் உருவாக்கப்பட்டதாகக் கடந்த வாரம் பிரசுரமாகியிருந்தது. 1958-ல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. என்றிருக்க வேண்டும்.

---

# குரக்கன்துறை என்பது

காங்கேசன்துறையின் அநாதியான பெயர் என்ற தலைப்பில் 'ஈழநாடு' இதழில் யான் முன்னர் எழுதிய கட்டுரையில் காங்கேசன்துறை கயாத்துறைக்கு முன் குரக்கன்துறை என அழைக்கப்பட்டதெனவும், குரக்கன், சாமை போன்ற உணவுத்தானியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதனால் இந்நாமம் ஏற்பட்டதெனவும் ஈழத்துணவில் பிறநாட்டினர் விருப்பு வைத்திருந்தார்களெனவும் யாழ்ப்பாண வியாபாரிகள் நாகப்பட்டின சந்தைக்குச் சென்று வியாபாரம் செய்தார்களெனவும் இத்துறையின்கண் அநாதிமூர்த்தியாக வீற்றிருக்கும் ஸ்ரீவீரபத்திரகுருசுவாமி கோவில் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். இக்கருத்தை மறுத்து திரு. க. ஏரம்பமூர்த்தியவர்கள் 30-12-69 'ஈழநாடு' இதழில் ஒரு கட்டுரையை வரைந்திருந்தார்கள்.

காங்கேசன்துறையிலுள்ள கசாத்துறைப்பிள்ளையார் கோவிலின் நிர்வாக உரிமையுடைய திரு. க. ஏரம்பமூர்த்தி அவர்களின் ஒத்துழைப்புடன் அப்பிள்ளையார் கோவில் பூசகராகப் பணிபுரிந்த திரு. இரா. சுந்தரராச சர்மா அவர்களினால் எழுதப்பட்ட கோவிற்கடவை என்ற நூலில் கயாத்துறைக்குமுன் குரக்கன்துறையென்றே காங்கேசன்துறை அழைக்கப்பட்டதெனக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**கோவிற்கடவை**

கோவிற்கடவையென்ற நூல் காங்கேசன்துறை, கீரிமலை, மாவிட்டபுரம் என்பவற்றின் சரித்திரங்களைப் பற்றிக் கூறுகின்றது.

காங்கேசன்துறை, குரக்கன்துறை, ஜம்புத் துறை,

கசாத்துறை யெனப்
பெயர்களைக் கொ
ளது. இத்துறைமுக
பற் போக்குவரத்
ஏற்ற அமைப்புட
யது.''

(கோ. க-

''இங்கு குரக்கன்
ஏற்றுமதி செய்யப்
ல் குரக்கன் து
அழைக்கப்பட்டிருக்
பருத்தி ஏற்றுமதி
பட்டதனால் பருத்தி
என்ற பெயர் நி
போல இப்பெயரும்
ருக்கலாம்.''

(கோ. க-

அநாதிநாமமாகிய
கன்துறைக்குப்பின்
துறை, காங்கேசன்
என்ற நாமங்கள்
பின்பும் காங்கேச
யின் சில பகுதிகளு
க்கன்துறையென்ற
நாமம் வழங்கி வரு
இங்கே வசித்த
சிலர் நாளடைவில்
கன்துறையென்ற ப
சென்று மீன்பிடித்
யன்றி அத்துறை
மீன்பிடித்துறையல்
யபெயர்
பழைய பெயர்கள்
கொழுந்து பே கு
கூறுவதை ஏற்றுக்
முடியாது. யாழ்
சரித்திரங்களை ஆ
காட்டுபவர்கள்
ணத்தின் அநாதிநா
மணற்றி இன்றும்
பாணத்தின் சில
க்கு உரிய பெயரா
குவதை மறு

**உண்மைக்கு மாறு**

குரக்கன்துறை
திர குருசுவாமி
இவ்வாலயம்
காலத்தில்
னக் கூறுவது உ
மாறான செய்தியா
வாலயம் மதுரை
வந்து இங்கு
எழுவரென்ற
ஆசாரசீலரினால்
கப்பட்டது. இ
னி யந்திரம்
ருந்து தங்கப்
கொண்டுவரப் ப
பது கர்ணபரம்ப
யாகும். இவ்வெழு
பரையில் வந்தவரே
கட்டியாரென்ப
அவரின் பிள்ளைக
வர். பூதர், புழை
பவராவர். காங்கே
யின் மேற்குப்ப
தோம்புக்காலத்துக்
பும் மக்கள் வசித்த
வர் சந்ததியில்
பட்டங்கட்டியார்
சந்ததியில் உள்
என்ற நாமத்தை
மூத்தமகனுக்குச்
தங்கள் தங்கள் ச
உள்ளவர்களின் ந
தங்கள் பிற்சந்த
குச் சூட்டுவது
வழக்கத்திலிருந்து
றது. தோம்புக்கா
முன் வாழ்ந்த
நாமத்தை மறைத்
திய எழுவரின்
தையே மூர்த்தி
தமது கட்டுரையி
யுள்ளார். எழுவா
புழையர் என்ற
தெல்லிப்பழை
வந்து குடியேறின
வும் காங்கேசன்
கிழக்குப்பகுதியி
ஒரு பகுதியினர்
நாட்டிலிருந்து
ளெனவும் கூறுவது
யற்றதாகும்.

குரக்கன்துறை
திருகுருசுவாமி
என்ற பெயர்
ஆண்டில் சூட்ட
தெனக் கூறுவது
வேதனைக்குரிய வி
கும். இன்றும் இ
மானை இங்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ஒரு மீன்பிடித்துறை
# ...து விண் புரவி

யனூப் பல
கொண்டுள்
றமுகம் கப்
வரத்துக்கு
ப்புடன் கூடி

ா. க- பக் 13)
க்கன் அதிகம்
சய்யப்பட்டத
ன் துறையாக
டிருக்க லாம்.
மதி செய்யப்
ருத்தித்துறை
ர் நிலைத்தது
யரும் இருந்தி

கா. க- பக்14)
மாகிய குரக்
ப்பின் கசாத்
கசன் துறை
கள் ஏற்பட்ட
ங்கேசன்துறை
திகளுக்குக் குர
யன்ற பழைய
கி வருகின்றது.
த்த மக்களிற்
டவில் இக்குரக்
ன்ற பகுதிக்குச்
பிடித்தார்களே
றை ஆதியில்
றையல்ல.
ர் ...ான்றினால்
யர்கள் வழக்
ப குமெனக்
ஏற்றுக்கொள்ள
யாழ்ப்பாணச்
ள ஆதாரங்
கள் யாழ்ப்பா
நாதிநாமமாகிய
ன்றும் யாழ்ப்
சில பகுதிகளு
பெயராக விளங்
ட்ரா?

மாறு
றை ஸ்ரீ வீரபத்
மி கோயில்
கதிர்காமர்
தோன்றியதெ
து உண்மைக்கு
ந்தியாகும். இவ்
துரையிலிருந்து
கு குடியேறிய
வீரசைவ
றல் ஸ்தாபிக்
இப்பெருமா
...துரையிலி
ங்கபபேழையில்
ப் பட்டதென்
ரம்பரைக்கதை
வெழுவர் பரம்
ந்தவரே பட்டங்
ரென்பவராவர்.
ள்ளைகளே எழு
புழையர் என்
ாங்கேசன்துறை
குப்பகுதியில்
லத்துக்கு முன்
வசித்தனர். எழு
பில் தோன்றிய
டியார் தங்கள்
உள்ள எழுவர்
த்தைத் தனது
க்குச் சூட்டினார்
கள் சந்ததியில்
ரின் நாமத்தை
ற்சந்ததியினருக்
வது இன்றும்
ருந்து வருகின்
ம்புக்காலத்துக்கு
ந்த எழுவரின்
மறைத்துப் பிந்
ன் நாமத்
ர்த்தி அவர்கள்
ரையில் காட்டி
எழுவர், பூதர்,
என்ற மூவரும்
பழையிலிருந்து
யேறினார்களென
கேசன் துறையின்
தியில் வசிக்கும்
னர் தெலுங்கு
ந்து வந்தவர்க
றுவது உண்மை

நுறை ஸ்ரீவீரபத்
வாமி கோவில்
பயர் 1968-ம்
ட்டப்பட்ட
றுவது மிகவும்
ரிய விடயமா
ம் இப்பெரு
குள்ள மக்கள்

''குரக்கன்துறைக் குரவோன்'' எனப் போற்றிப் புகழ்வதை நேரில் காணலாம். இங்கு வாழ்ந்த மக்கள் இக்கோவிலையடைந்து அங்குள்ள குருமார்களிடத்திலே சிவதீட்சை பெறுவது வழக்கம். இதனாலே அங்கு அநாதியில் வாழ்ந்தமக்கள் அப்பெருமானை ஸ்ரீவீரபத்திரகுருசுவாமி எனப்போற்றினார்கள். இக்கோவில் மூலஸ்தான மூர்த்தி மார்பிலே செச்சையும் சிரசிலே சிவலிங்கமும் கொண்டு குருமுகூர்த்தமாய்க்காட்சியளிப்பதைக்காணலாம். சிலர் வீரபத்திரகுருசுவாமி என்ற பெயரைச் சுருக்கமாக வீரபத்திரர் எனவும் அழைக்கின்றனர்.

**—குமாரசாமி—**

பல நூற்றாண்டுகளுக்கு முன் சீருஞ் சிறப்புடனும் விளங்கிய இவ்வாலயம் பிற்காலத்தில் மதில்களும் தூபிகளும் சிதைவுபெற்று பாழடைந்து காணப்பட்டது. பிற்காலத்தில் தோன்றிய குருபக்தியுள்ள மக்கள் இக்கோவிலின் திருப்பணியைச் செய்வித்து நித்தியபூசைகள் நடைபெறக்கூடிய வழிவகைகளைச் செய்வித்தார்கள். இவ்வாலயத்தின் தலவிருட்சமாகிய அரசவிருட்சநிழலில் பாரதநாட்டுக்கு யாத்திரை செய்யும் யாத்திரீகர்கள் தங்கிச்சென்றார்களென அறியக்கிடக்கின்றது. இக்கோவில் பற்றிக் கூறும் பாடல்களில் உள்ள சில வரிகளை ஈண்டுக்காண்போம்.

''மதுரையிலிருந்து வடும்
பரம யந்திரமேறி
வானரச நிழல் தன்னில்
பரவுசடை முடிநடுவில்
சுடருடைய சிவலிங்கம்
பயில''

''தெண்டிரையெழுங்
குரக்கன்துறைப்பதிமேவு
ஸ்ரீ வீரபத்திரகுருவே''

''குரக்கன் துறையின்
குரு மணியே''

**பொருந்தாக்கூற்று**

தெல்லிப்பழைக்கரை என்பதற்கு தெல்லிப்பழைக் கரையார் என விளக்கங் கொடுத்திருப்பது விந்தைக்குரியது. இங்கே குருகுலமக்கள் மட்டும் வாழவில்லை. இன்றும் இக்கரையுடன் கூடிய விவசாய நிலங்களில் சைவவேளாளர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்வது மட்டுமன்றி கமமும் செய்கின்றார்கள். மற்றும் பல வர்ணத்தவர்களும் இக்கரைப்பிரதேசத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகின்றனர். இப்படியிருக்க தெல்லிப்பழைக்கரையென்பதற்கு தெல்லிப்பழைக் கரையாரென விளக்கங் கூறுவது எவ்வாறு பொருந்தும்.

தெல்லிப்பழையின் ஒரு பகுதியே தெல்லிப்பழைக் கரையாகும். முற்காலத்தில் காங்கேசன்துறை தெல்லிப்பழையுடன் கூடிய கிராமமாகும்.

''கயாவிலிருந்து கதிர்காம முருகனை வழிபட வேண்டி பவானந்த முனிவர் என்னும் தவ சிரேஷ்டர் இத்துறை வந்தடைந்தார். இதனால்கயாத்துறையெனப் பெயர்பெற்றது'' (கோ.க. பக்-15)

இவ்வாசிரியர் முனிவர் வந்தபின்தான் கயாத்துறையென்ற நாமம் ஏற்பட்டதாகக் கூறுகின்றார். முனிவர் கயாத்துறைக்குமுன் உள்ள ஒரு துறையில் வந்திறங்கினாரென்பது புலனாகின்றது. அப்படியானால் கயாத்துறைக்கு முந்திய துறையின் பெயர் யாதோ?

புத்த சமயத்தைச்சேர்ந்த யாத்திரீகர்கள் புத்த கயாவுக்கு யாத்திரைசெய்யத் தோணியேறும் துறையாய் இருந்தபடியால் இத்துறை கயாத்துறை என அழைக்கப்பட்டதாக 'ஈழநாடு' கட்டுரையில் குறிப்பிட்ட திரு. மூர்த்தி அவர்கள், அன்று பவானந்த முனிவர் வந்தபடியால் கயாத்துறை என்ற பெயர் ஏற்பட்டதெனக் கூறியிருப்பது முரண்பட்ட கருத்துக்களாம்.

காங்கேசன்துறை கயாத்துறையென அழைக்கப்பட்ட காலத்தில் ஒரு பிள்ளையார் கோயில் இருந்ததாகவும் அப்பிள்ளையார் பவானந்த முனிவரால் பூசிக்கப்பட்டவரென தட்சிண கைலாச புராணத்தில் கூறப்படுகிறதென கோயில் கடவையில் கூறப்படுகின்றது. மூர்த்தி அவர்கள் தாம் எழுதிய கட்டுரையில் தமது சொந்தக்கோவிலான பிள்ளையார் கோவில்பற்றிப் பெருமை கூறவந்த ...டத்து தெட்சிண கைலாசமான்மியம் கயாமுனிவராம் பவானந்த முனிவரால் வழிபடப்பட்டவர் கயாத்துறைப் பிள்ளையாரெனக் கூறுகின்றார். அன்று புராணமெனவும் இன்று மான்மியமெனவும் கூறப்படுவதேன்?

இப்பிள்ளையார் கோவில் மூர்த்தி அவர்களின் நாலாவது பரம்பரையைச்சேர்ந்த குருநாதர் என்பவரினாலே ஸ்தாபிக்கப்பட்டது. இக்கோவிலுக்கு காங்கேசன் துறையின் அநாதி நாமங்களில் ஒன்றாகிய கசாத்துறையென்ற நாமத்தை நினைவு கூரும்முகமாக கசாத்துறைப் பிள்ளையாரென நாமஞ்சூட்டினார்களேயன்றி காங்கேசன்துறை கயாத்துறையென அழைக்கப்பட்ட காலத்தில் தோன்றிய ஆலயமல்ல. பவானந்த முனிவரினால் வணங்கப்பட்டவருமல்ல. தட்ஷண கைலாச புராணத்தின் மூலம் உண்மையை விளங்கிக் கொள்ளலாம்.

**வீரசைவ வரலாறு**

இந்தியாவில் கி. பி. 12-ம் நூற்றாண்டில் வீரசைவம் உதயமானதெனக் கூறுவதையிட்டுச் சைவ உலகம் முழுவதுமே கவலைப்படும் என்பதில் சந்தேகமில்லை. அநாதி சைவமாகிய வீரசைவ மூலாசாரியர்களாகிய ரேணுகாதி பஞ்சாசாரியர்கள் வேத சிவாகமங்களில் இடம் பெறுகின்றனர். சிவபெருமான் பிரமனுக்குப் படைத்தல் தொழிலைக் கற்பிக்கும் பொருட்டுத் தனது சிருஷ்டியாகிய சிவசிருஷ்டி மூலம் ரேணுகாதி பஞ்சாசாரியர்களைத் தோற்றுவித்தாரென வீராகமம், யோகசாகமம் போன்ற சிவாகமங்களில் கூறப்படுகின்றது. இப் பஞ்சாசாரியர்கள் ஒவ்வொரு யுகத்திலும் வெவ்வேறு நாமங்களுடன் தோற்றுவார்களெனவும், விபீஷணன் காலத்தில் ஈழநாட்டுக்கு ரேணுகா சிவாச்சாரியார் ஆகாயமூலமாக வந்து மூன்று கோடி இலிங்கப் பிரதிட்டையைச் செய்தாரெனவும், விபீஷணன் வீரசைவனென் எனவும் சித்தாந்த சிகாமணி என்ற நூலில் காணக்கிடக்கின்றது இதிலிருந்து இராமாயண காலந்தொட்டு ஈழத்தில் வீரசைவம் இருந்துவருகின்றதென்பதை உணரலாம். பாரத நாட்டில் தனிச் சமயமாக ஒரு காலத்தில் மிளிர்ந்த வீரசைவம் ... ரின் எழுச்சியினால் நலிவுற்றது. பிற்காலத்தில் கி. பி. 12-ம் நூற்றாண்டில் தோன்றிய ஸ்ரீ வசபேசுவரரால் வீரசைவம் புனருத்தாரணஞ் செய்யப்பட்டதேயன்றி 12-ம் நூற்றாண்டில் தோற்றப்பட்டதல்ல.

நூலாசிரியர்கள் கருத்து வேற்றுமை கொள்ளலாம். ஆனால் பரம்பரை பரம்பரையாகக்கூறப்படும் கதைகளில் நம்பிக்கை கொள்ளவேண்டுமென்பதைத் தமது மூந்திய கட்டுரையில் வலியுறுத்திய மூர்த்தியவர்கள். குரக்கன் துறை விஷயத்திலும் ஸ்ரீவீரபத்திர குருசுவாமி கோவில் விடயத்திலும் பரம்பரை பரம்பரையாகச் சொல்லப் பட்டுவரும் கதைகளை மறுப்பது ...

# தேவாரத் திருவமுது—3

# ஏகாம்பரநாதரை அப்பாடிகள் தியானித்த வகை

**அங்கையில் அனலேந்தி இரவாடும் பெருமான்**

கரவாடும் வன்னெஞ்
சர்க்(கு) அரியானைக்
கரவார்பால்
விரவாடும் பெருமானை
விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ
அங்கையினில்
அனலேந்தி
இரவாடும் பெருமானை
என்மனத்தே
வைத்தேனே.

உள்ளத்தாற் பொய்யாது ஒழுகியவர் உலகம் உய்ய அவதரித்தவரான அப்பர் சுவாமிகள். அன்னை காமாட்சியம்மையாருக்கு அருள் சுரந்த எம்பிரான் ஏகாம்பரநாதரை அகமுறத் தியானிக்கத்தொடங்கிய அப்பர்சுவாமிகளது திருவாக்கில் முதன்முதலாக அமையுந்திருவாக்கு ''கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியான்'' என்பது

''கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா? அப்படியானால் அவர் எங்கே இருக்கிறார்?'' என்று இக்கால யுவர்களிற் பலர் கேட்கிறார்கள். இதற்கு விடையாகவே வாகீச வள்ளலார் வஞ்சனைகொண்ட வலிய உள்ளத்தினரால் உணர்தற்கும் அரியவன் இறைவன் என்றும், கரவில்லாதவர் உள்ளத்தினை ஒருபோதும் விட்டு நீங்காதவர் இறைவன் என்றும் அழுத்தமாகக் கூறுகிறார். அதுமாத்திரமா? 'விடை' என்பது எருது. விடையேறும் வித்தகன்-என இறைவனைச் சுட்டி விளக்குகிறார். பார்வைக்கு எருது போல் தோன்றுவது தருமதேவதை. இடபத்தில் இறைவன் எழுந்தருளுவது தருமநெறிப்படி உலகினை வழிநடத்துவதாகும். அறநெறியை மறநெறி ஒருபோதும் வெல்லாது. ஆனால் மறம் மலிந்த மனத்தினால் இறைவனை உணரமுடியாது. மறச்செயல் புரிவோரையும் மாண்டொழியவிடாது மறக்கருணை காட்டி, அதாவது தண்டனை கொடுத்துத் தரப்படுத்தும் சாதுரியமுடையவர் இறைவன் என்பதனை 'விடை''யேறும்வித்தகன்'' என்ற தொடராற் குறிப்பிடுகிறார்.

இனி இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேன் என்கிறார். அப்பெருமான் கொள்ளும் ஆட்டம் ஓய்வு ஒழிவு அற்றது அவர் குறிப்பிடும் இரவு சாதாரணமான இராக்காலம் அல்ல. அகிலமும் ஒடுங்கிய சர்வ சங்காரப் பிரளயகால இரவு. அந்த இரவிலே எல்லாம். சிவசக்தியில் ஒடுங்க சக்தியோடுகூடிய சிவனார் அழகிய திருக்கரத்திலே அக்கினிக் கொழுந்து ஓங்க, பணியாகப்பூண்டபாம்புகள் படம்விரித்து ஆட, முறுகிய சிவந்த சடைகள் ஆட்டத்தினால் அங்கும் இங்கும் தாழ்ந்துபடியச் செய்யும் ஆனந்தத் தாண்டவத்தை அகங்கொண்டு தியானிக்கிறார் அப்பர் பெருமான்.

**[க.வை.ஆ.சர்மா]**

**வானோர்க்கும் ஏனோர்க்கும் பெருமான்.**

தேனேக்குங் கிளிமழலை
உமைகேள்வன்
செழும்பவளம்
தானேக்குந் திருமேனி
தழலுருவாஞ் சங்கரனை
வானேக்கும்வளர்மதிசேர்
சடையானைவானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை
என் மனத்தே
வைத்தேனே.

உமைகேள்வனை, சங்கரனை சடையானை வானோர்க்கும் ஏனோர்க்கும் பெருமானைஎன் மனத்தே வைத்தேன் எனத் துணிந்து கூறுகிறார் வாக்சவள்ளலார். உமையம்மை தன் திருவாயிலிருந்து வரும் மழலைமொழியானது தேன் விரும்பும் மழலையாகவும் கிளிமழலையாகவும் சுவைக்கிறது சுகத்தைச் செய்பவன் சங்கரன். ஆன்மாக்களுக்கு எப்போதும் சுகத்தை அருளுபவர். அதனால் இறைவன் சங்கரன் எனப்போற்றப்படுகிறான். சங்கரனரது திருமேனியோ பவளம் விரும்புந் திருமேனியாகவும் இருக்கிறது. தழலுருவாகவும் ஒளிர்கிறது. எம்பிரானரது திருச்சடாமுடியோ எல்லையற்றது. எல்லையில்லாத வானமே விரும்புஞ் சடாமுடி என்பதனால் திருச்சடையின் பெருமையைஒருவாறுஉணரலாம். அத்திருச்சடையில் என்றுமே விளங்கும் வளர்மதியைக்காணலாம். ஆனால் வானத்திலோசிலபோதுதான் வளர்மதியைக் காணலாம். இப்பெருமையெல்லாம்வாய்ந்த இறைவன் வானோர்க்கும் பெருமான் ஏன் அகில பிரபஞ்சத்துக்குமே பெருமான் ஆவர். அப்பெருமானைத் தமியேன் அகம் உறத் தியானிக்கிறேன் எனப் பூரிக்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள். (2)

**எப்போதும் இனியவன்**

கைப்போது மலர்தூவிக்
காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத்
தொழநின்ற முதல்வனை

(12-ம் பக்கம் பார்க்க)

# தித்திப்பு

**சுருட்டோடு**

சைகோனில் அமெரிக்கச் சிப்பாய் ஒருவர் ஒருஜன்னலின் அருகே அமர்ந்து சுருட்டுப் புகைத்துக்கொண்டிருந்தார். அப்போது எங்கிருந்தோ வந்த துப்பாக்கி ரவை அவரின் சுருட்டு நுனியை உராசிச் சென்றது. 'இனிமேல் புகைப்பதையே விட்டுவிடப்போகிறேன்' என அந்த சிப்பாய் கூறியிருக்கிறார்.

0 0 0

**உயிருடன் பொரியல்**

நத்தார் பண்டிகைக்காக நன்றாக கொழுக்க வளர்க்கப்பட்ட 5000க்கு மேற்பட்ட கோழிகள் பண்ணையில் தீப்பிடித்ததன்விளைவாக அத்தீயில் உயிருடன் பொரிக்கப்பட்டன. இத்தாலியிலுள்ள ஊடின் என்னும் நகருக்கருகில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

0 0 0

**பழிக்குப்பழி**

இங்கிலாந்திலுள்ள குரோத்கான் என்னுமிடத்தில் கார் ஒன்று வேகமாகச் சென்றபோது வீட்டுவாயிலில் நின்ற ஒருபெண் தலையிலிருந்து பாதம்வரை சேற்றினால் அபிஷேகம் செய்யப்பட்டாள். அந்தக்கார் பின்னர் திரும்பிவரும்வரை காத்திருந்த அந்தப் பெண், அந்தச் சாரதியின்மீது வாளிநிறைய சேறுகலந்த தண்ணீரை ஊற்றி அபிஷேகஞ்செய்து பழிதீர்த்துக்கொண்டாள். சாரதி பொலிசில் புகார்செய்தும் அவர்கள் அவள்மீது நடவடிக்கை எடுக்க மறுத்துவிட்டனர்.

0 0 0

**'கென்னடி'விலை**

திருமதி ஜாக்குலின் ஒனாஸிஸ்—அமெரிக்க ஜனாதிபதியின் மனைவியாக—திருமதி ஜாக்குலின் கென்னடியாக 'வெள்ளை மாளிகை'யில் இருந்தபோது அவருக்கு 7 பவுன் 12 சில்லிங்குக்கு 'சுவெட்டர்' ஒன்றை திரு கென்னடி நத்தார் பரிசாக வழங்கியிருந்தார். அந்த 'சுவெட்டர்' ஜாக்கிக்கு பிடிக்கவில்லை. எனவே 'சுவெட்டரை' அந்தக் கம்பெனிக்குத் திருப்பியனுப்பிய ஜாக்கி அதற்குரிய பணத்தைத் திருப்பித்தரும்படி ஒரு கடிதத்தையும் அனுப்பியிருந்தார். பணம் திரும்பி வந்ததோ தெரியாது. ஆனால் அந்தக்கடிதம் சமீபத்தில் அதாவது பத்துவருடங்களுக்குப் பின்னர் 93 பவுண் தேடிக்கொடுத்தது.

தஸ்தாவேஜுகள், கையெழுத்துப்பிரதிகள், பிரபல கையெழுத்துக்கள் ஆகியவைகள் ஏலத்துக்கு விடப்பட்டபோது அந்தக் கடிதம் 93 பவுணுக்கு விலையாயிற்று,

திருகென்னடியின் கால்மேஸ் சம்பந்தமாக ஜாக்கி எழுதிய இரண்டு கடிதங்கள் 25 பவுணிலிருந்து 83 பவுண்வரை விலையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் மீன்களுக்கு பலவகை பயிற்சிகள்

— கி. அல்பேட் பங்கிராஸ் —


[ஒருவித மீன்கள் முட்டையிடுவதற்கு கடலிலிருந்து ஆறுகளுக்குச் செல்கின்றன என்றும், பின்னர் அதே மீன்களோ அல்லது அதன் குட்டிகளோ மீண்டும் முட்டையிடுவதற்கு அதே இடத்துக்கு இலக்குத் தவருமல் வருவதாகவும் கடந்த வாரம் கூறியிருந்தோம். அவற்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்த விதம்பற்றி இங்கு விபரிக்கப்படுகிறது ]

மீன்களின் இனப்பெருக்க காலத்தில் ஆற்றுக்குச்சென்று ஒருமீனை இலக்கு வைத்து அதன் முட்டையிலிருந்து வெளிவந்த மீன்குட்டியை ஒரு குறிக்கப்பட்ட பருவம் வந்ததும் பிடித்து அதில் ஓர் அழியாத அடையாளம்போட்டுவிடுவார்கள். பின்னர் அதை ஆற்றினுள் விட்டதும் வெளியேறும் பருவம் வந்தவுடன் அவை கடலுக்குள் சென்று மறைந்துவிடுகின்றன. பின்னர் அடுத்தபருவ (இனப்பெருக்க) காலத்தில் விஞ்ஞானிகள் அதே இடத்துக்குச் சென்று பார்த்தபொழுது முன்னர் அடையாளம் இடப்பட்ட மீன் அங்கு வந்துள்ளதைக் கண்டுபிடித்தார்கள், அத்துடன் இம்மீன்களின் கடல் வாழ்க்கையையும் ஆராய்ந்த விஞ்ஞானிகள் அம்மீன்களானது மிக ஆழமான கடலிலேயே வாழுகின்றன என்பதையும் பலமுறை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்தார்கள் என்னே! இம்மீன்களின் விநோதவாழ்க்கை.

இப்படியே மேற்கூறிய முறையில் முட்டையிடும் இனத்தில் இன்னென்ருன 'லாம்பிரே', 'பெட்ரோமைசோன்' ஆகிய ஆதிகாலமீனினங்கள் ஒருமுறை முட்டைகளை இட்டபின் இறந்துவிடுகின்றன. (இவை இப்போது அருமையாகக் காணப்படுகின்றன).

**சர்க்கஸ் விளையாடும் 'டோல்ஃபின்' மீனினம்**

'டோல்ஃபின்' என அழைக்கப்படும் நீர்வாழ் ஜந்தின் செயல்கள் விஞ்ஞானிகளுக்கே ஆச்சரியத்தையும் அத்துடன் மகிழ்வையும் அளித்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் இம்மீன்களைக் கொண்டு நீர்சர்க்கஸ்நடாத்துகின்றனர். அங்குள்ள ராணுவம், டோல்ஃபினைக் கொண்டு யுத்தத்தில் எதிரிகளின் நீரினுள் நடமாட்டங்களையும் அறிகின்றது. மேலும் இவை தீ மூட்டப்பட்ட வட்டங்களுடாகப் பாயவும், உல்லாசமாகக் குழந்தைகளை முதுகில் சுமந்துசெல்லவும் படகுகளை இழுக்கவும் பயிற்றப்பட்டுள்ளன.




இவைகளின் செயலை ஆராய்ந்தஅமெரிக்கவிஞ்ஞானி ஒருவர் இவ்வதிசய செயல்களை நோக்குமிடத்து 'மனிதனும்விலங்கும் கதைக்கும் நாள் வெகுதூரத்திலில்லை' என்று கூறினுர்.

இன்னும்சிலமீன்கள் இயற்கையாகவே மின்பாய்ச்சும் மீன்களும் (உதாரணம்: 'நார்சைன்', ஒளிவீசும் மீன்களும், தலைமேலும் வால் கீழுமாக நீந்தும் மீன்களும், மல்லாந்து படுத்தவாறு நீந்துகின்ற மீன்களும், நெடுந்தூரம்துள்ளிப்பாயும் மீன்களும், நீர்நிலையை ஒட்டிய நிலத்தில் தவழ்ந்து சிறிதுதூரம் செல்லவும், மரங்கள் நீரைஒட்டி இருப்பின் அவற்றின்மீதுசில அடிதூரம் ஏறவும்கூடியமீன்களும் கடலிலே வாழ்க்கை நடாத்துகின்றன.

விவசாயவளர்ச்சிக்கும் நோய்க்கிருமிகள் பரவாது தடுப்பதற்கும்கூடிய சில வகைமீன்கள் நீரில்வாழுகின்றன.

ஆறடி மனிதனின் அபூர்வ அறிவு அண்டத்துக் கோள்களுக்கே சென்றுவிட்டாலும், அதேநேரத்தில் நமது உணவிற்காக உபயோகப்படுத்தும் மீன்களின் பாசஉணர்ச்சிகள், கையாளும் யுக்திகள், அவைஆற்றும் சாதனைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துவதில் சந்தேகம் வேண்டியதே இல்லை.

# கானகத்துத் தேவதை [4]

வயது முப்பதுதானிருக்கும்; உயர்ந்த தோற்றம், காற்றின் வேகத்தைத் தாங்காது அவள் கூந்தல் எண்திசையும் பரவிப் பறந்தன. கையில் குழந்தையொன்றைத் தூக்கிப்பிடித்தவண்ணம் அழுது புலம்பிக்கொண்டிருந்தாள். அவளின் புலம்பல் காட்டில் எதிரொலித்து மீண்டும், மீண்டும் கேட்டது. ஓடிவந்த கண்ணன் ஒரு கணம் திகைத்து நின்ருன். மேலும் அவள் என்ன செய்கிருள் என்று பார்ப்பதற்காக ஓர் மரத்தின் பின்ஞல் ஒழிந்து நின்ருன். என்ன ஆச்சரியம்! அழுது புலம்பியவள் பிள்ளையைத் தரையில் கிடத்திவிட்டு, பலமாகச் சிரித்தாள். அவளின் சிரிப்பொலி கேட்டு கானகமே அதிர்ந்தது. பின் அக்குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு மீண்டும் யாகவிருக்குமோ? அவள் நிற்குமிடத்தை ஒரு கணம் நோக்கினுன். சுற்றுமுற்றும் இறந்துபோன மிருகங்களின் எலும்புக்கூடும், பாம்புப் புற்றுக்களும், மனித மண்டையோடுகளும் அங்குமிங்கும் சிதறிக்கிடந்தன. இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது கண்ணனுக்குப் பயமாகத்தானிருந்தது. இருந்தும் பொறுத்திருந்து பார்ப்போமேயென்றெண்ணியவனுய் மரத்தின் பின்ஞல் ஒழிந்து நின்று அவளை நோக்கியவண்ணமிருந்தான். ஆதவன் மறையத் தொடங்கினுன். அவள் என்னசெய்கிருள் என்று பார்ப்பதற்காகத் தலையை நீட்டி அவளை நோக்கினுன் அவ்வேளை அவள் அவனைக் கண்டுகொண்டாள்

''தம்பி, தம்பி'' இங்கே ஓடிவா. மனிதசஞ்சாரமற்ற

— க. கனகலிங்கம் —

புலம்பலானுள். கண்ணனுக்கு இதெல்லாம் வியப்பாக இருந்தது. பொறுத்திருந்து பார்ப்போமே என எண்ணியவனுய் மரத்தின் பின்ஞல் ஒழிந்து நின்ற கண்ணனின் உள்ளம் பலவகைக் கேள்விகளைக் கேட்டது.

இவள் யார்? மனித சஞ்சாரமேயற்ற இக்கொடிய விலங்குகள் வாழும் பயங்கரக் காட்டிற்கு இவள் ஏன் வரவேண்டும்? இவளது பிள்ளைக்கு என்ன நேர்ந்துவிட்டது? ''அம்மா, அம்மா'' வென்று யாரை அழைக்கின்ருள்? அப்படி அவளுக்கு என்னதான் நேர்ந்துவிட்டதோ? ஒரு வேளை, இவள் பைத்தியக்காரியாயிருக்குமோ? ஒரு வேளை முன்பு பாட்டி சொன்ன கதைமாதிரி இவள் ஒரு தேவதை இக்கொடிய காட்டில் உன்னைத்தவிர வேறு யார் தம்பி எனக்குத்துணை; ஓடிவாரும் பயப்படவேண்டாம் என்று கெஞ்சியழைத்தாள். அவளின் வார்த்தைகளைக் கேட்டதும் கண்ணனுக்கு அவள் மேல் இரக்கமும் ஒருபுறம் பயமும் மாறி மாறி வந்தன. நடக்கிறது நடக்கட்டும் என்று எண்ணியவனுய் துணிவை வரவழைத்துக்கொண்டு அவளிடம் சென்ருன். அவள் வைத்தகண் வாங்காது அவனை நோக்கினுள். என்ன தம்பி யோசிக்கிறீர், நான் யாரென்று அறிய ஆவலாக இருக்கின்றதா? அதை நானே சொல்கின்றேன் என்று சொல்ல ஆரம்பித்தாள்......

(தொடரும்)

## உங்கள் கடிதங்கள்

''வாரம் ஒரு மலராக மலருகின்றமாணவர்மலரே, உன் நறுமணத்தை தவருது நுகருகின்ற பற்பலருள் நானுமொருவன். நீ தாங்கிவரும் விடயங்கள் அத்தனையும் தித்திக்கும்; தீஞ்சுவை யூறும்; எத்திக்கும் புகழ் பரப்பும்.

நீ தொடர்ந்துசிறப்புடன் மலர்ந்து, நறுமணம் வீச வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

அ. கனகசூரியர்,
ஊரெழு மேற்கு.

நாங்கள்அனுப்பிவைக்கும் விஷயங்களை உடனுக்குடன் பிரசுரிக்காமல், காலம்தாமதித்தே பிரசுரிக்கிறீர்களே! ஏன்? எங்கள் மீது கோபமா?

சி. புண்ணியலிங்கம்,
சி. அருள்,
வெட்டாக்காடு, நெடுந்தீவு.

[ஏற்கனவே எம்மிடம் வந்துசேர்ந்த விடயங்கள் ஏராளமாகவிருப்பதால், அவற்றுக்கும் ஆதரவு கொடுத்து எல்லோரையும் ஊக்குவிக்கவேண்டும் என்பதற்காக சிலவேளை தங்கள்விடயங்கள் பிரசுரமாகுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். உடனே பிரசுரமாகக் கூடிய விடயங்கள் பிரசுரமாகுவதில் தாமதம் ஏற்பட்டிருக்க மாட்டாதே!]

## நன்றி

மாணவ, மாணவிகளுக்கு மாணவர் மலரின் பொங்கல் வாழ்த்துக்கள்! 'உங்கள் மலரின்' சேவையைப் பாராட்டி, பொங்கல் வாழ்த்துக்களை அனுப்பிவைத்த சகல மாணவர்களுக்கும் மாணவர் மலரின் நன்றிகள். பெரும்பாலானமாணவர்கள் கவிதைகள் மூலம் தங்கள் வாழ்த்துக்களை அனுப்பியிருந்தனர். வளரும் மாணவ கவிஞர்களுக்கு மலர் தொடர்ந்து ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக் காத்திருக்கின்றது. தொடர்ந்து விஷயதானங்களை அனுப்பிவையுங்கள்.

— காசி

## நீதிபதி கைதானர்

நியூ ஆர்லியன்ஸ் ஹோட்டல் அறையொன்றில் நடந்த படக்காட்சியை பார்க்கச் சென்ற அரசாங்க குற்ற மாவட்டநீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர், பொலிசாரின் வலையில் சிக்கினுர். பொலிசார் அப்படத்தை பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்களுடன் நீதிபதியையும் கைது செய்தனர். பொலிசார் அவருடன் போராடியே அவரைக் கைதுசெய்ய நேர்ந்தது.

கிளே ஷோ கொலைச்சதி வழக்கை விசாரணை செய்த நீதிபதி எட்வர்டு ஏ. ஹாக்ரெட்டி என்பவரே அந்த நீதிபதியாவர். அவர் நியூ ஆர்லியன்ஸைச் சேர்ந்தவர்.

## மாணவர்கள் மட்டும் உள்ள கல்லூரி

கலிபோர்னியாவில் லாஸ் ஏஞ்சல்ஸில் புதிதாக உருவாகி இருக்கும் கல்லூரியொன்றில் ஆசிரியர்களே இல்லை.

மாணவர்கள் காலையில் பாடசாலைக்குச் செல்கின்றனர். அங்கே பணிக்கப்பட்டிருக்கும் பாடவேலைகளைத் தமது இல்லங்களுக்கு எடுத்துச்சென்று மனனம் செய்கின்றனர் இறுதியில் பரீட்சைக்குத் தோற்றி அதிலும் சித்தியடைகின்றனர் ஆனுல் இவர்கள் ஒருபோதும் ஆசிரியர்களை நேரடியாகச் சந்திப்பதில்லை.

ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு அறை அங்கு கொடுக்கப்பட்டுள்ளது இவை அமைதியான சூழ்நிலையில் தனது திறமைக்கும், ஆற்றலுக்கும் ஏற்ற முறையில் தனது பாடத்திட்டங்களை அமைத்துப் படிக்க உதவுகின்றன.

இந்த நவீன பாடசாலையில் சோதனைகள் அனைத்தும் நாடா மூலம் ஒலிப்பதிவாகும். இந்தப் பாடசாலையின் நூலகத்தில் போதனைகள் ஒலிப்பதிவு நாடாக்களில் இருக்கின்றன. பாடசாலையில் சந்திக்கும் ஒரேஒரு மனிதர் அதன் நிர்வாக டைரக்டராகும். இவரது பெயர் ஜிம்ஸ்கொற்.

இவரே மாணவர்களின் பாடத்திட்ட முறைகளையும், படிப்புத் திட்டங்களையும் நிர்மாணிக்கிருர். வீட்டுவேலைகளுக்கான பாடங்கள் எவையெவை என்பதையும் முன்கூட்டியே இவரே தீர்மானிக்கிருர்.

## ஜியோமதி வந்த கதை (Geometry)

முதலாம் தாலமி மன்னர் அலெக்ஸாண்டிரியாவில் அழகிய மியூஸியம் ஒன்றை ஏற்படுத்தி அங்கு ஒரு புத்தகசாலையையும் உருவாக்கினுர் அறிவு வளர்ச்சிக்குப் பல விதங்களிலும் பயன்படும் நூல்களை அந்த நூல் நிலையத்தில் அவர் சேர்த்திருந்தார். அந்த நூல் நிலையமே புகழ்பெற்ற பல்கலைக்கழகமாக மாறிச் சிறந்த ஆராய்ச்சியாளர்களையும் தயாரித்தது. இந்தப் பல்கலைக்கழக மாணவர் தான்யூக்ளிட்ஸ் இவரது ஜியோமதிசம்பந்தமான கணித ஆராய்ச்சிநூல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றைக்கும் கணித நிபுணர்களைக் கவர்ந்துள்ளது இவர்தலாமி மன்னனின் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கணிதத்தில் புலமைபெறும் போது முப்பத்தாறு வயதைக் கடந்துவிட்டார். இவரது பெயரும் இவரது நூலின்பெயரும் 'யூக்ளிட்ஸ்' என்றே அமைந்துவிட்டது.

பபிலேபனகுல் ஜியோமதி சம்பந்தமான வடிவங்களில் நிலப்பகுதிகள் ஆரம்பத்தில் கணக்கிடப்பட்டன 'ஜியோ' என்ற கிரேக்க வார்த்தைக்கு நிலம் என்பதுபொருள் 'மெட்ரன்' என்பதற்கு அளவுகள் என்பது அர்த்தம் நிலத்தின் மேற்பரப்பை அளந்து கணக்கிட உதவும் முறை என்பதே 'ஜியோமெட்ரி' என்றுவழங்கப்படலாயிற்று.

சாதாரண நிலங்களைவரையறுப்பதிலிருந்து ராஜ்யங்களின் எல்லையை வரையறுப்பது வரை ஜியோமதி பயன்படலாயிற்று. ஜியோமதி சம்பந்தமான உண்மைகளை தேற்றங்களாகத் தொகுத்து (the ovems) அவற்றை ஆராய்ந்து அவசியமான மாறுபாடுகளைப் புகுத்தி உதவியிருக்கிருர் கணிதமேதை யூக்ளிட்ஸ்.

இந்த நுணுக்கங்களை ஆராய்ந்த மேதைக்கு அக்காலத்தில் போதிய உபகரணங்கள் கூட இல்லை. எழுதுவதற்கு காகிதம் கூட அவருக்குக் கிடைத்ததில்லை. காய்ந்த இலைகளில் ஜியோமதி வடிவங்களை நுணுக்கமாக வரைந்து பாதுகாத்து வந்தார். யூக்ளிட்ஸ் நீண்ட சதுரமரப் பெட்டிகளில் நன்ருகச் சலித்தமணலை நிரப்பி, கூர்மையான குச்சியின் உதவியால் ஜியோமிதி வடிவங்களை அமைத்துக் கணக்கிடுவார் யூக்ளிட்ஸ். தேவையற்றதை அழித்து மீண்டும் வரையும் இந்தமுறை அவருக்கு ஏற்றதாயிருந்தது. ஜியோமதியின் தந்தை ஒரு கிரேக்க கணிதமேதை

சிறந்த கணிதமேதையாக விழங்கிய தாலமி மன்னனும் யூக்ளிட்ஸின் சித்தாந்தங்களைப் பாராட்டி அவரிடமே தன் சந்தேகங்களைக் கேட்டறிந்து மாணவன்போல் பழகிவந்தான்.

— விமலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா'?

## குடும்பச் சுடர்

தயாரிப்பு குணம்

'மகன் தந்தைக்காற்று முதவி இவன் தந்தை என் னேற்முன் கொல்' என உலகத்தார் புகழுமளவுக்கு ஒரு பிள்ளை நல்லொழுக்கமுடையவனுக அறிவாளியாக த்திகழவேண்டுமென் கிருர் வள்ளுவர் இப் பொய்யா மொழியால் வாய்மொழியை உணரும் பிள்ளைகள் எத்தனைபேர். ஜனநாயக நாட்டிலே பிள்ளைகளும் இளம் பிராயம் தொட்டே கட்டுப்பாட்டை விரும்பாது சுதந்திரவாதிகளாகவே வாழ விரும்புகிருர்கள். இவ்வாறு விரும்பி இத்தகைய கட்டுப்பாடற்ற தன்மையுடன் வாழும் பிள்ளைகள் வெகு விரைவில் பெற்ருேர்கள் முகத்தில் கரியைப்பூசிவிடுகிருர்கள். இத்தகைய செயல் இன்று சாதாரண குடும்பங்களில் மட்டுமன்றி நாட்டிற்கு முன்னேடியாக இருக்க வேண்டிய அரசகுடும்பங்களிலும் நடைபெறுகிறதென்ருல் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளைக் கட்டுப்பாட்டுக்குட்படுத்தி நல்லொழுக்கமுள்ளவர்களாக ஆரம்பத்திலிருந்தே வளர்ப்பதில்



கண்ணுங் கருத்துமுடையராய் இருக்கவேண்டுமென்பது தெளிவாகிறது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அரசி எலிஸபெத் சிறந்த பண்பாடுடையவர். பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து வருபவர். அரசனெவ்வழி குடிகளுமவ்வழியல்லவா ஆதலால் அரச குடும்பத்தில் பிறந்தவர்களே சாதாரண மக்களுக்கு வழிகாட்டிகளாக அமைந்து நல்லியல்புகளையுடையவர்களாக விளங்கவேண்டுமென்பது இவரின் குறிக்கோள்.

வரம்பு கடந்த நாகரீகம் அரசகுடும்பத்திற்கு அடுக்காது என்பது இவரது ஆணித்தரமான கூற்று. பண்பும் அடக்கமுமுடைய நாகரீகமே அரசகுடும்பத்தவர்க்கு மட்டுமன்று, எவருக்கும் பொருந்துமென்பது இவரது கருத்து. இவர் போன்றே இவர் கணவர் கோமகனுக்கும் அடக்கமும் பண்பும் மிக்க அணிகளே பிடிக்கும். கோமகன் தாராள மனப்பான்மையும் முற்போக்கு எண்ணங்களும் கொண்டவரெனினும் கட்டுப்பாடும் ஒழுக்கமும் பண்பாட்டோடு கூடிய ஆடை அணிகளுமே தமது பிள்ளைகளுக்குச் சிறந்தவை என்று கூறுபவர்.

இத்தகைய நல்லியல்புகளைக் கொண்டு விளங்கும் பெற்ருேருக்குப் பிள்ளைகளாக வாய்த்த இளவரசர் சாள்ஸ்சும் இளவரசி ஆனும் இவர்கள் கருத்துக்களையெல்லாம் குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள் என்றே கூறலாம். சாள்ஸ் இளவரசர் ஓரளவுக்கு பெற்ருேர் விருப்பத்திற்கிணங்க குடும்ப பாரம்பரியங்களைக் கவனித்து நடந்தாலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நாலாம் வாரிசாக விளங்கும்ஆன்இளவரசி பெற்ருேருக்கு அடங்கி அடக்க ஒடுக்கமாக இருக்க வேண்டிய ஒரு பெண்பிள்ளையாகவிருந்தும் தன்னிச்சைப்படி கட்டுப்பாடற்ற முறையில் நடந்து பெற்ருேருக்குப் பெரும் தலையிடியாக இருந்து வருகிருர்.

'தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை' என்பதற்கிணங்க எலிஸபெத்தை ஆன் பிரதிபலிப்பார் என நினைத்தவர்களுக்கு ஏமாற்றமே. நடை, உடை, பாவனை, குணஇயல்பு ஆகிய சகலவற்றிலும் தாயிலிருந்து ஆன் வேறுபாடுடையவராகவே இருக்கிருர். எலிஸபெத் மகாராணியின் ஒரேயொரு பெண்பிள்ளையாகிய ஆனுக்குப் பெற்ருேர்கள் இளமையிலேயே அதிக இடம்கொடுத்துவிட்டார்கள். அவுடுக்குப் பெற்ருேர்கள் அளித்த அதிக சுதந்திரமே இன்று அவர்கள் தலை குனியும்படியாக நாட்டுமக்களும் பத்திரிகைகளும் ஆனைப்பற்றிப் பேசுவதற்குக்காரணம் எனலாம்.

13 வயதில் விடுதிச்சாலையில் சேர்ந்தார் ஆன். சுதந்திர வாழ்க்கையில் லயிப்பு ஏற்பட்டது. மனதுக்குகந்த சிநேகிதர்களைப் பிடித்துக் கொண்டார். நாகரீகம்என்று எண்ணிக்கொண்டு நாளுக் கொருவிதமான உடைகளை அணிந்தார். இதை விரும்பாத அன்னை கண்டித்தார். இதனுல் இருவருக்கும் அபிப்பிராயபேதங்களும் வாக்கு வாதங்களும் ஏற்படும்.' ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா'? சிறுவயதிலேயே தங்கள் கட்டுப்பாட்டுக்குக் கீழ் கண்டிக்க வேண்டிய இடங்களில் கண்டித்துப் பெற்ருேர்கள் பிள்ளைகளை வளர்க்காவிட்டால் அப் பிள்ளைகள் இன்று லண்டன் பத்திரிகைகள் பலவற்றின் கண்டனங்களுக்குள்ளாகி

[14-ம் பக்கம் பார்க்க]

### ரவை ஜெலி

தேவையான பொருட்கள்-

ரவை 1/2 ருத்தல்
தேங்காய் —1
பசும்பால் —1/4 படி
சர்க்கரை 1ருத்தல்
நெய்-4மேசைக்கரண்டி
ஏலக்காய், குங்குமம்பூ சிறிதளவு

செய்கைமுறை-

ரவையை ஊறவைத்து அரைத்துப்பிழிந்து அந்த நீரை எடுத்துக் கொள்ளவும். தேங்காயையும் துருவிப் பிழிந்து அதன்பாலையும் எடுத்துக் கொள்ளவும். இந்த இரண்டையும் மெல்லிய துணியில் வடிகட்டிப் பசும்பாலுடன் சேர்த்துக் காய்ச்சவும். பால் இறுகிவர ஆரம்பித்ததும் சர்க்கரை ஏலப்பொடி, நெய், குங்குமப்பூ சேர்த்து நன்ருகக் கிளறித் தட்டில் கொட்டி ஆறியதும் துண்டுகளாக வெட்டிப் பரிமாறலாம்.

—சரோ சங்கர்


### நெட்டையா? கவலை வேண்டாம்!

நெட்டையாக உள்ள பெண்கள் தாங்கள் நெட்டையாக உள்ளார்களே எனக் கவலைப்படத் தேவையில்லை. விஞ்ஞானம் அவர்கள் விருப்பத்திற்கேற்ப அவர்கள் உயரத்தைக் குறைக்க முன் வந்துள்ளது.

சமீபத்தில் கேப்டவுனில் உள்ள சத்திர சிகிச்சை நிபுணர்கள் ஒரு பெண்ணின் உயரத்தை அவள் கால் எலும்புகளில் நாலு அங்குலத்தை வெட்டி எடுத்துக் குறைத்துள்ளார்களாம். தென் ஆபிரிக்காவில் இத்தகைய புதுவித சத்திர சிகிச்சை நடந்தது இதுவே முதல் தடவையாகும்.

இதற்குமுன்னர் 1966ம் ஆண்டில் பிரிட்டிஷ் சத்திரசிகிச்சை நிபுணர்கள் ஒரு பெண்ணின் உயரத்தை ஒவ்வொரு காலில் இருந்தும் 7அங்குல எலும்புகளை வெட்டி எடுப்பதன்மூலம் குறைத்துள்ளார்கள். அவர்களது கைகளின் நீளமும் குறைக்கப்பட்டது.

கேப்டவுனில் உயரத்தைக் குறைப்பதற்காக சத்திரசிகிச்சையை மேற்கொண்ட 24 வயது மங்கை நல்ல உடல்நிலையோடு இருப்பதாக அவளுக்கு சத்திர சிகிச்சையளித்த டாக்டர்கள் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்கள்.



### காரொத்த கூந்தலை காப்பாற்ற....

பெண்களுக்கு அழகு தருவதுகூந்தல். பண்டையஇலக்கியங்களில் பெண்களை வர்ணிக்கும் புலவர்கள் அளகபாரம் எனவும், மயிற்ருேகையன்ன கூந்தல் எனவும், கார்மேகத்தையொத்த கூந்தல் எனவும் இன்னும் எத்தனை எத்தனையோ விதங்களில் வர்ணித்துள்ளார்கள்.

இத்தகைய அழகு தரும் கூந்தல் உதிராது நீண்டு வளர விசேஷ கவனம் எடுக்கவேண்டும். அல்லாவிடில் வீணே உதிர்ந்து விரைவில் தலை வழுக்கையாகிவிடும். மயிர்கள் உதிராது நீண்டு வளர நீங்கள் செய்யவேண்டியவை இங்கு தரப்படுகின்றன. இலகுவான முறைகள்: இதற்கு நீங்கள் அதிக பணம் செலவழிக்கவேண்டியதில்லை.

வாரத்திற்கிருதடவை 'சீயாக்காய் தூளையோ' அல்லது பாசிப்பயற்றை அரைத்தோ தலைக்குத் தேய்த்து தலையைக் கழுவவேண்டும்.

கூந்தலின் நிறம் பளபளப்பாகவும் கருமையாகவும்இருப்பதற்கு மேற்கூறியவற்ருேடு தேசிக்காய் சாற்றையோ அல்லது 'லெமன்' பழச்சாற்றையோ சேர்த்துத் தேய்த்துக் கழுவலாம்.

தினமும் இரவில் படுக்கைக்குப் போகுமுன் கூந்தலை பிரஷினுல் வாரிவிட வேண்டும். இவ்வாறு பிரஷினுல் வாருவதினுல் கூந்தல் அதிகமாக உதிருமானுல் அல்லது வெடித்து பிளவுபடுமானுல் பிரஷினுல் வாருவதைக் குறைத்துக்கொள்ளலாம். இவ்வாறு பிரஷினுல் வாருவதினுல் மயிர்க்கால்களில்காற்றுப்புகுந்து கூந்தல் நீண்டு வளரும்.


#### 'கோதை'

அநேகமாகப் பலருக்கு கூந்தல்நுனிகள் வெடித்துக் காணப்படும்' இதைத் தடைசெய்வதற்கு அடிக்கடி நுனிமயிரை கத்தரிக்கோலினுல் வெட்டிவிடுவது நல்லது. இதைவிட இவ்வாறு வெடிக்கும் நுனிமயிரை எரித்துவிடுவதும் சிறந்தது.

தலையில் பொடுகு உண்டாவதும் தலைமயிர் உதிர்வதற்குக் காரணமாகிறது. இதற்குச் சிறந்தது ஒலிவ் எண்ணெயாகும். இந்தஎண்ணெயை வாரம் இருதடவை தலையில் தடவி மயிர்க் கால்துவாரங்களில் செல்லத்தக்கவாறு விரல்களால் அழுத்தித் தேய்த்துவிடுதல் நன்று. இவ்வாறு வாரம் இருதடவை செய்து வந்தால் விரைவில் பொடுகு நீங்குவதோடு தலை மயிர் உதிர்தலும் நின்றுவிடும்.

தலையில் பொடுகு ஏதுமின்றியே தலைமயிர் தொடர்ந்து உதிர்ந்தவண்ணமிருந்தால் அதற்குக்காரணம் உங்கள் உடலில் விட்டமின் ஏ, டி சத்துக்கள் குறைவாகவுள்ளமையேயாகும். எனவே இச்சத்துக்கள் நிறைந்த உணவைத் தினமும் உணவில் சேர்த்துக்கொண்டால் மயிர்உதிர்வதுதடைப்படும்.

மேற்குறிப்பிட்டவற்றைக் கவனித்து அதன்படி செய்து தலைமயிரைச் சுத்தமாக வைத்திருப்பதோடு தினமும் தேங்காய் எண்ணெயையோ அல்லது நல்லெண்ணெயையோ தடவி விரல்களால் தலையை நன்ருக அழுத்தித் தேய்த்தால் [illegible]

புதுமையான அமைப்பில் ஆக்கப்பட்ட
தங்க, வைர நகைகளுக்குப் புகழ்பெற்றது,
உத்தரவாதமுள்ள நகைகளைத் தருவது,
உங்கள் மனதுக்குப் பிரியமான நகைகளை
வழங்குவது

தெய்வா நகை மாளிகை

தொலைபேசி எண்: 512

இன்றைக்கே விஜயஞ்செய்யுங்கள்!
உங்கள் இதயங்கவர்ந்த நகைகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்!

தெய்வா நகை மாளிகை
173, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாம்பரநாதரை...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது மலர்தூவி
ஐம்புலனும்அகத்தடக்கி
எப்போதும் இனியானை
என்மனத்தே வைத்தேனே

சிவபிரான் ஒருவரே பரம்பொருள். விஷ்ணு, பிரமா, இந்திரன் முதலாகவுள்ளவர் அனைவரும்தேவர்கள். அவர் வான உலகங்களில் வசிப்பவர். ஆதலின் வானவர் என்றும் விண்ணவர் என்றும் போற்றப்படுவர். அவர்கள் வசிக்கும் உலகம் போகபூமி அவர் செய்த நல்வினை காரணமாக அதன் பயனாய போகத்தை மாத்திரம் அனுபவிக்க உரிமையுடையார். அனுபவித்து ஒழிந்தபின் நிலைபேறாகப் பேரின்பம் மோட்சம் அடைவதற்கு வானவர்தாமும்கர்மபூமியாகிய இந்த மண்ணுலகுக்கு வந்துதான் ஆகவேண்டும். ஆகவே வானவர்கள் தமது மலர்போன்ற கைகளிலே கற்பகப் பூக்களைப் பக்தியோடு ஏந்திக்கொண்டு காலை, உச்சி, மாலை என்னும் மூன்று வேளைகளிலும் அம்மலர்களை எம்பிரான் திருவடிகளில் தூவி அருச்சித்து தலைதாழ்ந்துதொழும்படியாக காஞ்சீபுரத்திலேகோவில் கொண்டு எழுந்தருளியுள்ளார் ஏகாம்பரநாதர். அப்பெருமானே எப்போதும் இனிமையானவர் - இனிமையையே அருளுபவர். அந்த அருள்மூர்த்தியை மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள்வாயிலாக நுகரப்படும் ஐம்புலன்களையும் அகத்திலே அடக்கிக்கொண்டுகுளிர்ச்சிபொருந்திய செந்தாமரை மலர் முதலாம் நறுமணப் பூக்கொண்டு வழிபாடு செய்து தமியேன்அகத்துள்தியானிக்கிறேன் எனப்போற்றுகிறார் அப்பர்பெருமான். (3)

**இண்டை சேர்சடையான்**

அண்டமா யாதியா
யருமறையோ டைம்பூதப்
பிண்டமா யுலகுக்கோர்
பெய் பொருளாம்
பிஞ்ஞகனைத்
தொண்டர்தாம்மலர்தூவி
சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை
என்மனத்தேவைத்தேனே

எல்லா அண்டங்களும் தாமேயாக உள்ளவர். சகல சராசரங்களுக்கும் ஆதிகாரணகருத்தாகவாக உள்ளவர் அருமைவாய்ந்த நால்வேதப் பொருளாயுள்ளவர் நிலம் நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பூதங்களின் திரிபினாலாகிய பிண்டப் பொருளாயும் உள்ளவர். அகில பிரபஞ்சத்தையும் நிலை பெறுத்துபவர். இவ்வாறாகிய பரம்பொருளாம் சிவபிரானிடத்தே மெய்யன்பு பூண்ட தொண்டர்கள் மலர் கொண்டு பூசித்துத் தமது உள்ளத்தெழும் பேரன்பு காரணமாகச் சிவநாமங்களைத் தோத்திர மாலையாகப் புனைந்து சூட்ட அதனை இண்டை என்னும் சிரமாலையாக ஏற்றருளும் திருச்சடை பொருந்திய ஏகாம்பரநாதரை அடியேன் மனமுறத் தியானிக்கிறேன் என்கிறார் திருநாவுக்கரசர். (4)

**ஏறேறும்பெருமான்**

ஆறேறு சடையானை
ஆயிரம்பே ரம்மானைப்
பாறேறு படுதலையிற்
பலிகொள்ளும் பரம்
பரனை
நீறேறு திருமேனி
நின்மலனை நெடுந்தூவி
ஏறேறும் பெருமானை
என் மனத்தே வைத்
தேனே.

கங்கா நதியடங்கப்பெற்ற சடாமுடியை உடையவர், ஆயிரம் திருப்பெயர்களால் துதிக்கப் பெறுபவர், பருந்துகள் கவரவிரும்பும் பிரமகபாலத்தில் பிச்சையேற்றருளும் பரம்பொருளாயுள்ளவர், வெள்ளொளி பரக்கும் திருநீற்றைப் பரவப் பூசிய நிர்மலப் பொருளாய் உள்ளவர், நீண்டு திரண்ட ஏரி பொருந்திய தருமதேவதையாம் இடபத்தை ஊர்ந்தருளுபவர் ஆகிய ஏகாம்பரநாதப்பிரானை என்மனத்தே உறத் தியானிக்கிறேன் என்கிறார் வாகீச வள்ளல். (5)

**மலை நிலநீர் தீவளியா**
**காசமாம் ஈசன்**

தேசனை தேசங்கள்
தொழநின்றதிருமாலால்
பூசனைப் பூசனைகள்
உகப்பானைப் பூவின்கண்
வாசனை மலை நிலநீர்
தீவளியா காசமாம்
ஈசனை எம்மானை
என்மனத்தே வைத்
தேனே.

ஒளிமயமாக உள்ளவன் இறைவன். எல்லா உயிரினங்களும் தொழும்படி காத்தருளுகின்ற காவற்கடவுளாகிய திருமால் தன் தொழில் சித்தியுறும்வண்ணம் தவறாது பூசிக்கப்பெறுபவர் சிவபிரான். சிவபக்தர்களுட் தலைசிறந்தவரான விஷ்ணுமூர்த்தி செய்த பூஜை வழிபாட்டினை உவந்து ஏற்று அருள்புரிந்தவர் எம்பிரான். மலர்கள் தோறும் மணமாக அமைந்து அருள்புரிபவர் பரம்பொருள். மலையிடங்களாக, நிலமே, நீரே, தீயே, வளியே, வானே எனப்படும் ஐம்பூதங்களாகஎல்லாமாகி, எங்குமாகி, என்றுமாகிப் பரிபூரணனாய் நிறைந்து விளங்கும் எம்பிரான் ஏகம்பவாணனைத் தமியேன் உள்ளமுறத் தியானிக்கிறேன். என்கிறார்அப்பர்பெருமான். (6

(தொடரும்)

## பாலினளவுக்கு பசுவுக்கு தீனியிடும் இயந்திரம்

பசு கொடுக்கும் பாலின் அளவுக்கு ஏற்ப அதற்குத் தீனி தருவதற்கு ஒரு இயந்திரம் பிரிட்டனில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. பாலின் அளவு அதிகரிக்க, அதிகரிக்க பசு பெறும் தீனியின் அளவும் அதிகரிக்கும். அங்கே பாலின்அளவுகுறைந்தால் இங்கு தீனியின் அளவும் குறைந்துவிடும்.

இந்த இயந்திரத்தை இரண்டு நாட்கள் பயன்படுத்தினாலே, பால் கொடுத்தால் தான் தீனி கிடைக்கும் என்பதையும், பால் கொடுத்துக் கொண்டே இருக்கும்வரை தான் தீனி கிடைத்துக் கொண்டே இருக்கும் என்பதையும்பசு உணர்ந்துகொள்கிறது,

இந்த இயந்திரம் வேலை செய்யும் முறை இதுதான். இயந்திர மூலம் கறக்கப்படும் பசுவின்பால் ஒரு கண்ணாடிப்பீப்பாவில் விழுகிறது. இந்தப் பீப்பாக்குள் எலக்ட்ரானிக்கருவி ஒன்றும் இருக்கிறது. இரண்டு பவுண்டு அளவு பால் பீப்பாக்குள் விழுந்தவுடன் எலக்ட்ரானிக் கருவி அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் தீனித்தொட்டியின் இயந்திரத்தை இயக்கிவிடுகிறது.

அந்தத் தொட்டிக்குள் வந்துவிழும் தீனியை தடுக்க ஒரு மூடி இருக்கிறது. இயந்திரம் ஓட ஆரம்பித்ததும் இந்தமூடி திறந்து கொள்கிறது. உடனே தொட்டிக்குள் குறிப்பிட்ட அளவுதீனி தள்ளப்பட்டதும்மூடிபழைய நிலைக்கு வந்துவிடுகிறது.

முதலில்கொடுத்த இரண்டு பவுண்டு பாலுக்கு ஏற்ற தீனி இப்போது தொட்டியில் சேர்க்கப்பட்டுவிட்டது. இனி மீண்டும் இரண்டு பவுண்டு அளவுபால் கண்ணாடிப் பீப்பாக்குள் சேர்த்தால்தான்மறுபடியும் எல்லா சாதனங்களும் இயங்கி, தீனித்தொட்டியில் மேலும் தீனிவந்து விழும்.

## சிறுகதை

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

விடுறன்'' என்றார். அந்த முறை நானும் பரீட்சையெடுத்தேன். ''எப்படிக் காசில்லாமல் சோதனை எடுக்கவிட்டார்கள்?'' என்று என்னை நானே கேட்டுமூளையைக் குழப்பிக்கொண்டேன் அம்முறை பரீட்சையில் எப்படியோ சிறப்பாகச் சித்தியெய்தினேன்.

எனது படிப்புத்தொடர்ந்தது. பல்கலைக்கழகத்தில் மருத்துவப்பிரிவில் இடம் பிடித்துக்கொண்டேன். அப்புவிடமிருந்த காணித்துண்டுகளும் விலைப்பட்டன. அப்புவின் கனவை நனவாக்கி ஒருவாறு படித்து முடித்து டாக்டராக வெளிவந்தேன். இப்பொழுது நான் ஒரு டாக்டர். கோட்டும் சூட்டும் போட்டுக் கழுத்துப்பட்டி கட்டி, ஒரு கையில் 'ஸ்டெதஸ் கோப்'புடன் என்னைப்பார்க்க அப்பு ஆசைப்பட்டார். அது நடந்து விட்டது.

0 0

'என்ன தம்பி நான் மருந்துக்கு வந்திருக்கிறன். நீர் என்னவோ பலமாக யோசிக்க ஆரம்பிச்சிட்டீர்' கந்தையா மாஸ்டரின் பேச்சைக் கேட்டுத் திடுக்குற்றவனாக நிமிர்ந்து உட்கார்ந்தேன். 'ஓ... ஏதோ பழைய ஞாபகங்கள்... மாஸ்ரர்' அசடுவழிந்தது, என் முகத்தில். 'என்ன பூவரசந்தடியால என்னட்டை அடிவாங்கின நினைவுகளோ?' என்றவர் முகம், பழைய நினைவுகளால் மலர்ந்தது. 'ஓம்... ஓம்...' என்று தலையாட்டியபடி அவரின் நெஞ்சில் 'ஸ்டெதஸ் கோப்'பைப் பதித்தேன்.

நான் கொடுத்த மருந்துச் சீட்டுடன் அவர் எழுந்தார். 'சேர்...ஒரு விஷயம். ஒருக்கால் நான் காசு கட்டாமல் சோதனை எடுத்தேனே! உங்களுக்கு நினைவிருக்கும். அது எப்படி நடந்தது. பணம் கட்டாமல் நான் எப்படிப் பரீட்சையெடுக்க முடிந்தது?' என்றேன்.

'அட... அதுவா?... அது வந்து...'' என்று இழுத்தார். 'இல்லை, சும்மா... சொல்லுங்கோ சேர்' என்றேன். 'உமக்காக நான் கட்டினனான்' என்ற அந்த மனிதர் எதுவுமே நடவாததுபோல் அப்பால் நகர்ந்தார். நானோ திகைத்துப் போய் விட்டேன். அவர் பணம் கட்டாதிருந்தால் நான் பரீட்சை எடுத்திருக்க முடியுமா? டாக்டராகியிருக்க முடியுமா?

இப்பொழுது அந்த மனிதர் பழையநாளைய பொல்லாத 'பூவரசந்தடி வாத்தியாராக எனக்குத் தோன்றவில்லை. என்னை வாழவைத்த தெய்வமாகத் தோன்றுகிறார். அந்தப்பயங்கர மனிதரின் மனம் எப்படிப்பட்ட பொன்மனமாக இருந்திருக்கிறது ...

கலங்கிய கண்களைப் புறங்கையால் துடைத்தபடி 'அடுத்த நம்பர்' என்கிறேன். வேறொரு நோயாளி அறையினுள் நுழைகிறார்.

(யாவும் கற்பனை)

## ஊசிமூலம் செடிகளின் வேருக்கு உரம்

உணவு உட்கொள்ள முடியாத, உடலில் உடனே சத்துணவு சேர வேண்டிய நிலையில் உள்ள நோயாளிகளுக்கு உடலுக்குள் ஊசிமூலம் சத்துணவைச் செலுத்துவார்கள் அல்லவா? அதேபோலப் பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான உரத்தை அவற்றின் வேரில் ஊசி போட்டுச் செலுத்த ஓர் இயந்திரம் பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


விலையுயர்ந்த, சக்தி வாய்ந்த உரங்களை வீணாக்காமல் செடிகளின் வேர்களுக்குச் செலுத்த இந்த இயந்திரம் பயன்படுகிறது.

டிராக்டர் போன்ற வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள இந்த எரு ஊசி இயந்திரத்தில் கூர்மையான கத்திகளும், அதனையொட்டிச் சிறு குழாய்களும் வைக்கப்பட்டுள்ளன. திரவ ரூபத்திலான உரம் வைக்க இந்த வாகனத்தில் 96 காலன் கொள்ளளவு உள்ள பீப்பாய் உள்ளது.

இது இயங்கும்போது கத்தி பூமியைக் குடைந்து வேர்ப்பகுதியில் நிற்கும். உடனே அதனையொட்டியிருக்கும் குழாயில் இருக்கும் உரம் வேர்ப்பகுதியில் பாய்ச்சப்படுகிறது.

லீப்பர் ராம்சே அண்டு சிங் சிலிமெட் என்ற இங்கிலாந்து நிறுவனம் தயாரித்துள்ளது.

## ரொபர்ட் லூயி ஸ்டீவன்சன் [4]



தினசரி அதிகாலை ஆறு மணிக்குஎழுந்து எழுதஆரம்பிப்பார். சில வேளைகளில் படுக்கையில் படுத்தபடியே எழுதிக்கொண்டிருப்பார். ஒன்பது மணியிலிருந்து தோட்டவேலைகளில் மும்முரமாகஈடுபடுவார். அதன்பின்னர் மீண்டும் எழுதுவார். இறுதியாக மாலையில் மீண்டும் தோட்டவேலையில் ஈடுபடுவார்.

தொடர்ந்து பேனபிடித்து எழுதிக் கொண்டிருப்பதால் சிலவேளைகளில் கையில் 'சுழுக்கு' ஏற்படுவதுமுண்டு. அப்படியும் விடாது அங்குமிங்கும் நடந்துகொண்டோ யாரையாவது எழுதும்படி [illegible] சொல்லிக் கொண்டிருப்பார் ஸ்டீவன்சன்

தீவு மக்கள் ஸ்டீவன்சன் மேல் கொண்டிருந்த அளவற்ற அன்பின் அடையாளமாக தங்கள் செலவாலேயே வீதியைச்கட்டி முடித்தனர்.

திடீரென ஒருநாள் ஸ்டீவன்சன் இறந்தபோது அவ[illegible] மலை முகட்டில் ஏற்படுத்தியிருந்த கல்லறையில் அடக்கம் செய்தனர். ஸமோவாதீவுமக்கள் 44வயதாகுமுன்னரே 17 நாவல்கள் உள்பட 35தொகுதிகளை வெளியிட்ட ஸ்டீவன்சன், ஆங்கில இலக்கியத்தை தனது அழியாநூல்களால் அலங்கரித்து மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு - ஒரு பயங்கர நோய்

## உடலுறுப்புகளை இழக்கச் செய்யும் உயிருக்கு உலை வைக்கும்

எது இருந்தும் தண்ணீர் மட்டும் இல்லையென்றால் மனிதன் வாழவே முடியாது. செடி, கொடிகள், விலங்கினங்களும் கூட வாழ முடியாது. வாழ்க்கைக்கு அத்தனை அவசியம் இந்தத் தண்ணீர் எழுபது சதவிகிதம் சமயமாய் உள்ள நம் உடம்பிலிருந்து நிறைய தண்ணீர் வெளிப்பட்டு, அதனை ஈடுசெய்யும் வகையில் நீர் உள்ளே செல்லவில்லையென்றால், மரணமே சம்பவித்துவிடும். ஒரு தாவரத்துக்குத் தண்ணீர் இல்லையென்றால் எவ்வாறு வாடிக் கருகிவிடுகிறதோ, அதே போன்றுதான் மனிதனின் உடலும் வாடி வதங்கி மறைந்து போய் விடுகிறது. அவ்வளவு முக்கியமான இந்த நீர் சீணித்து, கோளாறடைந்து உண்டாகும் ரோகம்தான் நீரிழிவு என்னும் சலரோகமாகும்.

**நோய்வகையும்**

**நோய்க்கான காரணமும்**

சலரோகமானது சர்க்கரை சேர்ந்த பானங்களையும் உணவுகளையும் அதிகமாக உண்ணுதல், சுகமனுபவித்துக் கொண்டிருத்தல், அதிக நித்திரை, கெட்டுப்போன மிருகங்களுடைய அழுகிய இறைச்சிகளை உண்ணுதல், புதிதான தானியங்களாலாகிய அன்னபானங்கள், மிதமிஞ்சிய போக இச்சையில் ஈடுபடுதல் கபத்தை விருத்தி செய்யும் உணவுகளை உண்ணுதல் ஆகியவை விரைவில் மனிதனின் உடலைத் தாக்கி நோயை உண்டாக்குகின்றன.

**டாக்டர் கே. கே. ஜெயரத்தினம்**

**(டி. ஏ. எம்.)**

நீரிழிவு ரோகமானது குணப்படாமல் நாளுக்கு நாள் தேகத்திலேயே பற்றி இருப்பதினாலும், தாய் தந்தையர்கள் கருவினின்றே இத்தோஷம் தோன்றியிருப்பதினாலும். மேக சம்பந்தமான ஸ்திரீகளிடம் தொடர்பு கொள்வதனாலும் இரத்தம் கெடுதலடைந்து, மற்றைய தாதுக்களையும் நாளுக்குநாள் கெடுத்து தேகத்திலுள்ள ஜீவசத்துக்களை நீர் மூலமாக அளவு கடந்திறங்கச்செய்யும். ஆங்கிலேய வைத்தியர்கள் இதை இரண்டு விதமாகக் கூறியிருக்கிறார்கள். ஒன்று வெகுமூத்திரம். இது ரோகிக்கு ஒருவேளை தேகம் கொஞ்சம் உஷ்ணமாய் இருக்கும். பிறகு ஒருவித வாசனையுடைய நீரிறங்கும். இதனால் சரீரம் வரட்சி, தாகம், மலபந்தம், தாது நஷ்டம், இடுப்பில் வலி, கைகால் எரிச்சல், பலக் குறைவு, நிறைக்குறைவு முதலியவைகளை உண்டாக்கும். அடுத்தது மதுமூத்திரம். இது சாதாரணமாய்நீர் வெளுத்த நிறமாகப் போகும். அதில் இனிப்பான சத்து வெளியேறும். ஒரு இராப்பகலில் ஏறத்தாழ மூன்று பைந்து அளவு நீரிறங்கும். கூடியநிலையில் இருபது, முப்பது பைந்து அளவு இறங்குவதுமுண்டு.

நீரிழிவு இருபது வகைப்படுமென ஆயுர்வேதம் கூறுகின்றது. கபதோஷக் கோளாறால் உண்டாகும் நீரிழிவானதுபத்துவகைப்படும், இவற்றுக்குச் சிகிச்சை அளிப்பதன்மூலம் குணப்படுத்தலாம். பித்தப் பிரகோபத்தால் உண்டாகும் நீரிழிவானது ஆறுவகைப்படும். இவை சிகிச்சைக்குக் கடினமாகும். அதிக கஷ்டப்பட்டுக் குணப்படுத்தலாம். வாதத்தால் உண்டாகும் நான்கு நீரிழிவுகளும் மிகவும் அபாயகரமானவையாதலால் அவை சிகிச்சைக்குக் குணமாகாமல் அதிகரித்துக் கொண்டே இருக்கும். வாதம். பித்தம், கபம் ஆகிய முத்தோஷங்களும், அத்துடன் சப்த தாதுக்களாகிய இரஸம், இரக்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி. மச்சை, சுக்கிலம் என்பவையும் கோளாறடைந்து நீரிழிவை உண்டாக்குகின்றன.

**குணங்குறிகள்**

நீரிழிவு உண்டாவதற்கு முன்பு பற்கள், கண்கள், நாக்கு, செவிகள் முதலியவை மிகவும் அழுக்கடையும். உடல் முழுவதும் பிசுபிசுப்பாய் இருக்கும். நாவரட்சியும் வாய் இனிப்பாகவும் காணப்படும். அடிக்கடி மூத்திரம் போதல், அடிக்கடி பசிஎடுத்தல், அடிக்கடி தாகம் எடுத்தல், சரீரத்தில் வியர்வை, துர்நாற்றம், தளர்ச்சி, தேகம்கனத்தல், படுக்கையிலும் உட்காரலிலும் சுகத்திலும் நித்திரையிலும்இச்சை; மார்பு, கண், நா, காது, உள்ளங்கை, உள்ளங்கால் இவற்றில் அழற்சி, தலைமயிரும் நகமும் விரைவில் வளர்தல், சீதளவஸ்துவில் விருப்பம், கன்னமும் நெஞ்சும் உலரல், தாகம், கைகால் எரிச்சல், குறிசுருங்கல், சுக்கிலநாசன் இவை சலரோகத்தின் பொதுக் குணங்களாகும். சிறுநீர் கலங்கியதாகவும், அளவில் மிக்க அதிகமாகவும், மஞ்சள் நிறமாயும், பீசத்திலும், கோசத்திலும், கடுத்தலுடனும் அடிக்கடி வெளியேறும். அதனைக் காய்ச்சிப் பார்க்க அடியில் வெண்மை நிறமுடைய வண்டல் பற்று காணப்படும். உடல், கண் முதலியவை வெளுத்துத் தோன்றும். இதற்கேற்ற சிகிச்சை செய்யத் தவறின் ஐந்தாவது வருஷத்தில்கெடுதியை உண்டாக்கும்.

சலரோகத்திற்கு வசமானவர்களுடைய இரத்தத்தில் சர்க்கரை இயல்பான அளவிற்கு அதிகமாகவே இருந்து வரும். இதனாலேயே சிறுநீரில் சர்க்கரை காணப்படுகிறது. ஓரளவு நிரந்தரமாக மிதமிஞ்சி இருந்துவிட்டால், அதாவது நீரிழிவு நோய் முற்றியபிறகு சர்க்கரை சிறுநீரில் கழிவதைக் குறைப்பது கஷ்டமான காரியமாகும். வயிற்றின் உறுப்புகளுள் ஒன்றான கணையம் இன்சுலினைச் சுரந்து கூடிய அளவிலுள்ள சர்க்கரையைக் கட்டுப்படுத்த முடியாமல் போவதினால் சலரோகம் உண்டாகிறது.

கணையம் மேலும் மேலும் இன்சுலினைச் சுரக்க முயன்று அயர்வடைந்து போகும். லங்கர்கான்ஸ் தீவுகள்வலுக்குன்றி கேடுற்று, திரும்ப ஆரோக்கிய நிலையை அடையாமலிருந்து விடும். அப்பொழுது உணவில் கட்டுப்பாடு வகுத்தும், சிறுநீரில் சர்க்கரை கழிவது குறையாதிருந்துவிடும். சர்க்கரையாக மாறும் மாவுப் பண்டங்கள் ஆகியவற்றை உணவிலிருந்து குறைத்தும், உணவில்வந்து சேரும் புரதச் சத்தும், உடலில் அமைந்துள்ள புரதச் சத்தும்கூடகரைக்கப்பெற்று சர்க்கரையாக மாறக்கூடும். இப்படிச் சர்க்கரை இரத்தத்தில் அதிகமாகவே தோன்றி சிறுநீரில் கழியவும் செய்யும். இதனாலேயே இத்தகைய நோயாளியின் உடல் விரைவில் இளைத்துப் போகிறது. ரோகியின் சிறு நீரை 'பிலிங்ஸ்' திரவத்தினாலாவது. 'பெனடிக்' திரவத்தினாலாவது. சோதித்துப் பார்த்தால், அதில் சீனி இருப்பது புலப்படும். சர்க்கரை நோயை 'கிளைக்கோசூரியா' என்றும் அழைப்பர். வியாதியஸ்தர்கள் ஓடவோ குதிக்கவோ கூடாது. உடம்பில் காயம்பட்டு விடாமல் கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். கால்களில் செருப்புப் போடாமல் நடக்கக் கூடாது. வியாதி கூடியநிலையில் கால், கை முதலிய அவயவங்கள் கழற்றப்பட்டுஇறுதியில் இறக்கவேண்டி ஏற்படும்.

**ஆயுள்வேத முறையில் நிவாரணம்**

ஆயுர்வேதவைத்தியத்தில் இந்நோயை வேரோடு அழிக்கக்கூடிய ஔடதங்கள் ஏராளம் உண்டு. எந்தவிதமான நோய் வந்தபோதிலும் அதற்கேற்ப வைத்தியம் செய்யவேண்டியதவசியம், எல்லா நீரிழிவுகளும் தகுந்த சிகிச்சை அளிக்கப்படாமையினால் காலக்கிரமத்தில் மதுமேகமாக மாறி அப்பால் சிகிச்சைக்கு வசப்படாத தன்மையைப் பெறும். இவ்வியாதிக்கு கியாழமாக துடரி, சுண்டை. நீர்பூலா, கடல்ருஞ்சி, ஆவரை, பொன்முசுட்டை, முத்தற்காசு, திரிபலை, திரிகடுகு, மூங்கிலிலை, இவற்றைக் கஷாயம் செய்து தேன் விட்டுக் குடிக்கலாம். மரமஞ்சளைத் தட்டி சட்டியிற்போட்டு கருக வறுத்து மோர்விட்டுகியாழம்செய்து கொடுக்கத்தீரும். சீந்திற்தண்டும், நெற்பொரியும் கஷாயம் செய்து குடிக்கலாம். கருஞ்சிற்றகத்தி இலையை ஆவின் பால்விட்டு இடித்து பிழிந்த சாறு, நல்லெண்ணை சமன் கலந்து காய்ச்சிவடித்து முழுகிவரத் தணியும். மரமஞ்சள், கருவேலம்பிசின், தேற்றாவிதை, ஆவாரம் விதை சமன் சூரணித்து திரிகடியளவுமோரிற் கொள்ளத்தீரும்.

மேகாதிக்குளிகை, ஏலாதிக்கிருதம், கல்யாணகிருதம், மகாமேகக்குடோரி, நீரிழிவு எண்ணெய், மேகாதிச் சூரணம். அமுதசர்க்கரை, தாளிசபத்திரிவடகம், தங்கபற்ப செந்தூரம். காரீயச் செந்தூரம், அப்பிரக செந்தூரம், இரசசெந்தூரம், சண்டமாருத செந்தூரம், சர்வகுணரசம், தங்கச் செந்தூரம், மேகசிந்தாமணிச்செந்தூரம், கருவங்க பற்பம், மதுமேகலேகியம், இடியாவரைலேகியம், சந்திரகாந்தி சூரணம், மேகநாதி எண்ணெய், நாவற்கொட்டைக்குளிகை முதலிய ஔடதங்களைக் கொடுத்து சலரோகத்தை நிவர்த்திக்கலாம்.

## எட்டடி வெள்ளம்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

பூங்கொடியாம் குறமகள் வள்ளியானவள் அதனைக் கண்டு அஞ்சி நடுங்கி மான் கன்றென ஓடிச்சென்றுவேட்டைக்காரனைத் தழுவிக் கொள்கிறாள். இதே வேளை வேடனை மருவிநின்ற காட்டானையின் கொம்புகளின் முனை அவன் உடலை ஒரு பால் உறுத்த, மறுபுறத்தே கொடிநுதல் நுசுப்பினளாம் வள்ளியின் அபயத்தழுவலில் அவள் மார்பு இரண்டும் அவன்உடலைவருத்த இவ்விரு முனைத் தாக்குதலுக்கும் நடுவே கானகத்து வேடன் முறுவலித்து நிற்பானாயினான் என்கிறார்.

அந்திப் பொழுதாகஅறுமா
முதற்கிரங்கி
முந்திப் படர்கின்ற மொய்
குழலான் முன்பாகத்
தந்திக் கடவுள் தனி
வாரணப் பொருப்பு
வந்துற்றதம்மாமறிகடலே
போல் முழங்கி
வாரணமாமலை ஏன்வந்தது

என்பதை இப்படிக் கூறுகிறது கச்சியப்பரின் மற்றொரு கந்தப்புராணச் செய்யுள்.

## 100-வது மனைவியைத் தேடும் தாத்தா

டெக்ரான், ஜன. 10

80 வயதான வயோதிபர் ஒருவர் தமது 99வது மனைவியிடமிருந்து விவாகரத்துகோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இப்ரகீம் ஜோகுல்என்ற இந்த வயோதிபருக்கு 62 வயதில் ஒரு மனைவி இருக்கிறார், இவள் இப்புகிழக்கு 99-வது மனைவி.

இந்த மனைவி குடும்பம் நடத்த மறுப்பதால் தான் விவாகரத்து செய்வதாகவும், தமக்கு குடும்பம் நடத்தக்கூடிய ஒருமனைவி தேவைப்படுவதாகவும், இவர் தமது மனுவில் தெரிவித்துள்ளார். தான் 100-வது முறை திருமணம் செய்யப்போவதாகவும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

## கலைமணியின்...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

வசப்படவில்லையென்று கூற முடியுமா?

உண்மையான இலக்கணமுள்ள நாடகங்களை அன்றும் இன்றும் ஏராளமானோர் ரசிக்கிறார்கள் - அலுக்காமல் சலிக்காமல் ரசிக்கிறார்கள். அன்னாவி' மரபுப்படி பயின்று இன்றும் நடித்துவரும் பலகலைஞர்கள் எம் மத்தியில் இருக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்தி நாடகங்களை இலக்கண வரம்புக்குள் மீண்டும் புத்துயிர் பெறச்செய்யலாம். மறைந்தன தோன்றும் பொழுது அதுவும் புதுமையல்லவா? உண்மையான நாடகக் கலைஞர்கள் எல்லோரையும்புறக்கணித்து அவ்வழி நாடகங்களை அழித்தொழித்து ஆபாச நாடகங்களும் போலி நாடகங்களும் மலிந்து இருக்கும் இவ்வேளையில் கலைமணியின் கட்டுரைக் கருத்துக்கள் நாடகக் கலைஞர்களுக்கு இப்புதுவருடத்தில் இருள் நீக்கி ஒளிபெற வழிவகுப்பசாயுள்ளது எனக் கூறவேண்டும்.

## மலேரியா நுளம்பைக் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தில்உள்ள ஆஸ்பத்திரிக்கோ டிஸ்பென்சரிக்கோ போய் சிகிச்சை பெற்றுவிடவேண்டும். மலேரியா நோயை பிறருக்கு தொற்ற விடாமல் உதவிசெய்தவராவீர்கள்.

**எண்பதினாயிரம் பேர் பலி**

அன்னியர் ஆட்சியின் போது இவ்விடங்களில் சென்று குடியேறிகுளக்கரைகளில் கமம் செய்ய முயன்றவர்களை மலேரியா விரட்டியது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு இவ்விடங்களை மறுபடியும் மீட்பதற்காக அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டது. காடுகளை வெட்டி. குளங்களைத் திருத்தி கமக்காரரைக் குடியிருத்தமுயன்றது. ஆனால் எப்பக்கம் திரும்பினாலும் மலேரியா அசுரன் அதற்குத் தடை போட்டுவந்தான்.

1934க்கும் 36 க்கு மிடையில் மலேரியாஅசுரன்விஸ்வரூபம் எடுத்து கோரதாண்டவம் புரிந்தான். இலங்கை வாழ் மக்களில் மூன்றில் இருவருக்கு இந்நோய் பரவியது. 80,000 மக்களை அது பலி எடுத்தது. செத்துப் பிறந்த குழந்தைகளும் குறைமாதத்திற் பிறந்த குழந்தைகளும் இன்னும் ஒரு லட்சத்துக்கு கிட்ட, 1937-ம் ஆண்டில் மலேரியா தடை இயக்கம் ஒன்று அரசாங்கத்தால் ஆரம்பிக்கப் பட்டது. மலேரியா நோய்க் கிருமிகளைக்கொண்டு திரிந்து பரப்பும் 'அனோபிலிஸ்' நுளம்புவகையைக் கொல்வதற்கு முதலில் 'பயிரத்தர' சாரம் உபயோகிக்கப்பட்டது. ஆனால் இது அவ்வளவாகப் பலன் அளிக்கவில்லை.

**டி டி ரி அதிசயம்**

இந்தச் சமயத்தில் தான் டி. டி. ரி. மருந்து கை கொடுத்து உதவியது. டி டி ரி. மருந்தடிக்கும் திட்டமொன்று அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு, 1945-ம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி அனுராதபுரத்தில் இப்பணி ஆரம்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட பத்து மாதங்களுக்கு நாற்பத்தைந்து லட்சம் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் டி. டி. ரி. மருந்து அடிக்கப்பட்டதன் பலனாக மலேரியா காய்ச்சலின் வேகம் குறைக்கப்பட்டது. ஆயிரத்துக்கு நாற்பதாயிருந்தமரணவிகிதம் பன்னிரண்டாகக் குறைந்தது. 1958ம் ஆண்டு மற்றுமோர் மருந்தடிக்கும் ஐந்தாண்டுத் திட்டம்மேற்கொள்ளப்பட்டது. பல்லாயிரக்கணக்கான வைத்திய சுகாதார அதிகாரிகளும் ஊழியர்களும் இதை மிக வெற்றிகரமாக நடத்திவைத்தார்கள். முன்புகாடாயிருந்த இடங்களில் மலேரியா வருமென்ற அச்சம் சிறிதும் இல்லாமல் ஏராளமான மக்கள் குடியேறி கமம் செய்வதற்கு இந்தத் திட்டம் வழிவகுத்தது. இந்த மாபெரும் வெற்றியை ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார ஸ்தாபனமே அங்கீகரித்தது.

## 'அது'வுக்கு...

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

டுக்கு வரும்போதே, 'டேய் தம்பி, அம்பலம், கொண்டுவா' அதை'க்கொட்டிலுக்கு' —என்று கட்டளை போட்டார்.

'எதை அப்பு?' என்று கேட்டார் அம்பலம்.

'அதைத்தான்' உன்ரை 'அது'

அம்பலத்துக்கு விளங்கிவிட்டது. ஆச்சரியத்தை அடக்கிக்கொண்டார். மாட்டுக்கொட்டிலைப் பார்த்தவாறு சித்தலை நேரமும் நடைபெற்ற சிந்தனை இதற்காகத்தான் போலும் என்று நினைத்துக்கொண்டே 'அதை' கொட்டிலுக்குள் கொண்டுவந்துவிட்டார்.

'அது' வுக்கு அன்று பட்டிப்பொங்கல் பிரமாதமாக நடந்தேறியது.

புதுமையான பொருள் ஒன்றை உடனேயே ஏற்றுக்கொள்ள மறுக்கும் வைதீக மனப்பான்மையால் உண்டான அருவருப்பினாலோ அல்லது அந்த வார்த்தை பல்லில்லாத வாய்க்குள் நுழைவது அசாத்தியம் என்பதினாலோ மாணிக்கர் ஒரு போதும் 'ட்ராக்டர்' என்ற வார்த்தையை உச்சரிப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வித்துவான் சுப்பையபிள்ளைக்கு இன்று பாராட்டு விழா

# நாவலர் பெருமான் நோக்கத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்

மதிப்புக்குரிய பண்டிதமணி வித்துவான் சுப்பையபிள்ளை அவர்களைக் கௌரவிக்கும்முகமாகச் சாகித்திய மண்டலம் தன்னைத்தானே கௌரவித்துக்கொண்டது.

இந்தக்காலம் சன நாயக காலம் என்று த[illegible]னைச் சொல்லிக்கொள்வதொரு காலம். இந்தக் காலத்தில் இப்பொழுதைய சந்தர்ப்பம் இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரையில்பல்கலைக் கழக காலம் என்று வருணிக்கத்தக்கது.

**நாவலர் கல்வித் திட்டமும் சம்பாத்தியமும் வித்துவான் அவர்கள் போன்றவர்கள் வருவதற்குக்காரணமானவைகள். துரதிருஷ்டவசமாக நாவலர் அவர்கள் சம்பாத்தியம் அவர்களின் நோக்கத்துக்கு உதவாத வகையில் வாளா கிடக்கின்றது. அவ்விஷயத்தில் அரசாங்கத்தில் குறை கூறுவதற்கு இடமில்லை. உரிய காலத்தில் அரசாங்கத்துக்கு நாவலர் நோக்கத்தை எடுத்துக் காட்டாதது மலையளவு தவறு. இத் தவறுதலுக்கு மன்னிப்புக்கேட்டு, நாவலர் சொத்து நாவலர் நோக்கத்துக்கு உபயோகப்படும்படி செய்தல் வேண்டும், பொதுவாகத் தமிழ் மக்களும் சிறப்பாகச் சைவமக்களும் ஒருங்கு திரண்டு தக்கோர் மூலம் விண்ணப்பஞ் செய்து நாவலர் பெருமானின் நோக்கத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.**

பழைய காலத்தில் தனி மனிதர்களே பல்கலைக்கழகங்களாய் இருந்தார்கள், வசிட்ட முனிவரின் ஆசிரமம் ஒரு பல்கலைக்கழகம். இராமன் வேதவித்தைகளோடு அவற்றில் ஒரு அம்சமாக வில்வித்தையையும் வசிட்டரிடமே பயின்முன்.

சாந்தீப முனிவரிடம் ஸ்ரீகிருஷ்ணனும் குசேலரும் பயின்முர்கள்.

பல்கலைக்கழகங்கள் நாடு நகரங்களில் இருப்பதில்லை. காடுகளிலேயே அவைகள் இருந்தன.

நைமி சாரணியம் சூதரின் பல்கலைக்கழகம். நாற்பத்தெண்ணுயிரவர் அங்கே புராணம் பயின்முர்கள்.

சைவம் பாயனரிடம் இதிகாசமும், சைமினியிடம் கன்மகாண்டமும் நடந்தன. வியாசரிடம் ஞானகாண்டப் பயிற்சி நடந்தது.

பயிற்சி பெறுபவர் குருவுக்குப் பணிவிடை செய்வர் குருபத்தினிகளிடம் உணவுங்கிடைக்கும் அந்தப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பணம் பெறுவதில்லை. அறிவை விலைபேசி அவர்கள் விற்பதில்லை. பக்குவங் கண்டு அறிவு பெருக்கப்படும்.

மகாபக்குவர்கள் கைலைக்குச் செல்வார்கள். அங்கே தக்ஷிணுமூர்த்திதான் தனி முதற் பெரும் பேராசிரியர். திருநந்திதேவர் உப அதிபர்.

ஃ

சென்னைப் பல்கலைக்கழகம் தோன்றியது 1857-ம் ஆண்டில்; ஆறுமுகநாவலர் பிறந்தது 1822-ம் ஆண்டில்.

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

நாவலர் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகமாய் விளங்கினுர். நீர்வேலிச் சங்கரபண்டிதர் சமஸ்கிருதப் பல்கலைக்கழகம்.

வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளைக்குப் பெருமை நாவலருக்கு மருகரும் மாணுக்கருமாயிருந்தமை.

புலோலி நா. கதிரைவேற்பிள்ளை மாயாவாதத்தும்சகோளரி. அவர் தம்மை நாவலரின் மாணவரின் மாணவர் என்று குறிப்பிடுபவர்.

தமிழ் தந்த சி. வை. தாமோதரம்பிள்ளை வட்டுக்கோட்டைச் சாத்திரசாலையில் தேறி, சென்னைப் பல்கலைக்கழகத்திற் பட்டதாரியானவர். அவர் தம்மைச் சுன்ஞகம் முத்துக்குமார கவிராயரின் மாணவர்என்று சொல்லிக்கொள்பவர்.

மரபுபட்ட ஆசிரிய பரம்பரையே ஒருவரின் கல்வி அறிவுக்குப் பெருமை தருவதாயிருந்தது. அங்ஙனம் அல்லாத கல்வியறிவு அபாயகரமானது; வரிசை அறியாதது. அப்படிக் கல்வியறிவை எத்துணை விவேகம் இருந்தபோதும், உயர்ந்தோரெனப்படும் உலகம் மதிப்பதில்லை. அதற்கு வேண்டிய உதாரணம் இக்காலத்தில் மிகுதியும் பெறலாமாயினும், பிறழ்வுக்கு மூலமுளை மகாபாரதகாலத்திலேயே ஆரம்பித்துவிட்டது. அஃது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

துரியோதனுதிகள் துரோணரைத் தேடிச் சென்று படிக்கவில்லை. துரோணரே மாணவர்களிடம் வந்து படிப்பிக்கத் தொடங்கினுர். அரண்மனையில் எல்லா வசதிகளும் துரோணருக்குச் செய்து கொடுக்கப்பட்டன. மாணவர்களில் துரோணரின் வாழ்க்கை தங்கவேண்டியதாயிற்று, அதனுல் அவர் அடைந்த அவமானம் மகாபாரத யுத்தத்தில் வெட்ட வெளியாகக் காணத்தக்கது. உணவு முதலிய உபகாரத்தில் துரோணர் வாழ்ந்ததை அடிக்கடி சொல்லிக்காட்டி அவரை உயிருடனேயே கொன்று குவித்துவிட்டான் துரியோதன மகாராசன். துரோணர்விட்ட பிழைகள் கலி முதிரமுதிர இக்காலப் பல்கலைக்கழகங்களில் பலவேறு வடிவத்தில் காட்சியளிப்பதில் நூதனம் இல்லை. அது நிற்க.

இந்த யாழ்ப்பாணத்தில் ஆறுமுகநாவலர் சங்கரபண்டிதர் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளைமுதலியவர்கள் மாணவர்களில் தங்காமல், மாணவர்கள் தங்களில் தங்கி அறிவையும் வாழ்க்கையையும் பண்படுத்திக்கொள்ளும் வகையில் அமைந்தார்கள்.

பழைய மரபின் வழிவந்த ஆசிரியர்கள் வெறும் பாடம் படிப்பித்து வயிறு நிரப்புபவர்களே அல்லர். அவர்கள் மாணவரைப்படிப்பிப்பவர்கள். அவர்களை மாணவர் என்றும் மறப்பதில்லை. குலதெய்வவரிசையில் வைத்து அவர்களை அவர்கள் பூசிப்பது வழக்கம்.

ஃ

சுன்ஞகம் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள், நாவலர் அவர்களையும் சங்கரபண்டிதரையும் இருகண்களாக மதித்தவர்கள். கற்பித்தலில் அந்த இருவரையும் பின்பற்றியவர்கள். கற்பித்தலுக்குக் கைம்மாறு கருதியதில்லை. சேர். பொன். இராமநாதன்துரையவர்கள் உயர்ந்த வேதனம் கொடுத்துத் தமது கல்லூரியில் வைத்துக்கொள்ள விரும்பினுர்கள். புலவர் அவர்கள் அதற்கு உடன்படவில்லை. மாணவர்களைப் படிப்பிக்கும் புலவரவர்கள், வெறும் பாடம் படிப்பித்து வேதனம் பெறவிரும்புவார்களா? இருபது வருடம் இந்த நாவலர் பாடசாலையிற் படிப்பித்தார்கள். அப்பொழுது இப்பாடசாலை ஒரு பல்கலைக்கழகமாய்க் காட்சியளித்தது. புலவர் அவர்கள் நடக்கும் தெருக்கள் ஒழுங்கைகள் பிரயாணஞ் செய்யும் புகையிரதம் எங்கும் அவர்களை மாணவர்கள் தொடர்ந்தார்கள். புலவர் அவர்கள் நடமாடும் பல்கலைக்கழகம்.

வித்துவான் அவர்கள் பாடஞ்சொல்லும் விஷயத்தில் புலவர் அவர்களைப்பின் பற்றுந் தகுதி வாய்ந்தவர்கள் காலப்போக்கு உபாத்தியாயர்ப் பத்திரம் ஒன்று பெற வேண்டிய நிலையை வருவித்துவிட்டது. அவ்வாருயபோதும் வித்துவானவர்கள் பழையமரபைப் பேணி வருவது போற்றத்தக்கது.

மதிப்புக்குரிய வியாகரண சிரோமணி சீதாராம சாஸ்திரியார் அவர்கள் சங்கர பண்டிதரையும், வித்துவான் அவர்கள் புலவர் அவர்களையும் ஞாபகப்படுத்துபவர்களாய் வாழ்ந்து வருவது யாழ்ப்பாணத்தின் தவப்பேறேயாம்.

வித்துவான் அவர்களைச் சாகித்தியமண்டலம் கௌரவித்ததை நினைக்கும்போது, 1920-ல் இங்கே நடந்த ஒரு சம்பவம் ஞாபகத்துக்குவருகின்றது. அப்போது ஆங்கில அரசு நடந்தது. தமிழரின் ஆதிக்சம் யாழ்ப்பாணத்தில் ஓங்கியிருந்தது. அதன் பயனுகத் தமிழ் அறிஞர்களைச் சந்மானிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானம் உதயமானது.

இங்கே சேர் அருணுசலந் துரையின் தலைமையில் செந்தமிழ்ப் பரிபாலன சபையொன்று இருந்துவந்தது. அதன் உபதலைவர் சேர்கனக சபை அவர்கள். அந்தச் சபை கூடிப் புலவர் அவர்களே சந்மானத்துக்குத் தகுதி வாய்ந்தவர்கள் என்று சிபார்சு செய்தது. புலவர் அவர்கள் மிக்கதயக்கத்துடன் அந்தச் சந்மா

15-ம் பக்கம் பார்க்க)

# ஐந்தில் வளையாதது....

[11ம் பக்கத் தொடர்ச்சி]

அரசகுடும்பத்துக்கே அவப்பெயரைத் தேடிக்கொடுத்துக்கொண்டிருக்கும் ஆனின் நிலையையே யடைவார்களென்பதும் உறுதி.

ஆன்இளவரசி நடையுடையில்தான்பண்பாடற்றமுறையில் நடக்கிருர் என்ருல் ஓரளவாவது பொறுத்துக் கொள்ளலாம். அவரது செயல்கள் சிலவும் நாட்டு மக்களுக்கே வெறுப்பூட்டத் தக்கனவாகவுள்ளன. இரவு விருந்துகளுக்குச் செல்லும் ஆன் நேரகாலத்தோடு வீடு திரும்புவதில்லை. அநாகரீகமாக உடைகளை அணிந்து கொண்டு விருந்து வைபவங்களில் நடுநிசிவரை நடனமாடுகிருராம். இதைப் பத்திரிகைக்காரர்கள் படம்பிடித்து பத்திரிகையில் வெளியிட்டுவிடுகிருர்கள். பத்திரிகை ஆனை மட்டுமின்றி ஆனின் பெற்ருேர்களையும் கண்டிக்கின்றன' இதனுல் மகாராணியும் கோமகனும் பெரும் கவலைக்குள்ளாகிருர்கள். இவர்களைக் கவலைக் கடலிலேயே மூழ்கடிக்கக் கூடிய மற்றுமொரு செய்தி ஆனின் விவாகம் சம்பந்தமானது. ஆன் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரையே விவாகம்செய்வார் எனவும் ஏற்கனவே அச் சாதாரண குடும்பத்தவரை ஆன் தேடிக்கொண்டுள்ளார் எனவும் ஐரோப்பாவின் பிரபல்யம் வாய்ந்த ஜோதிட குடும்பத்தைச்சேர்ந்தபெண் மணி ஜோதிடம் கூறியுள்ளதாக லண்டன் பத்திரிகையொன்று சமீபத்தில் தெரிவித்துள்ளது. அளவுக்கு மீறிய சுதந்திரம்கொடுத்துக் கட்டுப்பாடற்ற முறையில் வளர்த்த மகாராணியும் கோமகனும் மேற்படிஜோதிடப்படி நடந்தால் தங்களைத் தாங்களே நொந்துகொள்வதைவிட்டு வேறு என்ன செய்யமுடியும்.

நினைத்த நேரத்தில் வெளியே போவது நினைத்த நேரத்தில் வீட்டுக்கு வருவது தாங்கள் நினைத்தபடி இரவு விருந்துகளிலெல்லாம்கலந்து கொள்வது போன்றவைகளை ஆரம்பத்திலேயே கண்டித்திருக்கலாமே. முளையிலே கிள்ளிவிடாது அப் பழக்க வழக்கங்கள் வளர்ந்து பெருவிருட்சமானபின்பு இன்று கண்டித்தால் அதற்குச்செவி சாய்ப்பார்களா?

அதிகசுதந்திரம்கொடுத்து நினைத்தபடியெல்லாம் தான்தோன்றித் தனமாக பிள்ளைகளைத் திரியவிடும் பெற்ருேர்களுக்கு ஆன், சாள்ஸ் போன்ருேர்களின்செயல்கள் நல்ல படிப்பினைகளாகின்றன. எனவே பெற்ருேர்கள் பிள்ளைகளைப் பெற்றுவிட்டால் மாத்திரம் போதாது. அவர்களைப் பேணி வளர்க்கத் தெரியவேண்டும். கட்டுப்பாட்டுடன் வளர்க்க வேண்டும். பெரியார் ஈ.வே. ரா கூட அதிக சுதந்திரமும் கட்டுப்பாடற்ற [illegible]யும்தான் இன்று [illegible] குழப்பங்களுக்குக் காரணம் எனக் கூறியுள்ளார்.

# கிரகநிலைக்கேற்ப நடந்து கொண்டால் கஷ்டம் நீங்கி நல்வாழ்வு கிட்டும்

## சோதிட சாஸ்திரம் நமக்குக் கிடைத்த பெருஞ் செல்வம்

பலபல சாஸ்த்திரங்களையும் மிக நுண்மையாக ஆராய்ந்து சோதித்து சாதகமாகப் பலன்களை உண்மையுடன் கூறுவதே சோதிடம். ஆழமான சோதனை செய்து திடம் பெற்று உரைப்பதே சோதிடம்.

**பஞ்சாங்கம்**

வாரம், திதி, நட்சத்திரம் யோகம், கரணம் ஆகிய ஐந்து உறுப்புக்களைக் கொண்டு கணிக்கப்பெற்றமையால் பஞ்சாங்கம் என வழங்கிற்று.

**சாதகம்**

ஒருவனது வாழ்க்கையை சென்மத்தை நன்மைப்படுத்தவும் செயலில் அனுகூலம் பெற்றுவாழ வழிவகுக்கவும் உதவும் கருவியானதால் இது சாதகமென நாமம் பெற்றது.

சென்மாசென்மங்களில் செய்துகொண்ட நன்மை தீமைகளின் பிரகாரமே பலன்களை சீவன்கள் அடை[illegible] [illegible] நேரிட்டதென்பதை உணர்ந்து நல்வினைகளைச்செய்தால் தீவினைக்குரிய தீயபலன்கள் அழிவுற்று நற்பலன்கிட்டும் என்பதில் ஐயமில்லை.

நெறிதரும் சாஸ்திரத்தின்
சாந்திசெய்தே
பின்னும் நிறைந்த சுகம்
பெறுவதற்கே
நிகழ்த்தினர் சாதகமே.

அவரவர்கள் கர்மத்தின் பலனுக உள்ள குறைபாடுகளை நீக்க தர்மசாஸ்திரங்கள் வழிகாட்டியாக இருப்பதால் இவற்றை அவரவர் சாதகங்களை அதிக அவதானத்துடன் ஆழமான சோதனைசெய்துகணித்துதிடமான நற்பலன்களை அடையும் வழிவகைகளைச்சோதிட வல்லுநர் கூறமுடியும்.

**இலக்கினம்**

அதிர்ஷ்டங்களைப் பலபல விதங்களாக அடையக்கூடிய ஸ்தானம் இராசிகள் இவை எவருக்கும் இராசியாயுள்ளவையே. வீரோதமற்றவை.

**கிரகங்கள்**

**நவக்கிரகங்கள்**

கிரகங்கள் என்னும்சொல் வீட்டையே குறிக்கும். வீட்டின் தன்மை காப்பாற்றுதல், பேணுதல், இன்பம் அடைதலாம்.

கிரகங்கள் ஏழு உலகம் ஏழு சுற்றி அமைத்தமையால் 14ஆக அமைந்தன. ஒரு பொருளை ஒரு நாடாவால்சுற்ற மேலும் கீழுமாக இரண்டுஇடம் தரப் பெற்றுள்ளது. எனவே ஏழுகிரகங்கள் மேல் ஏழு கீழ் ஏழாக பதினுன்கு உலகம் அமைந்தன. ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன் வெள்ளி, சனி முறையேசூரியன். சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி சனி ஏழுகிரகங்களும் இவைகளுக்கு ஆதாரமாக இராகுவும், கேதுவும் வாலும்தலையுமாக அமைந்துள்ளன.

**மனிதனின் கிரகநிலைகள்**

சூரியன் சீவனுகவும் சந்திரன் உடலம் ஆகவும், செவ்

(15-ம் பக்கம் பார்க்க)

ஆயர்பாடி சோதிடர்
**வே. த. மயில்வாகனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரக நிலைக்கேற்ப..

(14-ம் பக்கத் தொடர்ச்சி)
வாய் உடலத்தில் இருதய மாகவும், புதன் இகில்வாயு அறிவுத்தன்மையாகிய மன நிலையாகவும், வியாழன் வழி காட்டி மாற்றி அமைத்த ளிக்கும் கர்த்தாவாகவும், வெள்ளி பிறவிக்குத்தக்க இன்பங்களைக்கொடுத்து மய க்கி ஆளும் பற்ருகவும், சனி எது எது உளதோ அவற் றைப் போஷிக்கும் கால வரையறையாகவும் இருக்க இராகுவும் கேதுவும் இந்த ஏழு கிரகங்களின் பலாபலன் களை அபரிமிதமாகக் கூட்டி யும் குறைத்தும்போதையை ஊட்டியும் உபாதைகளால் வாட்டியும் பலன் செய்வர்.

இந்த அருமையான கிரக பலன்களை உண்மையான சிரமத்துடனும் ஆழமான அறிவுடனும் ஆராய்ந்து கணித்து அதற்கு இணக்க மாகத் தன்னை ஒழுங்கு படு த்திவாழ்பவர் எதுவித இன் னல்களும்வராது தடுத்து சகல இன்பங்களையும் பெற்று வாழ்ந்து முடிவில் அழியாத முத்திமோட்சமும் பெறுவர்.

சோதிடர்

சோதிடர்கள் இடையருத கல்வியும், செபதபமும் பெற்று சத்வகுண சம்பன்னர்களாகவே இருக்கவேண்டியவர் கள். அதிகமான அறிவுநூல் களையும் சாஸ்த்திரங்களையும் கற்றறிந்த தன்மையி ஞல் சோதிடர்க்கு மேல் கடவுளைத் தவிர வேறிலர் எனலாம். இன் னும் தனது அறிவை பிற ருக்கு உபயோகப்படுத்துவ தாலும், பிறர் நன்மைக்கா கப்பிரயாசை எடுப்பதாலும் சோதிடனின் பணி ஒப்பற்ற தாகும்.

தனது சொந்த நலனுக்கா கவும் பிறரை அப்போதைக் குத் திருப்திப்படுத்தவுமா கச் சொல்வது சோதிட மல்ல. சோதிடர் பணம் வாங்கக்கூடாது என்றில்லை. பெறுமதியான தட்சணை யைப் பெறுமதியான முறை யில் வாங்குவது இருவருக் கும் நன்மைதரும். ஒரு சோதிடரை இன்னொரு சோதிடர் இகழ்வதோ பகைப்பதோ இழிவானது. எத்தனை சோதிடர்கள் ஒரு தேசத்தில் இருந்தாலும் ஒரு வருடன் ஒருவர் நெருங்கிப் பழகித்தத்தமது அறிவுகளில் உள்ள குறை நிறைவுகளைக் கண்டு திருத்திக் கொள்ள வேண்டும். அதனிமித்தம் உலகுக்கு அதிக நன்மைக ளைச்செய்யமுடியும்.

கிரகத்தின் சூக்கும நிலைகள்

சூரிய பகவான்

சூரியன் மேஷ இராசியில் உச்சம் பெறுவது மேஷம் பூமியும் அதிலுள்ள பொருட் களும். இதற்குரிய கிரகம் செவ்வாய். சகல சீவராசிக ளும் தாவரங்களும் வேறு எந்த எந்தப் பொருள்கள் உலகத்தில் உளதோ அவைக ளைப் போஷித்துவளர்க்கவே சூரியன் உச்சம்பெற்ற தன் மையாகும்.

இதுபோல் சீவன்களுக்கு உதவிபுரிவர், தாவரங்களை வளர்ப்பவர், நீர்நிலைகளைச் செப்பனிட்டு உதவுவோர், நீதியாயும் கிரமமாயும் வாழ்வோர் சூரியனைப்போல பிரகாசமாகவும் சிவசத் துடையோராகவும் திகழ் வர்.

சூரியபகவான் துலாராசி யில நீசம் பெறுகிருர். நீசம் என்பது அழிவுறுதல். கார ணம் துலாராசி சுக்கிரன் என்னும் வெள்ளியின் வீடா கும். சுக்கிரன் போகபாக்கி யம், சம்போகம், போதை, லீலா விளையாட்டுகட்குரிய கிரகம். அதில் ஈடுபட்டோர் இழிவடைவர். சூரியனு க்கே இக்கதி என்ருல் மற் றையோர்கதி என்ன என்று எளிதில் உணரலாம்.

சந்திரன்

பெருமைதங்கிய சந்திர பகவான் இடபராசியில் உச் சம் பெறுகின்ருர். இடப மும் சுக்கிரனின் வீடேயா கும், துலாம் போகவீடாக வும், இடபம் குடும்பம் மனைவிமக்கள் இல்லற தர் மத்திற்குரிய தாகையால் உடற்கிரகமாகிய சந்திரன் உச்சம் பெருமை பெறுவது பலன். தனது குடும்பத் தைப்பேணி மனைவி மக்களு டன்விசுவாசம் அன்புகாட்டி உழைத்துக் கொடுத்து போஷிப்பவன் தனது சுக துக்க காலங்களில் நன்மை யையும் மகிழ்வையும் அனு பவித்து நோய் பிணி துன்ப மின்றி வருங்காலங்களில் கஷ்டமில்லாது மனைவி மக்க ளின் உதவிபெற்றுத் தேறு வன் என்பதே இதன் இரக சிய சூக்குமம்.

அங்காரகன்

செவ்வாய் பகவான் யுத்த காரகன், பூமிகாரகன், சகோதரகாரகன் சந்திரனு டைய வீட்டில் கடகத்தில் நீசம் பெறுவது வீரம், பராக் கிரமம், தேச சஞ்சாரம், இனசன பாசம் உடையவர் உடலம் நிலைக்காது. நிலைக் கினும் பலத்தோடும், அழ கோடும் வாழ்தல் அருமை யாகும். யுத்தத்தில், சவாரி ஓட்டங்களில் உழைப்பு வேகத்தில் உடல் சுகத தைக் கவனிக்காது மெலிவ டைந்து பலங்கெட்டு வருந் துவர்.

செவ்வாய் மகரமாகிய சனிவீட்டில் உச்சமடைகின் றதன் தன்மை, அச்சமற்ற வர், பாதுகாப்பை விரும்பா தவர், பின்வருவதை யோசி யாதவர், எந்த இடத்திலும் யாவரும் அச்சத்தால், வீரன் முரடன் என்று பயத்திஞல் மதிப்பர். அற்பவாழ்வும் புக ழும் உண்டு.

புதன்

புதபகவான் கன்னி ராசி யில் ஆட்சியுடன் உச்சமும் அடைந்திருப்பது புத்திமான் தனது குடும்பம், மனைவி, மக்களுடன் அயலவர் சிநே கிதர்களுடன் அன்பாய் அழ வளாவி அவர்களிடம் மதிப் பையும், புகழ் கீர்த்திகளை யும் பெற்று சுகித்த வாழ் வர். அதன் தன்மைகளையே மனித சமுதாயம் கைக் கொண்டு நன்மையடைய வேண்டியது.

புத்திவித்தை காரகன் ஆகிய புதன் குருவின் வீடா கிய மீனராசியில் நீசம்பெற் றமை வியக்கத்தக்கதல்ல. இறைவன் அடிசேர விரும்பி யவர் குருவை அடைக்கல மாகப் பற்றியவர் புத்தி யைப் ாவிக்கக்கூடாது என் பதே இதன் அர்த்தமாகும்' நம்பிக்கை உறுதிகொண்டு தன்னெண்ணத்தையும் தன் னையும் மறந்தவரே இறை

[16ம் பக்கம் பார்க்க]

## நாவலர் ...

(14-ம் பக்கத்தொடர்ச்சி)
னத்துக்கு உடன்படவேண் டியவர்கள் ஆனுர்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்க அக்கிராசஞதிபதியாகிய பாண்டித்துரைத் தேவரும், இந்த நாவலர் பாடசாலை யாரும் இடை இடையே செய்யுஞ் சிறிய சந்மானங் களே புலவர் அவர்களுக்கு பெரிய சந்மானமாய்த் தோன்றின அரசாங் கம் மற்றவர்களின் தூண்டு தலிஞல் வரிசை அறி யாது செய்யும் சந்மானத் தைப் புலவர் அவர்கள் மதிக்கவில்லை. பெற்றதில் மனவருத்தமும் அவர்க ளுக்கு இருந்தது.

ஃ ஃ

நாவலர் கல்வித் திட்ட மும் சம்பாத்தியமும் வித்து வான் அவர்கள் போன்ற வர்கள் வருவதற்குக் கார ணமானவைகள். துரதிரு ஷ்டவசமாக நாவலர் அவர் கள் சம்பாத்தியம் அவர்க ளின் நோக்கத்துக்கு உத வாதவகையில் வாளா கிடக் கின்றது. அவ்விஷயத்தில் அரசாங்கத்தில் குறைகூறு வதற்கு இடமில்லை. உரிய காலத்தில் அரசாங்கத்துக்கு நாவலர் நோக்கத்தை எடுத் துக்காட்டாதது மலையளவு தவறு. இத் தவறுதலுக்கு மன்னிப்புக்கேட்டு, நாவலர் சொத்து நாவலர் நோக்கத் துக்கு உபயோகப்படும்படி செய்தல் வேண்டும். பொது வாகத் தமிழ்மக்களும் சிறப் பாகச் சைவமக்களும் ஒரு ங்கு திரண்டு தக்கோர்மூலம் விண்ணப்பஞ்செய்து நாவ லர் பெருமானின் நோக்கத் தைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

நாவலர் சொத்து நாவலர் நோக்கத் துக்கே பயன்பட வேண்டு மென்ற நீதியை அரசாங் கம் உணரும்படி செய்தால் அதஞல் வித்துவான் அவர் களுக்கு உண்டாகும் குளிர் ச்சி, சாகித்திய மண்டல கெளரவத்தால் உண்டாகும் குளிர்ச்சியிலும் ஆயிரம் மடங்காயிருக்கும்.

நாவலர் அவர்களின் கல் வித திட்டமும், சொத்தும் பயன் செய்ததஞலேதான், இன்று (15-1-70) வித்து வான் அவர்களைக் கெளர வித்துச் சாகித்திய மண்ட லம் பெருமை உறுகின்றது என்பது சிந்தனை செயற் பாலது.


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த A 40 என்ஜின் ஒன்றும் செசிபிறேம் ஒன் றும் விற்பனைக்கு உண்டு. வேலைவாரத்தில் மட்டும் பார்வையிடலாம். மில்க் வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 1769

காணி:

வண்ணுர்பண்ணை மேற்கு தட்டாதெரு சந்தியில், திவ் விய சாந்தி சிவபாதசுந்த ரத்தின் 1 பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. காணிக்குக்கிழக்கே விசு வேசபிள்ளையார் கோயில் ஆதனமும், வடக்கே ஐயனுர் கோயில் தெருவும், மேற்கே டாக்டர் எஸ். இராசரத்தி னத்திற்கும், தெற்கே வி. கணேசலிங்கத் திற்கும் உடையது. தொடர்பு கொள்ளவும். எஸ். அமிர்தலிங்கம், 477/1 கே. கே. எஸ். வீதி, யாழ்ப் பாணம். 1770

எமது மாணவ மாணவிகளுக்கு
எமது உளம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
The Modern Scientific School of tailoring and Dress Making, 49, Baseline Road, Colombo-8.

வல்வெட்டித்துறை
றஞ்சஞ தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
சிவாஜி—எம். ஜி. ஆர்.
நடித்த
கூண்டுக்கிளி
4-30க்கு மட்டும்
SWEET NIGHTS

மனேகரா
யாழ்ப்பாணம்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா போயா 3 காட்சி
பிக்பொக்கட்
(சிங்களம்)

REGAL JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Poya, Pre-poya 4 shows
Charlton Heston,
Maximilian Schell
in
COUNTERPOINT


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
ஒளிவிளக்கு

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 630.930
பிறிப்போயா, போயா 2-30 மணி
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
நடித்த
சாரதா

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி—பத்மினி
நடித்த
பாலாடை

ராணி (யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
அடிமைப்பெண்

5வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்




★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனேரமா
நடித்த
திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜிகணேசன் ★ சரோஜாதேவி
★ நாகேஷ் ★ விஜயலலிதா ★ மனேரமா
மற்றும்பலர் நடித்த
அஞ்சல்பெட்டி 520


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாத்மா மணிமொழிகள்



கிறீஸ்தவர்கள் என்றோ, ஹிந்துக்கள் என்றோ, முகமதியர்கள் என்றோ நம்மை அழைத்துக்கொள்ளலாம் நாம் யாராயிருந்தாலும் வேற்றுமையின் அடித்தளத்தில் தெளிவான ஒற்றுமைஇருக்கிறது. ஒருசமயம் இல்லாவிட்டாலும் மற்றொருசமயத்தில் முகமதியர்கள், கிறீஸ்தவர்கள், ஹிந்துக்கள் ஆகியநமது தொடர்புக்குப் பல அம்சங்கள் உண்டுஎன்பதையும், வேற்றுமைகள் சிலவே என்பதையும் உணருகிறோம் என்பதே என்னுடைய அனுபவமாகும்.

சத்தியம் என்ற கடவுள் எனக்கு விலைமதிக்க முடியாத ஒரு பொக்கிஷமாகும். நம்மில் ஒவ்வொருவருக்கும் அவர் அத்தகைய பொக்கிஷமாக இருப்பாராக

0 0 0

பொதுவாக நல்லதையும் தீயதையும்போலப் பயனுள்ளவையும் பயனில்லாதவையும் கலந்து இருந்து கொண்டேதான் வரும். மனிதனே அதில் சிறந்ததைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும்.

இனும்
50 மில்க் வைற் நீல
சோப் மேலுறைகளைக் கொடுத்து
போயா கலண்டர்,
பொக்கெட் கலண்டர்,
டெஸ்க் கலண்டர்
பெற்றுக்கொள்ளுங்கள்,
31-1-70 வரைக்கும்.
மில்க் வைற் சோப்
தொழிற்சாலை,
யாழ்ப்பாணம்.

# சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிக்கச் சுயாட்சிக் கழகம் கோரும்?

(அலுவலக நிருபர்)

இலங்கையின் சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்கும் படியும். அன்றையதினம், வியாபார நிலையங்களைப் பூட்டி, கடைகளிலும், வீதிகளிலும் கறுப்புக் கொடி தொங்கவிடும்படியும், தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுவது பற்றி ஈழத் தமிழர் சுயாட்சிக்கழகம், நாளையாழ்ப்பாணத்தில் கூடித் தீர்மானிக்கவிருக்கிறது.

தேசியஅரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் தமிழ்ப் பகுதிகளில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டு வந்தது. சுதந்திரதின விழாக்களில் தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு வந்துள்ளனர். தமிழ்ப் பகுதிகளில் உள்ள கிராமப்புறங்களி லெல்லாம் சுதந்திரதினம் கொண்டாடப்பட்டுவந்தது.

தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள், சுதந்திரதின விழாக்களுக்கு பூரண ஆதரவு வழங்கிவந்துள்ளது. தமிழ்ப் பகுதிகளில், சுதந்திரதினவிழாக்களில், பாடசாலை மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம், தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேறிஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் நிறுவியபின்னர். வரும் முதலாவது சுதந்திர தினத்தில் எப்படி நடந்து கொள்வது என்பதுபற்றி கழகம் நாளை முடிவு செய்யும்.

சுதந்திரதின விழாக்களுக்கு மாணவர்களை அனுப்ப வேண்டாமென்று பெற்றோர்களுக்கு வேண்டுகோள் விடுவதுபற்றியும், நாளை நடைபெறும் பெரும் கழகத்தின் கமிட்டிக் கூட்டத்தில் ஆரர்யப்படுமென்றும் கழக உறுப்பினர் ஒருவர்தெரிவித்தார்.

வடபகுதியிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில், சிங்கள ஆசிரியர்கள்நியமனம் நடைபெறுவதுபற்றியும், நாளைய கூட்டத்தில் ஆராயப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தென்மராட்சியின் காந்திக்கிராமம்

கைதடி, செவ்வாய்

தென்மராட்சிக் காரியாதிகாரிப் பிரிவில், கைதடிக் கிராமத்திலுள்ள எருதிடல் குடியேற்றப்பகுதி காந்திக் கிராமம் அமைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக, தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. இ சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

பாடசாலை, வைத்தியசாலை, மருத்துவ விடுதி, விளையாட்டரங்கு, வாசிகசாலை, நெசவு நிலையங்கள், தையற் பயிற்சி நிலையம் போன்றன அமைத்து கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதே காந்திக்கிராமத்தின் நோக்கமெனவும், இப்பகுதியில் மேலும் சில கிராமங்கள் காந்திக்கிராமத்திற்குத் தெரிவு செய்யப்பட இருப்பதாகவும் அவர் கூறினுர்.

## ஒரு நாள்......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னத்துரை, எம் கனகசபை, வி இராஜசேகரம். ஆர் செல்லையா, ஆர் அரசரத்தினம், கே பி ஹரன், ஏ அன்ரனி. டபிள்யூ ஏ வால்ரன், ஜே சி ஹண்டி, டாக்டர் கே சிவஞானரத்தினம், திருமதி ஏ சுவாமிநாதன், திருமதி எல் சரவணமுத்து, திருமதி பி கனகசபை, டக்டர் எஸ் சண்முகநாதன், திருமதி அருணுசலம், உதவி அரசாங்க அதிபர் திரு ரி முருகேசம்பிள்ளை, யாழ்ப்ணம் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, திரு எம் சி சுப்பிரமணியம். யாழ்ப்பாணமேயர் திரு எஸ் நாகராசா.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மீன்பிடி கூட்டுத்தாபன

# ஊழியர்கள் இன்று வேலைக்குத் திரும்புவர்

கோட்டை, புதன்

கடந்த பல தினங்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் இன்று வேலைக்குத் திரும்பவிருப்பதாக கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுமார்ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் இன்று வேலைக்குத் திரும்புவார்களென எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த அதிகாரி கூறினுர். வேலைக்குத் திரும்பத் தீர்மானித்துள்ளதாக ஊழியர்கள் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புங்குடுதீவில்

## சுயாட்சிக் கழகக்கிளை

ஊரதீவு, செவ்.

தமிழர் சுயாட்சிக் கழகத்தின் கிளையொன்று இம்மாதம் 30-ந் திகதி ஊரதீவில் நிறுவப்பட விருக்கிறது. புங்குடுதீவு கிராம சபை உறுப்பினர் திரு. செ. சோமசுந்தரத்தின் தலைமையில் கழகத்தலைவரும், தீவுப் பகுதி ஆட்சிமன்ற உறுப்பினருமான திரு. வ. நவரத்தினம் கிளையை அங்குரார்ப்பணம்செய்துவைப்பார்.

ஈழநாடு

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தை மாதம் 2-ந் திகதி [15-1-70]

## ஈழத்து அரசியல் பொங்கல்

ராஜாஜி அவர்கள் சிலவருடங்களுக்கு முன்பாக, கொழும்பில் ஒரு பத்திரிகை மூலமாக ஈழத்துக்கு ஒரு ருசியான பொங்கல் வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார்கள்.

அதன் கருத்து இதுதான். ''பொங்கல் பானையிலே அரிசி, பருப்பு எல்லாம் கலந்திருக்கும். ஒன்றுக்கொன்று உதவியாக இருந்து பொங்கலை அவை ருசிக்கச் செய்கின்றன. என்றாலும் ஒவ்வொன்றும் ஒரு தனித்தன்மையுடன் இலங்குகின்றன. அதேபோல, ஈழத்திலே சிங்கள அரிசி, தமிழ்ப்பருப்பு எல்லாம் சேர்ந்து ஒத்துழைத்தாலே ஈழத்து அரசியல் பொங்கல் ருசியாகவும் சாப்பிடக்கூடியதாகவுமிருக்கும்.

பொங்கலில் கலந்திருக்கும் பருப்பு, திராட்சை முதலியவற்றின் தனித்தன்மையும் இருப்பதுபோல, இலங்கையின் அரசியல் பொங்கலிலும் சமூகத்தினரின் தனித்தன்மையும் பண்பும் மறையாமல் இருக்கலாம்'' என்று தமக்கே உரிய எளியமுறையில் ராஜாஜி அவ்வாழ்த்தில் குறிப்பிட்டிருந்தார்.

அன்று அவர்கூறியது இன்றும் நமக்குப் பொருந்தும். இங்குவாழும் பல சமூகத்தவரிடையிலேயும் அன்பும் பரஸ்பர ஒத்துழைப்பும் இருந்தால்தான் இலங்கையிலே ஜனநாயக அரசியல் சீராக நடைபெற்று. மக்கள் நன்மைஅடையக்கூடும். அரிசியோ பருப்போ சரிவர வேகாவிட்டால் அப்பொங்கலால் அஜீரணமும் ஏற்பட்டுவிடலாம்.

இதேசமயம் இங்குள்ள இரு முக்கிய சமூகங்களுக்கும் தனித்தனி மொழி, பண்பு எல்லாம் உண்டு. அவற்றுக்குப் பாதகமேற்படுத்தாமல் இருபாலாரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் மதித்து ஒத்துழைப்பதாயின் நம் அழகிய இலங்கை, பூலோகத்திலே ஒரு சுவர்க்கமாக இருந்து பிறருக்கு வழிகாட்டமுடியும்.

இலங்கையில் பொதுத்தேர்தல் நெருங்கி வருகின்றது. இன்னும் ஒருசில மாதங்கள்தான் உள்ளன. ஒவ்வொரு அரசியல் கட்சியினரும் மக்களின் ஆதரவைப் பெறஆவலுடன்முனைந்திருக்கிருர்கள். பல சமூகங்களின் தனிப்பண்புகளுக்கு பாதகமில்லாத முறையிலே, தேசீய ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும்வளர்க்கக்கூடியநல்லவர்களையே ஆதரிப்பதென்று பொதுமக்கள் தீர்மானிப்பின், நம்நாடு நிச்சயம் அமைதியாக முன்னேறும். இலங்கையின் எதிர்காலம் பொதுமக்களாகிய உங்கள் கையில்தானுள்ளது.

## இரக நிலைக்கேற்ற....

(15-ம் பக்கத் தொடர்ச்சி

வன் அடிசேரத் தகுதிபெறுவர் என்பதே இதன் அர்த்தமாகும்.

வியாழ பகவான் (குரு)

பெருமை தங்கிய குருபகவான் உடல்போஷணையாளரான சந்திரன்வீட்டில் கடக ராசியில் உச்சம்பெறுகின்ருர். ஆத்மஞானிகூட தன் உள்ளத்தையும் உடலையும் போஷித்து சுத்திகரித்து தவம், தியானம் நேமநிஷ்டைகளைக் கைக்கொண்டு நன்மையடைவர் என்பதே.

வியாழபகவான் சனிவீடாகிய மகரராசியில் நீசம்உற்ற தன்மை, யோகிகள் ஆத்மீக ஆசாரமுடையோர், இராசபோகங்கள் பட்சண ஆகார ஒழுங்குகள் இல்லாத இடங்களில் சேர்ந்தால் துன்புற்று அழிவுறுவர் என்பதேயாகும்

சுக்கிரன்

போகபாக்கியக் கிரகமான சுக்கிரன் குருவீடாகிய மீன ராசியில் உச்சம்பெறும் தன்மை, போகபாக்கியங்களை அனுபவிக்கும் குடும்பஸ்தரும் குருதீட்சை பெற்று நல்லொழுக்கங்களைக் கைக்கொண்டு நடந்தால் அவர்களின் வாழ்க்கையும் சுகங்களும் விருத்தியடைந்து தானதர்மங்களைச் செய்து பூரணமடைந்துபுகழ்பெற்று வாழ்வர் என்பதாம்.

சுக்கிரன்

லௌகீக போக பாக்கிய கிரகமான வெள்ளி, புதன் வீட்டில் நீசம்என்னும்பலன்களாவன: இல்லறஸ்தன் தன்னுடைய உழைப்பையோ வரவையோ கணக்குப் பாராமல் செய்யவேண்டிய தான தர்மங்களைக் கடன் பட்டாவது செய்ய வேண்டியது கடமை. இதை விட்டு புத்தியைப்பாவித்து மணிக்கணக்குப் பார்த்தால் வருஷப்பிறப்பு, தீபாவளி, திவசம், மகாளையம், இனசன போஷிப்பைவிட்டு கீழ் நிலையடைவர்.

சனிஈஸ்பரன்

வலிவுகாரகன் ஆயுள்காரகன் போகபாக்கிய காரகன் சுக்கிரன் வீட்டில் உச்சமடைவது, மனவலிமையும் விடாமுயற்சியும் வைரமான நெஞ்சுரமும் உடையவர்க்கு இல்லற லௌகீகவாழ்வு சித்திக்கும். போசனம் உடைமை சேரும். எதிர்த்தாரை வென்று புகழடைவர். பிறர்மதிக்க வாழ்வர்.

ஆயுள்காரகன் வலிவுடைமைகாரகன் மேடராசியாகிய செவ்வாய் வீட்டில் நீசம் அடைதல், செவ்வாய் அரசக்கிரகம், காரிய பொறுப்பாளி பூமிகாரகன் சீவாதாரபோஷகன். இந்த ஸ்தானத்தை கல்நெஞ்சு படைத்தவரோ மனவைரம் கொண்ட ஒருவரோ இரக்கமில்லாதவரோ நடத்தமுடியாது. அவர் தலைமை வந்தால் அதில் உள்ள யாவும் அழிவடையும். அதனுல்அவரும் அதோகதியடைவர் என்பதாகும்.

பெருஞ்செல்வம்

பொதுவாக கிரகங்களின் குணுதிசயங்களை உணர்ந்து நிற்கும்நிலைகளின் தன்மைகளை உணர்ந்து அதற்கிசைவாக மனிதன் தன்னை நடத்தப் பழக்கிக்கொண்டால் எந்தவிதமான கஷ்டத்தையும் வென்று நல்வாழ்வு வாழலாம். இதனுல் சோதிட சாத்திரம் நமக்குக் கிடைத்த பெரும் செல்வமென்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org